


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைபேசி: 10 நூலகம்
உதயன் பணிமனை
T|800|12057

# வணிக ஜோதி

# 20வது மலர்

## 2002 - 2003

வர்த்தக மாணவர் மன்றம் · கனகரத்தினம் · ம · ம · வித்தியாலயம்

இதழாசிரியர்கள்
செல்வன் : பூ. கோகுலன்
செல்வி : க. கஸ்தூரி

**வணிக மாணவர் மன்றம்**
யா / கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

பவளவிழா ஆண்டு
03.09.2002 03.09.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60.18

# VANIKA JOTHY


Volume : XX

Study Year : 2002 – 2003

Published on : 2002



Editors : Master. P.Kokilan
Miss. K. Kasthuri

Address :

Commerce Student Association
J/ Canagaratnam Madya Maha Vidyalayam
Jaffna.

Telephone No : 222-3456

E.mail Address : jcmmv @ slt net lk.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்மீட்புக்காகப் போராடி உயிர்நீத்த அனைத்துப் போராளிகளுக்கும், உள்நாட்டில் நடைபெற்ற யுத்தங்கள் காரணமாக உயிர்நீத்த அனைத்துப் பொதுமக்களுக்கும் இந்நூலை சமர்ப்பிக்கின்றோம்.

**வணிக மாணவர் மன்றம்**

**யாழ் / கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

ஜய ஜய கனகரத்தினம் வித்தியாலயம்
ஜகந்தனில் ஓங்குகவே!
ஜகந்தனில் ஓங்குகவே!

திருவார் கனகரத்தினம் பேரோ
தேசுறு கன்னங்கரா
உருவாக்கிய கழகம்
உருவாக்கிய கழகம் (ஜய ஜய)

செம்மையும் மஞ்சளும் நீலமும் சேர்ந்தே
சீரார் கொடி எடுப்போம்
சேர்ந்தே அடி நடப்போம்
சேர்ந்தே அடி நடப்போம்

(ஜய ஜய)

வீரம் வாய்மை அறமென மூன்றும்
விளங்கும் குணமாகி
வெற்றி வாழ்வுறுவோம்
வெற்றி வாழ்வுறுவோம்

(ஜய ஜய)

காவியம் ஓவியம் ஆம் கலை பலவும்
திவ்விய இசை நலனும்
காண்டகு குரு குலமாய்
ஆண்டுகள் வாழியவே

(ஜய ஜய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR PRINCIPAL



**V. MANICKAM**

B.A. (Econ), B Phill, Dip - in Edu, SLPS-I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசிச்செய்தி

வணிகக் கல்வியில் தனக்கென தனி இடத்தைப் பெற்றுத் திகழும் யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வர்த்தக மாணவர் மன்றம் வெளியீடு செய்யும் 20வது வணிகஜோதிக்கு நல்லாசிகள் கூறுவதையிட்டுப் பெருமை யடைகிறேன்.

எத்தனை இன்னல்கள் வந்தபோதும் "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதற்குப் பொருந்த தமது முயற்சியில் தனித்துவத்துடன் ஈடுபட்டுவரும் வணிக மன்றப் பொறுப்பாசிரியரையும், மன்ற நிர்வாகக் குழுவினரையும் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன். இம்மன்றம் ஒவ்வொரு ஆண்டும் தனது தொழிற்பாடுகளை அதிகரித்தே வந்துள்ளது. வணிகக் கல்வியை கற்கும் உயர்தர மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், வங்கி ஊழியர்களுக்கும் வணிக ஜோதியில் வெளியாகும் கட்டுரைகள் பேருதவி அளிக்கும் என்பதில் ஐயமில்லை. எமது பாடசாலை மாணவர்களினது, ஆசிரியர்களினது பூரண ஒத்துழைப்பினாலேயே வணிகஜோதி சிறப்பாக வெளிவருகின்றது. முக்கியமாக அவர்களின் நிதி உதவியை குறிப்பிடலாம். அவர்களின் இம் முயற்சி வருங்காலத்திலும் சிறப்புடன் தொடரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

வணிகஜோதியே! வளமான ஜோதியே! என்றும் நீ பொலிவுடன் திகழவும், மேன்மேலும் ஜொலிக்கவும் உனது நறுமணம் எங்கும் பரவவும் எனது பூரண நல்லாசிகள்!

வி. மாணிக்கம்
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயிராம்

# சமாதான சூழலில் ஒளிரும் ஜோதி!



மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஆயுத அடக்குமுறைக்குள் சிக்கி அவலப்பட்டும் குறிப்பாக கடந்த ஏழு ஆண்டுகளாக முற்றாக மூடிய பொருளாதாரத்தினுள் அடைபட்டும் கிடந்த யாழ் மக்கள், தற்போதைய சமாதான சூழலில் ஒரு திறந்த பொருளாதார நிலைக்கு முகங்கொடுக்கின்றனர். இத்தகைய ஒரு பின்புலத்தில் அரசியல், பொருளாதாரம், வணிகம் ஆகியவற்றில் மட்டுமன்றி சமூக, கலாச்சார அம்சங்களிலும் பாரிய மாற்றங்களை இம்மண் சந்தித்து வருகின்றது.

யுத்தத்தின் கொடுமையால் அவலப்பட்டுக் கிடந்த மக்களுக்கு, இத்திடீர் மாற்றங்கள் அதிர்ச்சிகளாகவே உள்ளன. நடப்பவை கனவா? நனவா? என்கின்ற ஒரு நிலை; ஒருவரை ஒருவர் கொன்று குவித்து இரத்த ஆற்றில் நீந்தியவர்கள், இன்று கைகோர்த்து நிற்கின்ற ஒரு நல்ல புறச்சூழல் தோன்றியுள்ளது.

வீடு வாசல்கள், உடமைகள் அனைத்தும் இழந்து ஏதிலிகளாக இருந்த மக்கள் மத்தியில், சமாதானசூழல் புதிய ஒரு சந்தை வாய்ப்பைத் தென்னிலங்கை முதலீட்டாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் தோற்றுவித்துள்ளது. மிகவும் போட்டிமிகுந்த செயற்திறன்வாய்ந்த சந்தையாக மாறிவரும் சூழல் காணப்படுகிறது. மாவீரர் வீரவணக்கச்சுவரொட்டிகளாலும், பின் தேர்தல் சுவரொட்டிகளாலும் நிறைந்திருந்த யாழ்ப்பாண மதிற் சுவர்கள் தற்போது கண்கவர் வர்ண விளம்பரங்களால் நிறைந்து காணப்படுகின்றமை இத்தகைய வர்த்தகப் போட்டியைப் பிரதிபலிக்கின்றன.

சமாதானம் நிலைநிறுத்தப்படும் போது யாழ் நோக்கி வெளிநாட்டு முதலீடுகளும் அதிகளவில் ஈர்க்கப்படும். எனவே வியாபாரம், கட்டிடவாக்கம், வங்கி, காப்புறுதி, போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்சாரம், கல்வி, சுகாதாரம், உல்லாசப் பிரயாணம், பொழுது போக்குவசதிகள் எனப் பலதுறைகளும் துரிதமாக வளரும் வாய்ப்புக்கள் இங்கு காணப்படுகிறது. இத்துறைகளில் அதிகளவு வேலை வாய்ப்புக்கள் உருவாகும் போது வணிக மாணவர்கள் இலகுவில் வேலை பெறக்கூடியதாகவும், உயர்வருமானம் ஈட்டக்கூடியதாகவும் இருக்கும். இது வணிக மாணவர்களுக்கு ஊக்கமளிப்பதாகும்.

வணிகத்துறையில் ஏற்பட்டு வரும் விரைவான மாற்றங்களை மாணவர்களும் ஏனையோரும் அறிந்து பயன்பெறுவதற்கு இந்த வணிக ஜோதி உதவுகின்றது. எனவே இவ்வாறான வெளியீடுகளுக்கு சகலரும் தொடர்ந்து ஆதரவு வழங்கவேண்டியது காலத்தின் தேவையாகும். இந்த ஜோதியின் வெளியீட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த அதிபர், உபஅதிபர், சக ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள், ஆசிச்செய்தி வழங்கியோர், ஜோதிக்கு ஒளியூட்டிய கட்டுரையாளர்கள், நிதிஉதவி அளித்தோர், அழகுற அச்சிட்டு உதவிய கங்கை ஓவ்செற் பிறின்டேர்ஸினருக்கும் உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

நிறைவாக தமது விடாமுயற்சியால் உறுதியுடன் செயற்பட்டு இம்மலரினை நல்லமுறையில் வெளியிடும் என் அன்புக்குரிய மாணவச் செல்வங்களின் முயற்சியைப் பாராட்டுவதோடு, அவர்களின் எதிர்காலம் ஒளிமயமானதாக வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

பவளவிழா ஆண்டில்
பகலவனாம் வணிகஜோதியே!
பரம் பொருள் அருளால்
பல்லாண்டு வாழ்க! வளர்க!

**வே. கருணாகரன்**
**மன்றப் பொறுப்பாசிரியர்**
**வணிக மாணவர்மன்றம்**

- ஜெய்சாய்ராம் - ஓம் சாயிராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

*யாழ் / கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் வணிக மன்றத்தின் 20ஆவது வெளியீடான வணிகஜோதி சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.*

பாடசாலை வரலாற்றிலே வணிகத்துறையின் முக்கியத்துவம் அங்கு கற்று வெளிப்போந்த மாணவர்கள் பலர் இன்று வணிகம் முகாமைத்துவம் போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளில் முதன்மை வகிப்பதே எடுத்துக் காட்டாக உள்ளது. தொடர்ந்து வருடாவருடம் இம் மன்றத்தினரின் வளர்ச்சியில் இச் சஞ்சிகையின் வெளியீடு படிக்கற்களாகவே அமைகின்றன. பல்வேறு அம்சங்-களைக் கருத்திற் கொண்டு கருத்தாழமும், சொன்நயமும் ஒருங்கே கொண்ட பல்வேறுபட்ட ஆக்கங்களைக் கொண்டு வெளிவந்து மாணவர், ஆசிரியர், கற்றோர், மற்றோருக்கு வழிகாட்டும் வகையில் அமைந்துள்ளது. இவ் வணிகஜோதி என்றும் வளமாக மணம்வீச எனது நல்வாழ்த்துக்கள்

**திருமதி. செ. மகாலிங்கம்**
**கல்விப்பணிப்பாளர்**
**யாழ். வலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றத் தலைவரின் பார்வையில் இருந்து...



எமது கல்லூரியின் வணிக மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படுகின்ற வணிக ஜோதி எனும் சஞ்சிகை தனது 32ஆவது அகவையிலே 20வது மலராக வெளியிடுவதையிட்டு தலைவர் என்றவகையில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அகில இலங்கை ரீதியிலும் பாடசாலை ரீதியிலும் அதிக எண்ணிக்கையான பயன் மிக்க வணிகச் சஞ்சிகைகளை வெளியிட்ட பெருமை எமது மன்றத்திற்கே உண்டு. அந்த வகையில் இம்முறையும் இம்மலர் சிறந்த ஆக்கங்களை தன்னுள் உள்ளடக்கிவெளிவருகின்றது.

மலர்ந்திருக்கும் இப்புதிய நூற்றாண்டினை சந்தித்துக் கொண்டிருக்கும் இளைய தலைமுறையினர் வேறுபட்ட யதார்த்த உலகில் எம்மைச் சூழவுள்ள நவீன வர்த்தகமய உலகில் ஏற்படும் மாற்றப் போக்குகளை தெளிவாக இனங்காண்பதும் முக்கியமானதாகி விட்டது. வர்த்தக மாணவர்களைப் பொறுத்த வரையில் வரையறுக்கப்பட்ட பாடத்திட்டத்திற்குள் வினாக்கள் அமையப் போவதில்லை. எனவே மேலதிகமாக மாணவர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளும் முகமாக இவ் ஜோதி வெளிவருகின்றது.

இம் மலர் வெளியீட்டிற்கு எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவியும் ஊக்கமும் அளித்த எமது கல்லூரி அதிபர், மன்றப் பொறுப்பாசிரியர், மற்றும் ஏனைய துறைசார் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், மற்றும் நலன்விரும்பிகள் அனைவரும் எம்முள்ளத்தில் நீங்காது நிலைத்திருப்பர். எனக் கூறிக் கொள்வதோடு நிறைவாக வாழ்க்கைக் காலங்களின் முக்கிய காலப்பகுதியான கல்லூரி வாழ்க்கைக் காலமானது பசுமையான நினைவுகளை கலைத்தாயின் வீணையின் அலைவரிசையில் மீட்டு எல்லாம் வல்ல கலைத் தாயின் அருள் வேண்டி நிற்கின்றேன்.

"வாழ்க வர்த்தக மாணவர் ஒன்றியம்
வளர்க அதன் பணிகள்
ஓங்குக வணிக ஜோதி"

நன்றி.

யா / கனகரத்தினம்.ம.ம.வி
யாழ்ப்பாம்
2002-10-28

பா.கஜேந்திரன்
தலைவர்
வணிக மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றச் செயலாளரின்

## உள்ளத்திலிருந்து.....



எமது கல்லூரியின் வணிக மாணவர் மன்றத்தினால் ஆண்டு தோறும் வெளியிட்டு வரும் வணிக சஞ்சிகையான 'வணிக ஜோதி' அகில இலங்கை ரீதியாகவும் பாடசாலை ரீதியாகவும் அதிக எண்ணிக்கையான சஞ்சிகையை வெளியிட்ட பெருமை கொண்டது. அந்த வகையில் இவ் ஆண்டு "வணிகஜோதி" இதழின் 20வது மலரினை வெளியிடுவதையிட்டு மன்றச்செயலாளர் என்ற வகையில் பெருமையடைகின்றேன்.

எமது கல்லூரியின் வணிக மாணவர் மன்ற வெளியீடான "வணிகஜோதி" இதழின் 20வது மலரிற்கு உதவிய எமது கல்லூரி அதிபர், மன்றப்பொறுப்பாசிரியர், துணைக் காப்பாளர்கள், பழைய மாணவர்கள். ஏனைய துறைசார் ஆசிரியர்கள், சக மாணவர்கள், விளம்பரதாரர்கள், நலன் விரும்பிகள் அனைவர்க்கும் என்னுள்ளம் கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்

இன்றைய வணிக உலகில் எமது மன்றத்திற்கும் நூலுக்கும், ஒரு தனி இடம் உண்டு எனக் கூறினால் மிகையாகாது. ஏனெனில் இன்றைய வணிக உலகில் உடனுக்குடன் மாறும் விடயங்களை வெளியிட்டு மாணவர்களின் தேவைகட்கு பெரும் பங்காற்றி வருகின்றது என்ற ரீதியில் பெருமையடைகின்றேன்.

இவ்வாறு சஞ்சிகைகளைத் தொடர்ந்து வெளியிட்டு எமது மன்றமும் "வணிக ஜோதி"யும் வளர்ந்து வணிக மாணவர் சமூகத்திற்கு சிறந்த சஞ்சிகைகளை வழங்கி கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வணிகத் துறையின் வளமிக்க ஜோதியே!
வையகத்தில் உன் பணி என்றென்றும் தொடர்கவே!

நன்றி

யா/கனகரத்தினம் ம.ம.வி
யாழ்ப்பாணம்
2002-10-28

த. துஷ்யந்தி
செயலாளர்
வணிக மாணவர் மன்றம்



# இதழாசிரியரின்

# உள்ளத்திலிருந்து

எமது கல்லூரியின் வணிக மாணவர் மன்றத்தினால் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து வெளியிடப்பட்டு வரும் "வணிக ஜோதி" சஞ்சிகையின் 20வது மலரினை உங்களின் கரங்களில் தவழ விடுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பல இன்னல்கள் மத்தியிலும் எமது முயற்சியினை இன்முகத்துடன் வரவேற்று ஆதரவளித்து ஊக்கமளித்த எமது கல்லூரி அதிபர், மன்றப் பொறுப்பாசிரியர், துணைக் காப்பாளர், எமது பழைய மாணவர்கள் அனைவருக்கும், கேட்டவுடன் ஆக்கங்களைத் தந்துவிய இத் துறைசார் ஆசிரியர்கள், சகமாணவர்களுக்கும் நிதி வசதியளித்த ஆசிரிய ஆசான்கள், என் சக மாணவர்கள், பழைய மாணவர்கள், விளம்பரதாரர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எமது கல்லூரியின் முன்னைய வணிகத் துறைசார் மாணவர்கள் வெளியிட்ட "வணிக ஜோதி" வெளியீட்டுப்பணிகளை நாம் முன்னெடுத்துச் செல்கின்ற வேளையில் இப் பணிகளில் இனி வருகின்ற மாணவர்களும் முழு மூச்சோடு ஈடுபட வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

எமது கல்லூரி வணிகத் துறைசார் ஆசிரியர்களின் கனவுகள் நனவாகிக் கொண்டு வருகின்ற இக் காலப் பகுதியில் எம் வணிக மலரின் 20வது ஜோதியை ஏற்றி வைப்பதில் மனம் பூரிப்படைகின்றேன்.

நன்றி

யா / கனகரத்தினம் ம.ம.வி
யாழ்ப்பாணம்
2002-10-28

பூ. கோகிலன்
இதழாசிரியர்
வணிக மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகக் குழு - 2003

| | |
|---|---|
| காப்பாளர் : | திரு. வி. மாணிக்கம்<br>B.A (Econ),. B.Phill, Dip. in Ed, SLPS – 1 |
| துணைக்காப்பாளர் : | திரு. வே. கருணாகரன்<br>திருமதி. பா. கனகரத்தினம் |
| மன்றப் பொறுப்பாசிரியர் : | திரு. வே. கருணாகரன் |
| தலைவர் : | செல்வன். பா. கஜேந்திரன் |
| உபதலைவர் : | செல்வன். தி. மயூரன் |
| செயலாளர் : | செல்வி. தி. துஸ்யந்தி |
| உபசெயலாளர் : | செல்வி. க. தனுஜா |
| பொருளாளர் : | செல்வன். ச. பிரசன்னா |
| பத்திராதிபர்கள் : | செல்வன். பூ . கோகிலன்<br>செல்வி. க. கஸ்தூரி |
| வியாபார முகாமையாளர் : | செல்வன். க. கமலராஜா |
| நூலகர் : | செல்வி. செ. கிருஷாந்தினி |
| உதவி நூலகர் : | செல்வன். த. கஜதீபன் |
| செயற்குழு உறுப்பினர்: | செல்வி. கு. ஜீவிகா |
| கணக்காய்வாளர் : | செல்வன். சி. சுரேஸ்குமார்<br>திரு. வி. ஞானசேகரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாக குழு - 2002

காப்பாளர் : திரு. வி. மாணிக்கம்
B.A (Eco),. B.Phill, Dip.in Ed, SLPS – I

துணைகாப்பாளர்கள் : திரு. வே. கருணாகரன்
திருமதி. பா. கனகரட்னம்

மன்றப் பொறுப்பாசிரியர் : திரு. வே. கருணாகரன்

தலைவர் : செல்வன். பா. பாலரவி

உபதலைவர் : செல்வன். தி. செல்வக்கண்ணன்

செயலாளர் : செல்வன். த. தவேந்திரன்

உபசெயலாளர் : செல்வி சி. தர்மகௌரி

பொருளாளர் : செல்வன் குபேரன்

பத்திராதிபர்கள் : செல்வன் க. துஜீஸ்காந்
செல்வி க. கௌசிகா

வியாபார முகாமையாளர் : செல்வன் தெ. பவனீதன்

நூலகர் : செல்வி ச. கஜந்தினி

குழு உறுப்பினர் : செல்வி ச. ரணித்தா

செயற்குழு உறுப்பினர்கள்: செல்வன் இ. யசிந்தன்
செல்வன் சி. மோகனதாஸ்
செல்வன் பா. கஜேந்திரன்

கணக்காய்வாளர் : திரு. வி. ஞானசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகக்குழு - 2003



இடமிருந்து வலமாக

இருப்பவர்கள் : செல்வி. தி.துஸ்யந்தி (செயலாளர்), திரு. வே.கருணாகரன் (மன்றப்பொறுப்பாசிரியர்), செல்வன். பா. கஜேந்திரன் (தலைவர்), திரு. வி. மாணிக்கம் (அதிபர்), செல்வன். ச. பிரசன்னா (பொருளாளர்).

நிற்பவர்கள் : செல்வி. கு. ஜீவிகா, செல்வி. க. கஸ்தூரி (இதழாசிரியர்), செல்வன். த. கஜீபன், செல்வன்.பூ.கோகிலன் (இதழாசிரியர்), செல்வன்.சி.சுரேஸ்குமார், செல்வன்.க.கமலராஜா, செல்வன். தி. மயூரன், செல்வி செ. கிரிஷாந்தினி, செல்வி. க. தனுஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகக்குழு - 2002



இடமிருந்து வலமாக

இருப்பவர்கள் : திரு.வே.கருணாகரன் (மன்றப் பொறுப்பாசிரியர்), செல்வன்.பா.பாலரவி (தலைவர்), திரு.வி.மாணிக்கம் (அதிபர்)

நிற்பவர்கள்: செல்வி. ச.கஜந்தினி, செல்வன். தெ.பவனீதன், செல்வன். க. துஜிஸ்காந் (இதழாசிரியர்), செல்வன்.சி.மோகனதாஸ், செல்வன் த. தவேந்திரன் (செயலாளர்), செல்வி. க. கௌசிகா (இதழாசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழக
## அனுமதி பெற்றோர் - 1999



| முகாமைத் துறை | பெறுபேறுகள் |
|---|---|
| 1. செல்வன் கி. பிரசாந்தன் | 3AC |
| 2. செல்வன் ப. மதியழகன் | 2ABC |
| 3. செல்வி ம. மீரா | 3AC |
| 4. செல்வி யோ. யசிந்தினி | A 3B |
| 5. செல்வன் இ. சுஜீந்திரன் | 2ABC |
| 6. செல்வி க. சுஜேஸ்கா | A 3B |

| வர்த்தகத்துறை | பெறுபேறுகள் |
|---|---|
| 1. செல்வன் ப. பாஸ்கரன் | AB2C |
| 2. செல்வன் த. காண்டீபன் | AB2C |
| 3. செல்வன் சோ. உத்தமன் | A2BC |
| 4. செல்வி பா. கௌரி | A2BC |
| 5. செல்வி கி. பிரியா | AB2C |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக்கழக
## அனுமதி பெற்றோர் - 2000



| முகாமைத் துறை | பெறுபேறுகள் |
|---|---|
| 1. செல்வன் கெ. சிவதர்ஷன் | 2AB |
| 2. செல்வன் வி விஜயேந்திரன் | ABC |
| 3. செல்வி ந. கஜந்தினி | A2B |

| வணிகத்துறை | பெறுபேறுகள் |
|---|---|
| 1. செல்வன் S. நேசராஜா | 2AB |
| 2. செல்வி S. வனிதா | 2AB |

- இறைவனின் அருளும் மனிதனின் முயற்சியும் சேர்ந்தால் நல்லொளி கிட்டும்.
- அன்புடனே நீங்கள் கல்வி பயின்று இவ்வுலகுக்கு நல்லது செய்யுங்கள்.
- எப்போதும் இறை சிந்தனையிலே இருப்பாரிடம் எல்லாவித நற்குணங்களும் குடிகொள்ளும்.
- மனதை ஒருமுகப்படுத்தினால் ஆற்றலும், திறமையும் அதிகரிக்கும்.

- பாபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சியின் திறவுகோலே
# வணிகஜோதியே எழுந்து வருக!

*கனகரத்தினம் மத்திய மகா வித்தியாசாலையில்*
*காலந்தோறும் மலரும் வணிக ஜோதியே வருக!*
*மாணவர் கல்வியில் உயரிய மாற்றங் காண*
*மாண்புகள் ஆயிரம் சுமந்து வணிகஜோதியே வருக!*

*எழுச்சியின் திறவுகோலாய் எழுந்து வருக!*
*எண்ணத்தின் நாற்றாங்காலாய் எழுந்து வருக!*
*விழிப்புற்ற கல்வித் தாயகத்தின் தூதாய் வருக!*
*விரும்பிடும் ஆக்கங்கள் சுமந்து வருக!*

*நிறைவுக்கோர் கல்விச் சுடராய் விளங்கு*
*நீள நினைத்திடும் நெடுமறைப் பொருளாய் விளங்கு*
*துறைதொறும் அறிவு பரப்பிடும் சோதியாய் விளங்கு*
*தொன்மையாம் கல்வித் தருமம் காத்து விளங்கு*

*கருணா கரனின் பொறுப்பில் வளரும் காரிகையே*
*கண்ணைச் சிமிட்டி காதல் காட்டும் தேவதையே*
*மருளா மனதையும் மருளவைக்கும் மோகினியே*
*மாணவர் மனதில் இடம் பிடித்த வணிகத்தாளே வாழி!*

**ஆக்கியோன் :**

கவிமாமணி, மதுரகவி. காரை. எம். பி. அருளானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதியின் கதிர்கள்

## வணிகக்கல்வி


| | | |
|---|---|---|
| 1. | நிறுவனங்களுக்கு கையளிப்பு ஏன் அவசியம்? எந்தளவிற்கு | 01 - 06 |
| 2. | பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு | 07 - 10 |
| 3. | புதிய வரைவிலக்கணங்கள் | 11 - 14 |
| 4. | கட்டுப்படுத்தல் | 15 - 19 |


## பொருளியல்


| | | |
|---|---|---|
| 1. | அதிர்ச்சிகளின் பேரண்டப் பொருளாதாரத் தாக்கம் - 2001 இல் இலங்கை பற்றிய ஒரு நோக்கு | 21 - 25 |
| 2. | இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் | 26 - 29 |
| 3. | இலங்கையின் குடிப்பரம்பல் மாற்றங்கள் - 2001 தொகைமதிப்பு பற்றிய ஒரு நோக்கு | 30 - 32 |
| 4. | இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய சந்தை | 33 - 37 |
| 5. | இலங்கையில் மூலதனக் கணக்கினைத் தாராளமயமாக்கும் வாய்ப்பும் - இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும் | 38 - 44 |


## கணக்கீடு


| | | |
|---|---|---|
| 1. | காசுப்பாய்ச்சல் | 45 - 48 |
| 2. | பெறுமானத்தேய்வுக் கணக்கீட்டு நடைமுறை | 49 - 54 |
| 3. | இலங்கை கணக்கீட்டு நியமம் - 36 | 55 - 58 |
| 4. | மேந்தலைக் கிரயங்கள் | 59 - 68 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# I. வணிகக்கல்வி

- நிறுவனங்களுக்கு கையளிப்பு ஏன் அவசியம்? எந்தளவிற்கு?
- பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு
- புதிய வரைவிலக்கணங்கள்
- கட்டுப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனங்களுக்கு கையளிப்பு ஏன் அவசியம்? எந்தளவிற்கு?

1. ஒரு சிறிய தனிவியாபார நிறுவனத்தை எடுத்து நோக்கினால் அதிலே வேலைகள் குறைவாக இருப்பதினால் அவற்றை உடமையாளரும் மற்றும் ஒரு அல்லது சில தொழிலாளர்களும் நிறைவேற்ற முடியும். ஆனால் தனியொருவருக்குச் சொந்தமான ஒரு பெரிய உற்பத்தி நிறுவனத்தை நோக்கினால் பல வேலைகள், நடைமுறைகள் பெரிய அளவில் காணப்படும். குறிப்பாக உற்பத்தி செய்தல், கொள்வனவு செய்தல், சந்தைப்படுத்தல், ஆளணியை முகாமைசெய்தல், நிதி முகாமை, ஆராட்ச்சிப் பணிகள் போன்ற பல வேலைகள் இடம்பெறும். இவற்றையெல்லாம் அதன் உடமையாளராகிய தனியொருவரால் சிறப்பாக மேற்கொள்ள முடியாது ஏனெனில் பாரிய அளவிலான எல்லா வேலைகளிலும் அவரிற்கு போதிய திறமையில்லாமை, நேர வரையறை, இயலாமை போன்ற தடைகள் காணப்படும். இதேபோன்று பெரிய கம்பனிகளிலும் பல செயற்பாடுகள் பெரிய புவியியல் பரப்பில் சில சமயங்களில் பல நாடுகளை உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படுகின்றது. எனவே நிறுவன உடமையாளர் அல்லது அதன் தலைவர் அந்த நிறுவனத்தின் எல்லா வேலைகளையும் தனித்து நிறைவேற்ற முடியாதுள்ளது. அவர் தனது வேலைப் பொறுப்புக்களைத் தன் கீழ் பணிபுரியும் ஏனைய பணியாளர்களிடம் பகிர்ந்து கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகின்றது. அதுவே நடைமுறையிலும் இடம் பெற்று வருகின்றது. இந்த வகையில் நிறுவனங்களில் கையளிப்பின்றி செயற்பட முடியாத நிலை ஏற்படுகின்றது.

1. பெரிய நிறுவனங்களில் எவ்வகை செயற்பாடுகள் இடம்பெறுகின்றன?

---

2. கையளிப்பு (Delegation) என்றால் என்ன என்பதற்கு பல்வேறு வல்லுனர்கள் பல விளக்கங்களை அளித்துள்ளனர். அவர்களில் பலர் பின்வருமாறு கூறுகின்றனர். "ஒரு தலைவர் தாம் செய்யவேண்டிய வேலையைச் செய்வதற்கு போதிய காலம் இல்லாமையால் கீழ்ப் பணியாளர்களிடம் அவற்றைச் செய்யுமாறு பணித்தல் கையளிப்பாகும்." மற்றுமொரு வரைவிலக்கணம் பின்வருமாறு கூறுகின்றது "தனிப்பட்டவர் அல்லது குழு இன்னொரு தனிப்பட்டவருக்கு அல்லது குழுவிற்கு குறித்த செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குமான உரிமையை வழங்குதல் கையளிப்பாகும்." உண்மையில் நிறுவனத்தில் ஊழியர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுவதும் அவர்களிடம் என்ன செய்ய வேண்டும் என்பதை எதிர்பார்ப்பதும் கையளிப்பில் உள்ளடக்கப்படுகின்றது.



B.S பசில்ஜெனதாஸ் B.B.A
(கல்லூரி பழைய மாணவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.அ. கையளிப்பு என்பதை வரைபறுத்துக் கூறுக?

ஆ. கையளிப்புத் தொடர்பாக நிறுவனம் ஊழியர் என்னத்தை எதிர் பார்க்கும்?

---

**கையளிப்பின் முக்கிய கூறுகள்**

3. கையளிப்பு மூன்று முக்கிய கூறுகளைக்கொண்டுள்ளது.

- மேற்பார்வையாளர்களுக்கு பணிகளை ஒதுக்குதல் (Allocation of duties)
- அதிகாரங்களை வழங்குதல் (Delegation of authority)
- பொறுப்புக்களை ஏற்படுத்துதல் (Creation of responsibility)

1. கையளிப்பின் கூறுகள் எவை?

---

4. கையளிப்பு நடவடிக்கையில் முதலில் பணிகளை ஒதுக்குதல் வேண்டும். ஒரு முகாமையாளரின் திறமைக்கு மேற்படவுள்ள வேலைகளை கீழ் பணியாளர்களிடம் பகிர்ந்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே அந்த வேலைகளைப் பல பிரிவுகளாகப் பிரித்து எப்பிரிவை தாம் செய்ய இயலும் என்றும் எப்பிரிவுகளை கீழ் பணியாளர்களிடம் ஒப்படைப்பது எனவும் தீர்மானிக்கப்படுவதே பணிகளை ஒதுக்கிக் கொடுத்தலாகும்.

1. பணிகளை ஒதுக்குதல் என்றால் என்ன?

---

5. கையளிப்பில் அடுத்த நடவடிக்கையாக அதிகாரத்தை வழங்குதல் இடம்பெறும். கையளிப்பைப் பெற்ற கீழ் பணியாளர் தன்னுடைய வேலைகளைச் செம்மையாகச் செய்து முடிக்கவேண்டுமாயின் அவர் கீழ் பணியாளர்களை கட்டுப்படுத்தும் உரிமையினைப் பெற்றிருத்தல் அவசியமாகின்றது. எனவே உயர்மட்ட ஊழியர் கையளிப்பு செய்யப்படவிருக்கும் கீழ் பணியாளருக்கு அவரது பணிதொடர்பான முழு அதிகாரத்தையும் மாற்றிக் கொடுத்தல் இன்றியமையாதது. அதிகாரம் இன்றி வேலைகளைச் செய்ய இயலாது போய்விடும். என்றபோதிலும் இறுதி அதிகாரம் உயர் முகாமையாளரிடமே காணப்பட வேண்டும்.

1. ஊழியர்களுக்கு ஏன் அதிகாரம் அவசியம்?

---

6. அதிகாரக்கையளிப்பு ஒரு வழிப்பாதையல்ல. அதிகாரக் கையளிப்பும் பொறுப்புக்களை ஏற்படுத்துதலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாகும். ஒரு பணியாளர் அதிகாரத்தைப் பெற்றதும் அவர் குறிப்பிட்ட கடமைகளை சரியாக நிறைவேற்றவேண்டிய பொறுப்பும் ஏற்படுகின்றது.

1. ஓர் ஊழியருக்கு எப்பொழுது பொறுப்பு ஏற்படுகின்றது?

---

**அதிகாரக் கையளிப்பின் நோக்கங்கள்**

7. கீழ்க்கானும் நோக்கங்களை அடையும் வகையில் கையளிப்பு இடம்பெறுகின்றது.

- குறைந்தளவு முக்கியத்துவம் உடைய நாளாந்த நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானங்களை எடுப்பதற்கு தம்கீழ் உள்ள பணியாளர்களிடையே அதிகாரங்களைப் பகிர்ந்த ளித்து அவர்களுக்கிடையே பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்தல்.
- ஊழியர் முகாமையாளர்கள் முக்கியமான விடையங்கள் தொ-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டர்பான தீர்மானங்களை எடுப்பதில் அதிக கவனம் செலுத்தக் கூடியதாக இருக்கும்.

- விரைவாகத் தீர்மானங்களை எடுக்கக் கூடியதாக இருப்பதுடன் விரைவாகத் தொழிற்படக் கூடியதாகவும் இருக்கும்.
- மிகச் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.
- நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உதவுதல்.

1. கையளிப்பின் நோக்கங்கள் எவை?

## அதிகாரமும் பொறுப்பும்

8. ஒரு நிறுவனம் அதன் நோக்கத்தை அடைவதற்கு பல்வேறு கருமங்களை ஊழியர்கள் ஊடாகச் செய்யவேண்டியிருக்கும். அதற்கு அதிகாரம் தேவைப்படுகின்றது அதிகாரமானது பல்வேறு பதவிகளுக்கும் சட்ட பூர்வமாக கிடைத்திருக்கும் அம்சமாகக் கொள்ளலாம். அதிகாரத்தை ஒருவர் மற்றொருவருக்கு மாற்றிக்கொள்ளவும் முடியும். நிறுவன முகாமையில் அதிகாரம் என்பது கீழ் பணியாளர்களின் நடத்தைகளைத் தீர்மானிக்கும் உரிமை எனக் கூறுகின்றனர். கென்றி பயோலின் கருத்தின்படி அதிகாரம் என்பது "கட்டளைகள் கொடுக்கும் உரிமையினையும் கீழ்படிவைப் பெறும் சக்தியையும் குறிக்கும்." மற்றுமொரு வரைவிலக்கணம் பின் வருமாறு கூறுகின்றது ஒரு விடயம் தொடர்பாக உயர்மட்ட முகாமையின் அங்கீகாரமின்றி தீர்மானம் எடுக்கும் உரிமை அதிகாரமாகும். உண்மையில் அதிகாரம் என்றபதும் பின்வருவனவற்றிற்கான உரிமையைக் குறித்து நிற்கின்றது.

- தீர்மானங்களை எடுக்கும் உரிமை
- கட்டளைகளை வழங்கும் உரிமை
- கீழ் பணியாளர்களை கட்டளைகளுக்கு அமைவாக நடக்க வைக்கும் உரிமை
- வளங்களைப் பயன்படுத்தும் உரிமை

1. அதிகாரம் எனப்படுவது யாது?

9. பொறுப்பு எனப்படுவது கீழ் பணியாளர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை சரியாகச் செய்து முடிக்கவேண்டியிருத்தலைக் குறிக்கின்றது. இதனைப் பின்வருமாறு வரையறுத்துக் கொள்ளலாம் "ஒப்படைக்கப்பட்ட குறித்த கருமங்களை நிறைவேற்றுதல் தொடர்பான செயற்பாடுகளின் தேவை பொறுப்பு ஆகும்." அதிகாரமும் பொறுப்பும் ஒன்றுடன் ஒன்று இணைந்த இரு எண்ணக்கருக்களாகும். குறித்த ஒருவருக்கு அதிகாரம் கிடைத்த பின்னர் அதனுடன் தொடர்புபட்ட பொறுப்பிற்கு அவர் உட்பட்டு விடுகின்றார். அல்லது தனக்குக் கிடைத்த அதிகாரத்திற்கு சமமான பொறுப்பை அவர் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். ஆகவே முகாமையில் அதிகாரமானது பொறுப்பின் சமமானதன்மையினால் உறுதிப்படுத்தப்படுகின்றது என்றாலும் அதிகாரங்களை ஒப்படைப்பது போல் பொறுப்பினை முழுமையாக ஒப்படைக்க முடியாது.

1. அ. பொறுப்பு எனப்படுவது யாது?
   ஆ. ஏன் பொறுப்புக்களை ஒப்படைக்க முடியாதெனக் கூறுவர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. முகாமையில் பதிலளிக்கத்தக்க பொறுப்பு (Accountability) என ஒன்றும் பேசப்படுகின்றது. இது ஒரு முகாமையாளர் தனது செயற்பாடுகளுக்கு மட்டுமல்லாமல் தம்கீழ் பணிபுரியும் ஊழியர்கள் விடும் தவறுகளுக்கும் பதில் சொல்லவேண்டிய நிலையிலிருப்பதைக் குறிக்கின்றது. இதனால் முகாமையாளர் தமது செயற்பாடு களிலும் கீழ் பணியாளர்களின் செயற்பாடுகளிலும் அதிக கவனத்துடன் செயற்படுவர்.

1. பதிலளிக்கத்தக்க பொறுப்பு எனப்படுவது யாது?

## கையளிப்புத் தொடர்பான தடைகள்

11. முகாமையாளர் கையளிப்பை மேற்கொள்வதில் சில தடைகள் ஏற்படுகின்றன. இது கையளிப்பை மேற்கொள்ளுவதில் உள்ள தயக்கமாகவோ அல்லது கையளிப்பை ஏற்பதிலுள்ள தயக்கமாகவோ காணப்படலாம். பொதுவாக முகாமையாளர் கையளிப்பை மேற்கொள்ளுவதில் தயங்குவதற்கு பின்வருபவற்றைக் கூறலாம்.

- கீழ் பணியாளர்களிலுள்ள நம்பிக்கைக் குறைவு
- கீழ் பணியாளர்களிடம் போதியளவு அனுபவம், திறன் காணப்படாமை
- கையளிப்பின் மூலம் முகாமையாளர் தனது வலுவை இழக்க நேரிடலாம் என்ற தயக்கம்

மறுபுறத்தில் கையளிப்பை ஏற்பதில் தயங்குவதற்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

- ஆபத்துக்களை ஏற்க நேரிடும் என்பதால்
- விமர்சனங்களை ஏற்க நேரிடும் என்பதால்
- பணியாளரிடம் போதிய தன்நம்பிக்கையில்லாமை

மேற்கூறப்பட்டவாறான தடைகள் காணப்படுதல் முகாமையின் நோக்கத்தை அடைவதில் இடைஞ்சலாகக் காணப்படும். எனவே அத்தகைய தடைகளை நீக்கி செயற்படுவதற்கு நவடிக்கை எடுக்க வேண்டும்.

1. கையளிப்புத் தொடர்பான தடைகளை விபரிக்குக.

## மையப்படுத்தலும் பரவலாக்கலும்

12. ஒரு நிறுவனத்தில் பல பணியாளர்கள் காணப்படுவர் இவர்களில் முகாமையாளர்களும் முகாமையல்லா ஊழிர்களும் அடங்குவர். முகாமையாளர்கள் என்பதில் பல்வேறு அதிகாரத்தன்மை உள்ளவர்கள் காணப்படுவர். இந்த முகாமைப் பணியாளர்களின் அதிகாரம் படிமுறைச் சங்கிலி அமைப்பில் காணப்படும். இங்கு ஓர் நிறுவனத்தின் உயர்மட்ட முகாமை கூடியளவு அதிகாரங்களைத் தான் வைத்துக் கொண்டு குறைந்தளவு அதிகாரங்களை கீழ் பணியாளர்களுக்கு கையளித் திருக்குமாயின் அதனை மையப்படுத்தல் (Centralisation) என அழைப்பர். நடைமுறையில் படை அமைப்புக்களில் இந்த அதிகார மையப்படுத்தல் போக்குக் காணப்படுகின்றது. பொதுவாக வியாபார நடவடிக்கைகளில் இத் தன்மை அரிது என்றே கூறலாம். அதிகாரம் மையப்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பட்ட நிறுவனத்தில் பின்வரும் நன்மைகளை அவதானிக்கலாம்.

• நிறுவன நோக்கத்தை அடை-வதில் ஒற்றுமைத் தன்மை காணப்படும்.

• முகாமை கூடிய கட்டுப்-பாட்டைப் பேணமுடியும்.

• தீர்மானங்கள் ஒரு தரப்பின-ரால் மட்டும் மேற்கொள்ளப்படுவ-தால் இயைபாக்கலை மேற்கொள்-வது சுலபம்.

• தீர்மானங்கள் சிரேஷ்ட முகா-மையாளரால் மேற் கொள்ளப்படு-வதல் தரமானதாகக் காணப்படும்.

• இந்த முறையில் நிர்வாகச் செலவைக் குறைவாகப் பேணலாம்.

• மையப்படுத்தப்பட்ட கட்டுப்-பாட்டின் மூலம் ஒழுங்கு முறையைப் பேணலாம்.

1. மையப்படுத்தல் எனப்படுவது யாது? அதன் நன்மைகள் எவை?

---

13. அதிகாரப் பரவலாக்கல் என்-பது அண்மைக்காலத்தில் இலங்-கை அரசியலில் அதிகம் பேசப்பட்டு வருவதைக் காணலாம் ஆனால் சில நிறுவனங்களில் அது கடைப்பிடிக்கப்பட்டு வருகின்-றது. பரவலாக்கல் என்பதை கீழ்வருமாறு வரையறுத்துக் கூற-லாம். "நிறுவனத்திலுள்ள உயர்மட்ட முகாமை தான் குறைந்தளவு அதிகாரத்தை வைத்துக் கொண்டு கீழ் பணியாளர்களிடம் கூடியளவு அதிகாரத்தை கையளித்திருந்தால் அதனைப் பரவலாக்கல் (Decentra-lisation)" என்பர். பரவலாக்கல் தன்மையுள்ள நிறுவனத்தில் கீழ் காணும் நன்மைகளை அவதானிக்-கலாம்.

• உயர்மட்ட முகாமையின் வே-லைப்பழு குறைவடையும்.

• கீழ் பணியாளர்களை ஊக்கு-விக்க உதவும்.

• அதிகாரக் கையளிப்பினால் விரைவாகத் தீர்மானங்களை நிறை-வேற்றவும் நடைமுறைப்படுத்தவும் முடியும்.

• கனிஷ்ட முகாமையாளர்களை பயிற்றுவிக்க உதவும்.

• தகவல்களை விரைவாகப் பரி-மாற்ற உதவும்.

• நிறுவன நடவடிக்கைகளை விரி-வுபடுத்த உதவும்

1. பரவலாக்கல் எனப்படுவது யாது? அதன் நன்மைகள் எவை?

---

14. மையப்படுத்தலோ அல்லது பரவலாக்கலோ கோட்பாடு என்ற முறையில் தனித் தனியாக நிறு-வனங்களில் பயன்படுத்த முடியாது. ஒன்றில் ஓர் நிறுவனம் கூடியளவு மையப்படுத்தல் தன்மையைச் சார்ந்ததாகவோ அல்லது பரவ-லாக்கல் தன்மையைச் சார்ந்த தாகவோ கணப்படலாம். மையப்படு த்தலும் பரவலாக்கலும் கீழ் வரும் தன்மைகளைப் பொறுத்து அமை-கின்றன.

• நிறுவனத்தின் அளவு – பெரிய நிறுவனமென்றில் பரவலாக்கலுக்கு அதிக வாய்ப்பு உண்டு.

• உற்பத்திப் பொருட்களின் வகை-கள் பலவகை உற்பத்திப் பொருட்களை வெளியிடுவதாயின் பரவலாக்குவதற்கே அதிக வாய்ப்பு உண்டு.

• கீழ் பணியாளர்களின் திறன் - கீழ் பணியாளர்கள் அதிக திறனு-டையவர்களாக இருந்தால் மையப்-படுத்தல் தன்மையைப் பேணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• முகாமைத்துவப் பயிற்சி - பணியாளர்கள் முகாமைத்துவப் பயிற்சியைப் பெற்றவர்களாக இருந்தால் பரவலாக்கலை மேற்கொள்ள முடியும்.

• நிலைத்திருத்தல் - நிறுவனம் வரையறையற்ற காலத்திற்கு நிலைத்திருக்க வேண்டியதாயின் அது பரவலாக்கலைப் பேணலாம்.

• தலைவரின் தன்மை - தலைவர் பரவலாக்கல் கோட்பாட்டை விரும்பினால் அதைப் பேணலாம் இல்லையேல் மையப்படுத்தலைப் பேணலாம்.

மேற்கூறப்பட்ட அம்சங்களின் அடிப்படையில் பார்க்கும் பொழுது நிறுவத்திற்கு கையளிப்பு அவசியமானதாகும். அதிகாரங்கள் கையளிக்கப்படும் அளவைப் பொறுத்து அது மையப்படுத்தலாகவோ அல்லது பரவலாக்கலாவோ காணப்படுகின்றது.

1. நிறுவனத்தில் எந்த அளவிற்கு பரவலாக்கலை மேற்கொள்ளுவது என்பதைத் தீர்மானிப்பதில் கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் எவை?

**உசாத்துணை நூல்கள் :**

- Business Studies – Bruce R. Jewell
- A/L Business Studies – Stephen Danks
- முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம்- தேவராஜன் ஜெயராமன்
- விருட்சம் - 1998 - யாழ் பல்கலைக்கழகம்.

| நாடுகள் | நாணயம் |
|---|---|
| *பிலிப்பைன்ஸ்* | *பெசோ* |
| *நெதர்லாந்து* | *கில்டர்* |
| *கொரியா* | *வொன்* |
| *பங்களாதேசம்* | *ராகா* |
| *தாய்லாந்து* | *பாட்* |
| *தென் ஆபிரிக்கா* | *றான்ட்* |
| *அவுஸ்ரேலியா* | *சிலிங்* |
| *ஐக்கிய அரபுக் குடியரசு* | *திராம்* |
| *நோர்வே* | *குரோனர்* |
| *மலேசியா* | *றிங்கிற்* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு

# Securities and Exchange Commission of Sri Lanka

### அறிமுகம்:

இலங்கையில் பிணையங்களுக்கான சந்தையை ஒழுங்குபடுத்தி வழி நடத்துவதற்கு உத்தியோகபூர்வமான அமைப்பு எதுவும் 1987ம் ஆண்டு வரை நிறுவப்படவில்லை. இதை உணர்ந்த அரசு 1987ம் ஆண்டு 36ம் இலக்க பிணையங்கள் பேரவைச் சட்டங்களைக் கொண்டு அதற்கமைய பிணையங்கள் பேரவை எனும் அமைப்பை நிறுவியது. பின்னர் இந்த அமைப்பு பெயர் மாற்றப்பட்டது. அதாவது 1910ம் ஆண்டு 26ம் இலக்க பிணையங்கள் பேரவைதிருத்தச்சட்டத்திற்கு அமைவாக இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு எனப்பெயர் மாற்றப்பட்டுள்ளது. இந்தத் திருத்தச் சட்டத்திற்கு அமைவாக இந்த அமைப்பிற்கு மேலதிக அதிகாரங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்பு இலங்கையில் நியாயமானதும் முறைமை சார்ந்ததுமான பிணைகள் சந்தையொன்றை செயற்படுத்தும், நோக்கத்திற்கமைய அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பளித்தல், முதலீட்டாளர்களுக்கு தரகர்களின் தவறான வழி காட்டல் காரணமாக ஏற்படக்கூடிய நிதி நட்டங்களுக்கு நட்டஈடு வழங்கும் பொருட்டு நட்டஈட்டு நிதியொன்றை ஏற்படுத்தல், தரம் வாய்ந்த பிணைகள் சந்தைத் தொழிற்பாடுகளுக்கு உறுதியளித்தல் போன்ற நோக்கங்களை இது பிரதிபலிக்கின்றது.

### பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் அங்கத்துவ கட்டமைப்பு

ஆணைக்குழு பத்து உறுப்பினர்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ள ஒரு அமுலாக்கல் அமைச்சினால் நிறுவனம் பெறுகின்றனர். மூவர் பதவி வழியாக நியமனம் பெறுகின்றனர்.

**i. நியமன உறுப்பினர்கள்**

a) மத்திய வங்கி ஆளுனர் நாயகத்தால் நியமனம் பெறும் பிரதி ஆளுனர்.

b) சட்டம், நிதி, வர்த்தகம், நிர்வாகம் ஆகிய துறை சார்ந்த அனுபவங்களும் திறன்களும் உடையவர்களென நிதி அமைச்சினால் நியமனம் பெறும் அறுவர்.



**செல்வன் K.B. கஜேந்திரன்**
**A/L 2003 Com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. **பதவி வழி உறுப்பினர்கள்**

a) தற்போதைய திறைசேரியின் பிரதி செயலாளர் ............1 நபர்

b) தற்போதைய கம்பனிப் பதிவாளர் நாயகம் ......... 1நபர்

c) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தற்போதைய தலைவர் ......... 1 நபர்

ஆணைக்குழுவின் செயற்பாடுகளையும் கொடுக்கல் வாங்கல்களையும் கண்காணித்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் என்பவற்றை நிறைவேற்றுதல், கடமைகளை நிறைவேற்றுதல் அதன் ஆளணியினர்களை முகாமைப்படுத்தல் போன்றவை பணிப்பாளர் நாயகத்தின் பிரதான பணிகளாகும். அவர் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் செவ்வையாக அமைவதற்கு பணிப்பாளர் நாயகம் தமது அதிகாரங்களையும், கடமைகளையும், பணிகளையும், பின்வரும் துறைகளுக்கிடையில் ஒப்படைத்துள்ளார்.

1) உள்ளக செயற்பாடுகளும் நிர்வாகமும் சார்ந்த துறை
2) சந்தை ஆய்வுத் துறை
3) பகுப்பாய்வுத் துறை
4) சட்டத்துறை
5) சந்தை அபிவிருத்தியும், பயிற்சியும் சார்ந்த துறை
6) நிர்வாகமும், கணக்கீடும் சார்ந்த துறை
7) கணக்காய்வும், செயற்பாடும் சார்ந்த துறை

**ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் / நோக்கங்கள் (Objects)**

❖ ஒழுங்கான முறையிலும் நியாயமான முறையிலும் பிணைகள் வழங்குதலிலும் அவற்றில் வர்த்தகம் மேற்கொள்வதிலும் ஈடுபடக்கூடிய சந்தையினை உருவாக்கி பராமரித்தல்.

❖ முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாத்தல்

❖ அனுமதிக்கப்பட்ட பங்குத்தரகர் அல்லது பங்கு வர்த்தகரின் நலனினால் உருவாகும் நிதி நட்டங்களிலிருந்து முதலீட்டாளர்களைப் பாதுகாப்பதற்கு ஒரு நட்டவீட்டு நிதியத்தைச் (Compensution found) செயற்படுத்தல்.

❖ பிணைகள் சந்தையினை ஒழுங்குபடுத்தலும் உயர்ந்த நியமங்கள் அச்சந்தையில் பேணப்படுவதை உறுதிப்படுத்தலும்.

**இலங்கைப் பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நிதி மூலங்கள் (Found)**

இலங்கைப் பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு தனது நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியினைப் பின்வரும் மூலங்களிலிருந்து பெற்றுக் கொள்கின்றது.

❖ பாராளுமன்றத்தில் காலத்திற்கும் காலம் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி

❖ அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனை நிலையம், பங்குத்தரகர், அலகுப்பொறுப்பாட்சி நிறுவனங்களின் நடவடிக்கைகளைக் காலத்திற்குக்காலம் பரிசோதனை செய்வதற்கு அறவிடப்படும் கட்டணங்களும், அவற்றின் அனுமதிப் பத்திரத்திற்கான விண்ணப்பக் கட்டணங்களும், புதுப்பித்தற் கட்டணங்களும்

❖ நன்கொடைகள் / பரிசுகள்

❖ மானியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்டவீட்டு நிதியம்
## Compensation found

அனுமதிப்பத்திரம் பெற்ற பங்குதாரர்களின் அல்லது பங்கு வர்த்தகரின் தவறு காரணமாக முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் நிதி ரீதியான நட்டத்தை ஈடு செய்வதற்காக ஆணைக்குழு ஒரு நட்டவீட்டு நிதியத்தை ஸ்தாபித்து பேணி வருகின்றது. இந் நிதியத்திற்கான நிதி பின்வரும் வழிகளிலிருந்து பெறப்படுகின்றது.

❖ இந் நிதியத்திற்காக பாராளுமன்றத்தால் ஒதுக்கப்படும் தொகை
❖ ஆணைக்குழுவினால் அறவிடப்படும் தண்டப்பணம் என்பவற்றின் மூலம் இதற்கு நிதி பெறப்படுகின்றது.

நிதி நட்டம் அடைந்த முதலீட்டாளர் ஒருவர் நட்டஈடு பெற விரும்பினால் நட்டம் ஏற்பட்ட 3மாத காலத்துள் இந் நிதியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். அவரது கோரிக்கை நியாயமானதாகக் காணப்படும் போது ஆணைக்குழு அவருக்குரிய தொகையை மதிப்பீடு செய்து கொடுப்பனவை மேற்கொள்ளும்.

### பங்குப் பரிவர்த்தனை நிலையமொன்றை ஆரம்பித்தல் நடைமுறை

எந்தக் கட்டிருவாக்கப்பட்ட நிறுவனமும் ஏற்கனவே பங்குப் பரிவர்த்தனை நிலையம் ஒன்றை நடத்திக்கொண்டு பரிவர்த்தனை நிலையமொன்றை எதிர் காலத்தில் நடாத்துவதற்கு விரும்புமானால் ஆணைக்குழுவிற்கு அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பிக்க வேண்டும். அல்லது எந்த நபரும் ஏற்கனவே ஒரு பங்குத் தரகர் தொழிலை / பங்குவர்த்தகத் தொழிலை நடாத்தி வருவபவராக இருப்பின் அல்லது எதிர்காலத்தில் அவ்வாறான தொழிலைச் செய்ய விரும்புபவராக இருப்பின் ஆணைக்குழுவிற்கு அனுமதிப் பத்திரம் கோரி விண்ணப்பிக்க வேண்டும்.

### இலங்கைப் பிணைகள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கடமைகளும், பொறுப்புகளும்
## Duties and functions

❖ பங்குப் பரிவர்த்தனை நிலையமாக (Stock Exchange) செயற்படுவதற்கு நிறுவனம் ஒன்றிற்கு அனுமதிப் பத்திரம் வழங்கலும், அந்த நிறுவனம் தனது நடவடிக்கைகளை ஒழுங்கான முறையில் நடாத்துவதை உறுதிப்படுத்தலும்
❖ எந்த நபருக்கும் பங்குதாரராக / பங்கு வர்த்தகராக (Stock Dealer) செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கலும் அவர்களின் நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் நடத்தப்படுவதனை உறுதிப்படுத்தலும்.
❖ அலகுப் பொறுப்பாட்சி நிறுவனமொன்றை நடாத்துவதற்கு முகாமைக் கம்பனி ஒன்றிற்கு அனுமதிப் பத்திரம் வழங்குதலும் அவற்றின் ஒழுங்கான நடவடிக்கைகளை உறுதிப்படுத்தலும்.
❖ அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பரிவர்த்தனை நிலையத்திற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர் காலத்திற்குக் காலம் பணிப்புரைகளை வழங்குதல்.
❖ பிணைகள் சந்தை அபிவிருத்தி தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பங்குதரகர் பிழை காரணமாக முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் நிதி ரீதியான நட்டங்களுக்கு நட்டஈடு வழங்கல்.

❖ ஆணைக் குழுவின் வேலைகளை நடாத்திச் செல்வதற்குத் தேவையான சேவகர்களையும் உத்தியோகத்தர்களையும் வேலைக்கமர்த்தல்.

❖ பிணையங்கள் சந்தை தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கைகளையும் செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல்.

❖ அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட பங்குபரிவர்த்தனை நிலையமொன்றில் பட்டியலிடப்பட்டிருக்கின்ற பொதுக் கம்பனியினதும் அனுமதிப் பத்திரம் பெற்ற அலகுப் பொறுப்பாட்சி நிறுவனத்தினதும் பங்கு வர்த்தகரினதும், பங்குதாரரினதும் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தினதும் வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை நடாத்துதலும் விசாரணை முடிவுகளை வெளியிடலும்.

❖ ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியை ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாற்றும்படி அழைப்பு விடுமாறு கம்பனிப் பதிவாளரை வேண்டுதல்.

❖ ஆணைக் குழுவின் குறிக்கோள்களையும் அடைவதற்குத் தேவையான நடைமுறைக்கு இடப்படக் கூடிய எல்லாச் செயல்களையும் செய்தல்.

❖ எந்த அசையும் அசையாச் சொத்தையும் எந்த வகையிலும் கைப்பற்றல் உடமையாகக் கொண்டிருத்தல், குத்தகைக்கு / வாடகைக்கு எடுத்தல்.

பங்கு முதலீட்டாளர்களின் நலன் கருதி பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்.

✷ பங்கு முதலீட்டாளர்களின் நலன்கருதி பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் நிர்வாக முகாமையைப் பொறுப்பேற்றல்.

✷ பொதுக் கம்பனிகளினதும் பங்குதாரர்களினதும் செயற்பாடுகளை பரிசீலனை செய்தல்.

✷ பங்குதாரரின் நலனினால் முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் நட்டங்களுக்கு இழப்பீடு செய்தல்.

எனவே பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவானது இலங்கையில் பிணைகள் சந்தையை ஒழுங்குபடுத்தல், பிணைகள் தொடர்பான வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற பங்குப் பரிமாற்று நிலையங்கள் (Stock Exchange) அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள், பங்குத் தரகர்கள், பங்கு வர்த்தகர்கள் [Stock dealers) ஆகியோருக்கு அனுமதிப் பத்திரம் வழங்குதல் நட்டவீட்டு நிதியமொன்றை ஆரம்பித்தலும், அவற்றின் முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாப்பும் என நிறுவப்பட்டுள்ள அரச அமைப்பாகும்.


**உசாத்துணைகள்:**

1. பங்குச்சந்தை முதலீடும் செயற்பாடுகளும் (141 பக்கம்)
   M.Y.M. சித்தீக்.
2. இலங்கைப் பிணைகள் சந்தை (27- 33 பக்கம்)
   லலித் பீ. சமரக்கோன்.
3. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 1991ம் ஆண்டு
4. பிணைகள்பரிவர்த்தனை ஆணைக்குழு B.S பசில் ஜெனதாஸ்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக எண்ணக்கருக்களுக்கான புதிய வரைவிலக்கணங்கள்

**1.1 வணிகம்** (Business)

மனிதத் தேவைகளையும் விருப்புக்களையும் திருப்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு பணியும் வணிகம் எனப்படும்.

**1.2 தேவை** (Needs)

"ஏதோவொரு அடிப்படையான திருப்தி கிடைக்காமை காரணமாகத் தோன்றும் உணர்வுநிலை மனிதத் தேவை எனக் கருதப்படுகிறது."

**1.3 விருப்பம்** (Wants)

தேவையைப் பூர்த்தி செய்ய விசேடமான ஒரு பொருளை அல்லது சேவையைப் பயன்படுத்தவுள்ள "ஆசை" அல்லது "தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய விசேட பொருள் அல்லது சேவை மீதான ஆசை"

**"Wants are desires for specific of these deepen nees"**

**1.4 கேள்வி** (Demand)

ஒருவர் குறித்தவொரு பொருள் அல்லது சேவை ஒன்றுக்கான விலையை விருப்பத்துடன் செலுத்தவுள்ள ஆற்றல் கேள்வி எனப்படும்.

கேள்வி எழுவதற்கு இரண்டு அடிப்படை அம்சங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல் வேண்டும். அவையான:

1) குறித்தவொரு பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்யவுள்ள விருப்பம்

2) அப் பொருளைக் கொள்வனவு செய்யக் கூடிய நிதி வசதி அல்லது கொள்வனவு ஆற்றல்.

**1.5 உற்பத்தி** (Prodect)

நுகர்வோர் தேவைகளை திருப்திப்படுத்தக்கூடிய முறையில் தயார் செய்யப்பட்ட எதனையும் உற்பத்தி எனக் கொள்ள முடியும். இவை 3 வகைப்படும் அவையாவன.

1) பொருட்கள் (Physical Goods)
2) சேவைகள் (Services)
3) எண்ணங்கள் (Ideas)

இவற்றை மேலும் வகைப்படுத்தலாம்

4) இடங்கள் (Place)
5) தனிநபர் (People)
6) செயற்பாடுகள் (Activities)
7) ஒழுங்கமைப்புக்கள் (Organzations)
8) நிகழ்வுகள் (Events)

**1.6 வசதிப் பொருட்கள்** (Conveience Goods)

நுகர்வோர் வழமையாகக் கொள்வனவு செய்யும்பொருட்கள் வசதிப் பொருள்கள் என அழைக்கப்படும்.

Ex: சீனி, அரிசி



செல்வன் சி.சுரேஸ்குமார்
13C A/L 2003 Com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1.7 கடைப்பொருட்கள் (Shopping Goods)**

ஒரேவிதமான பண்டங்களின் விலை தன்மை தரம் போன்ற அம்சங்களை ஒப்பீட்டுக் கொள்வனவு செய்யும் பொருட்கள் கடைப்பொருட்கள் எனப்படும். இக்கடைப்பொருட்கள் இரு முறைகளில் ஒப்பிடப்படும்

1) விலை ஒப்பீடு
2) தர ஒப்பீடு

Ex:- ஆடைவகை

**1.8 சிறப்பு பொருட்கள் (Speciality Goods)**

கொள்வனவு தொடர்பாக விசேட முயற்சி மேற்கொள்ளப்படும் பொருள் சிறப்பு பொருட்கள் எனப்படும்

Ex:- தங்க ஆபரணம்

**1.9 நடாப்பொருட்கள் (Unsought Goods)**

சந்தையில் விற்பனைக்கிருந்த போதிலும் நுகர்வோர் அது தொடர்பாக அறிந்திராத பொருட்கள் நடாப்பொருட்கள் எனப்படும்.

Ex: புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட காப்புறுதி ஒப்பந்தம்.

**1.10 சேவை (Service)**

சேவை, வாடிக்கையாளர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் திருப்தி செய்வதற்கான வணிகச்செயற்பாடு சேவை எனப்படும்.

**1.11 சந்தை (Market)**

கொள்வனவாளரும் விற்பனையாளரும் தொடர்புபடும் இடம் அல்லது சந்தர்ப்பம் சந்தை எனப்படும்

**1.12 சிறப்புத் தேர்ச்சி (Specialisation)**

குறிக்கப்பட்ட பொருள் அல்லது சேவை ஒன்றினை உற்பத்தி செய்வதில் ஒரு நாடு அல்லது ஒரு பிரதேசம் அல்லது நிறுவனம் அல்லது தனியாள் சிறப்பாற்றல் கொண்டிருத்தல் சிறப்புத் தேர்ச்சி எனப்படும்.

**2.1 அமைப்பு (Organization)**

பொது இலக்கு ஒன்றை அடைவதற்காக மனிதக் குழுவொன்று ஒத்துழைத்துச் செயற்பட ஒன்றுசேர்த்தல் அமைப்பு எனப்படும்.

Ex:- பல்கலைக்கழகம்

**2.2 வணிகத்தின் குறிக்கோளும் நோக்கமும்**

எந்தவொரு நிறுவனமும் நீண்டகாலத்தில் அடைய எதிர்பார்க்கும் பெறுபேறுகள் குறிக்கோள்கள் எனப்படும். இவை பெரும்பாலும் பரந்த இலக்கு உடையதாய் இருக்கும். இத்தகைய பரந்த இலக்குடன் கூடிய பெறுபேறுகளை மிகவும் திட்டவட்டமாக வெளிப்படுத்தல் நோக்கம் எனப்படும்.

**2.3 வணிக விழுமியங்கள்**

வணிகக் கருமங்களைப் புரியும் போது கடைப்பிடித்து வந்த பின்வரும் 3 அம்சங்களே வணிக விழுமியங்கள் எனப்படுகின்றன. இவைவணிக திட்டமிடலின் (Business plan) போது முக்கியம் பெறுகின்றன. அவையாவன.

1) நுகர்வோரை திருப்திப்படுத்தல்
2) இலாபநோக்கம்
3) நாட்டில் நிலவும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக தமது வணிகக்கருமங்களை ஆற்றுதல்

**4.0 இலத்திரனியல் வர்த்தகம் (E-Commerce)**

கணனி இணையம் (Internet) மூலம் கடனட்டையைப் (Credit Card) பயன்படுத்தி பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகளைக் கொள்வனவு செய்யும் வர்த்தகம் இலத்திரனியல் வர்த்தகம் எனப்படும்.

### 4.1 அங்கீகாரம் பெற்ற கம்பனி (Pranchisee)

குறித்த ஒரு உற்பத்தி, விற்பனை தொடர்பாக கம்பனிக்குள்ள உரிமையை வேறொரு நிறுவனத்துக்கு ஒப்படைக்கும் கம்பனி அங்கீகாரம் பெற்ற கம்பனி எனப்படும்.

இவை அங்கிக்ரிக்கப்பட்ட வணிகத்தை ஆரம்பித்தல், நடாத்துதல் போன்றவற்றில் உதவி செய்யும் ஓரிடப்படுத்தும் ஆலோசனை, பொருள் வழங்கல், கருவிகளை வழங்கல், தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொடுத்தல் ஊழியரை பயிற்றுதல் முகாமையாளரைப் பயிற்றுதல் போன்ற உதவிகளைச் செய்யும்.

### 5.3 கணனி வலையமைப்பு (Computer Network)

செய்தி பரிமாற்றம் தரவு, தகவல் பரிமாற்றம் போன்ற நோக்கங்களைஅடிப்படையாகக் கொண்டு இரண்டு கணணிகள் அல்லது பல கணணிகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து தொடர்பு படுத்தல் கணணி வலையமைப்பு எனப்படும்.

### 5.4 தகவல் முறைமை (Information systrem)

தகவல் முறை என்பது தனிநபர்கள் (People) நடைமுறைகள் (Procedures) மென்பாகம் (Software), வன்பாகம் (Hardware) தரவு (Data) என்பவற்றின் ஒண்றிணைப்பே தகவல் முறைமை எனப்படும்.

### 6.1 நுகர்வோர் விலைச் சுட்டெண்

பணத்தின் உண்மைப் பெறுமதி அல்லது கொள்வனவு ஆற்றலை விலையில் ஏற்படும் மாற்றங்களை அடிப்படையாகக்கொண்டு அளவிடப்படும் விலைச்சுட்டெண் நுகர்வோர் விலைச்சுட்டெண்

### 6.2 பணவீக்கம் (Inflation)

பொருட்கள் சேவைகளின் விலைகள், உயர்கின்றபோது பணத்தின் பெறுமதி அல்லது கொள்வனவு ஆற்றல் வீழ்ச்சியடையவது பணவீக்கம் எனப்படும்.

அல்லது நுகர்வோர் விலைச் சுட்டெண் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றால் இது பணவீக்கம் எனப்படும்.

### 6.3 மாற்றுண்டியல்

குறித்த நபருக்கு அல்லது அவரது கட்டளைக்கு அல்லது கொண்டு வருபவருக்கு (காவி) கேட்டபோது அல்லது குறித்த ஒரு எதிர்காலத் திகதியில் குறித்த பணத்தொகையைச் செலுத்த வேண்டும். எனக் கட்டளையிட்டுக் கொடுப்பவரால் மற்றொருவருக்கு வழங்கும் நிபந்தனைகளற்ற எழுத்து மூலமான கட்டளை மாற்றுண்டியல் எனப்படும்.

### 6.4 வணிகப் பத்திரம்

வணிகக் கம்பனிகள் குறுங்கால கடன் தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக பிணைப் பாதுகாப்பின்றி வழங்கும் ஆவணம் வணிகப் பத்திரம் எனப்படும்.

### 6.5 வாக்குறுதிச் சீட்டு

குறித்த பணத் தொகையைக் குறித்த காலத்தின்பின் பெயர் குறித்தவருக்கு அல்லது அவரது கட்டளைக்கும் செலுத்துவதாக உடன்பட்டு கடன்பட்டவரால் உறுதிசெய்து வழங்கப்படும். எழுத்து மூலமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணம் வாக்குறுதிச் சீட்டு எனப்படும்.

**6.6 சரக்கு முதல்கள்**

கம்பனிப் பங்குகள் ஒன்றாக்கப்பட்டு தொகுதிகளாக்கப்பட்டால் அத் தொகுதி சரக்கு முதல் எனப்படும்.

**7.1 தொடர்பாடல் (Communication)**

தொடர்பாடல் என்பது "செய்தி அனுப்புதல் பெறுதல், புரிந்து கொள்ளுதல் எனப்பொருள்படும்.

"The Sending Receving and understanding of massages"

அல்லது

"கருத்துப் பரிமாற்றம் தொடர்பாடலாகும்"
(The Sharing of meaning)

தொடர்பாடலில் பின்வரும் 6 விடயங்கள் முக்கியத்தும் பெறுகின்றன.

1) அனுப்புவர் (Sender)
2) செய்தி (Massage)
3) பெறுபவர் (Receiver)
4) சந்தர்ப்பம் (Situation)
5) நோக்கம் (Purpose)
6) பின்னூட்டல் (Peedback)

**References**

Advanced Business studies
Jagath Bandaranayake
Dean
Faculty of Management studies and Commerce
University of Sri Jayawardenepura.

**நவீன முகாமைத்துவ எண்ணக்கருவான ஐந்து - 5 எண்ணக்கரு**

இது யப்பான் அறிமுகம் செய்துள்ள முகாமைத்துவ நுட்பமுறையாகும். தொழிற்சாலை, காரியாலயம், வீடு, போன்றவற்றின் கருமங்களை வினைத்திறன் மிக்கனவாக்குவதற்கு இதனைப் பயன்படுத்த முடியும் S – 5 ஜப்பான் மொழியில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களாகும்.

1. Seiri - தேவையற்றவற்றை அகற்றுதல் (Clearing - up)
2. Seiton - தேவையானவற்றை தேவையான இடத்தில் வைத்தல் (Locations)
3. Seiso - நன்றாக முறையாகத் தூய்மை செய்தல் (Clean with meaning)
4. Seiketsu - தரப்படுத்தல் (Standardisation)
5. Shitsuke - பயிற்சியும் ஒழுக்கக் கட்டுப்பாடும் (Training and Discipline)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்படுத்தல்

# Controlling

## அறிமுகம்

முகாமைத்துவமானது எவ்வாறு வளங்களைப் பயன்படுத்தி நோக்கங்களை அடைந்துகொள்ள முடியும் என்பதனைப் பற்றி விளக்குகின்றது. இவ்வாறு வளங்களைப் பயன்படுத்தி நோக்கங்களை அடைய முற்படும் போது நாம் சில முகாமைக் கருமங்களை ஆற்ற வேண்டியுள்ளது. அவையாவன.

i) திட்டமிடல் - **Planning**
ii) ஒழுங்கமைத்தல் - **Organizing**
iii) தலைமை வகித்தல் - **Leading**
iv) கட்டுப்படுத்தல் - **Controlling**

எனவே கருமங்கள் திட்டமிட்ட முறையில் நடைபெறுவதனை உறுதி செய்தல் முகாமைத்துவக் கட்டுப்பாடு என அழைக்கப்படும். திட்டமிடல், ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல் ஆகிய ஏனைய முகாமைத்துறைகளின் விளைதிறனை ஆராய்வதற்கு கட்டுப்படுத்தல் முகாமைக்கு உதவியாக அமையும். தேவையெழும் போது சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் கட்டுப்படுத்தலின் முக்கியமான பங்காகும் கட்டுப்படுத்தலின் படிமுறைகள் பின்வருமாறு:

i) செயற்பாடுகளை மதிப்பிடுவதற்கான நியமங்களையும், முறைகளையும் உருவாக்குதல்
ii) செயற்பாடுகள் நியமங்களுக்கு அமைவாக உள்ளனவா என ஆராய்தல்
iii) செயற்பாடுகளை மதிப்பிடல்
iv) செயற்பாடுகளில் குறைபாடு காணப்படுமானால் அவற்றைத்திருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இங்கு குறிப்பிட்ட கட்டுப்படுத்துலுக்கும், திட்டமிடலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அதாவது நாணயமொன்றின் இருபக்கங்கள் போல இத் தொடர்பு காணப்படுகின்றது. எனவே முதலில் நாம் திட்டமிடல் என்றால் என்ன என்பது பற்றி நோக்கினால் "திட்டமிடுதல் என்பது நோக்கத்தினை அடைவதற்கு எவ்விதமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதனை முன் கூட்டித் தீர்மானித்துக் கொள்வதனைக் கருதும்." அதாவது நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு எக் கருமங்களை ஆற்ற வேண்டும். அவற்றை யார் ஆற்ற வேண்டும் எப்போது ஆற்ற வேண்டும் எப்படி ஆற்ற வேண்டும் என்பது போன்ற விடயங்களை முன் கூட்டியே தீர்மானித்துக் கொள்வதனையே திட்டமிடல் எனப்படும்.

தற்போது கட்டுப்படுத்தல் பற்றி நோக்கினால் "கட்டுப்படுத்தல் என்பது திட்டமிட்டபடி கருமங்கள் சரியாக



செல்வி த. துஸ்யந்தி
13B A/L 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் கருதும். எனவே கட்டுப்படுத்தல் என்பது உண்மையான செயற்பாட்டு விளைவுகளை (Operating results) திட்டங்களுடன் (Plans) ஒப்பீடு செய்து இவ்விரண்டுக்குமிடையே ஏதாவது வேறுபாடுகள் (Deviations) காணப்படுகின்றனவா என்பதை ஆராய்ந்து. அவ்வாறு வேறுபாடுகள் காணப்படுமாயின் அவ்வேறுபாடுகளை நீக்கும் பொருட்டு திருத்த நடவடிக்கைகளை **(Corrective Actions)** மேற்கொள்வதனைக் கருதும்.

## கட்டுப்படுத்தல் செய்முறை Control process

கட்டுப்படுத்தல் செய்முறையானது பின்வரும் நான்கு படிமுறைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

*i) நியமங்களை* ***(Standards)*** *தீர்மானித்தல்*

நியமங்கள் எனப்படுபவை அடையப்பட வேண்டிய அல்லது செய்து முடிக்க வேண்டிய செயற்பாட்டு மட்டத்தினைக் குறித்து நிற்கும். அனேகமாக நியமங்களை தொகை ரீதியாக (Quantitative) தீர்மானிக்கப்படுவது வழமையாகும்.

உதாரணமாக:- ஒரு நிறுவனமானது ஒரு மாதத்தில் 15000 அலகு பொருட்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்ற வகையில் நியமத்தைத் தீர்மானிக்கலாம்.

***ii) உண்மையான செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல்***

இங்கு உண்மையாக செய்து முடிக்கப்பட்ட வேலைகள் அல்லது செயற்பாடுகளின் அளவினை மதிப்பீடு செய்யப்படும்.

உதாரணமாக: மேற்கூறிய நிறுவனத்தில் குறித்த ஒரு மாதத்தில் உண்மையில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தியினளவை மதிப்பீடு செய்தலைக் குறிப்பிடலாம். இங்கு குறித்த ஒரு மாதத்தில் 12000 அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனலாம்.

***iii) நியமத்தையும் உண்மையாக செயற்பாட்டு மட்டத்தையும் ஒப்பீடு செய்தல்***

இங்கு நியமத்தையும் உண்மையான செயற்பாட்டையும் ஒப்பு நோக்கி அவ்விரண்டுக்கும் இடையே ஏதேனும் வேறுபாடுகள் உள்ளனவோ என்பது அறியப்படும்.

உதாரணமாக:
இவ்விரண்டையும் ஒப்பு நோக்கும் போது உண்மையான செயற்பாட்டின் போது நியமத்திலும் பார்க்க 3000 அலகுகள் குறைவாக உற்பத்தி செய்யப்பட்டுள்ள நிலைமையை அவதானிக்கலாம்.

***iv. நியமத்துக்கும் உண்மையான செயற்பாட்டுக்குமிடையில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படின் நடவடிக்கை எடுத்தல்.***

இங்கு நியமத்துக்கும் உண்மையான செயற்பாட்டுக்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவ் வேறுபாட்டுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்கான பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அவ் வேறுபாடுகளை நீக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.


உதாரணமாக: மேற் கூறப்பட்ட நிறுவனத்தின் உற்பத்தி 3000 அலகுகளால் குறைவடைந்தமைக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் இவ் உற்பத்திக் குறைவை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கு நியமத்துக்கும் உண்மையான செயற்பாட்டு மட்டத்துக்குமிடையே வேறுபாடுகள் காணப்படாவிடின் நாம் எவ்வித திருத்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இக் கட்டுப்பாட்டுச் செய்முறையை பின்வருமாறு உருவாக்கலாம்.




## கட்டுப்பாட்டுக் கருவிகள்

**01. நிதிக் கட்டுப்பாட்டுக் கருவிகள்**

**(1) வரவு செலவுத் திட்டம் மூலமான கட்டுப்பாடு**

இது இரண்டு வகைப்படும் அவையாவன

1) நிதி வரவு செலவுத் திட்டம்
   வருமானச் செலவு அட்டவணை, மூலதனச் செலவு அட்டவணை
2) நிதியல்லா வரவு செலவுத்திட்டம்
   பொருள் பயன்பாட்டு வரவு செலவுத்திட்டம், உற்பத்தி வரவு செலவுத் திட்டம், நேரக் கூலி வரவு செலவுத்திட்டம்.

**(2) விற்பனை வரவு செலவுத்திட்டம்:**

எந்த வகையான வரவு செலவுத்திட்டமாக இருந்த போதிலும் நிகழ்த்தப்படும் கட்டுப்பாடு முக்கியமானதாகக் கருதப்படும். தடுத்தல், திருத்துதல், செயற்படுத்தல் தொடர்பான கட்டுப்பாடுகளுக்கு வரவு செலவுத்திட்டம் பயன்படுத்தப்படுதலை விசேட அம்சமாகக் கொள்ள முடியும்.

### கணக்கீட்டுக் கருவிகள் மூலமாக நடைபெறும் கட்டுப்பாடுகள்

கணக்கீட்டுப் பாடப்புக்குரிய பின்வரும் கருவிகள் இதற்காக பயன்படுத்தப்படுகின்றன.

i) ஐந்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) நிதிப் பாய்ச்சல் கூற்று

iii) நியமக் கிரயக் கணிப்பு

iv) விகிதப் பகுப்பாய்வு

v) சமநிலைப் புள்ளி வியாக்கியானம்

vi) கணக்காய்வு

**02. உற்பத்திக் கட்டுப்பாட்டுக் கருவிகள்**

சரக்கிருப்புக் கட்டுப்பாடும் தரக் கட்டுப்பாடும் இங்கு குறிப்பிடக் கூடிய பிரதானமான இரு கட்டுப்பாட்டுக் கருவிகளாகும்.

***i) சரக்கிருப்புக் கட்டுப்பாடு***

உற்பத்திச் செய்முறையைத் தொடர்ச்சியாக நிகழ்த்திச் செல்லவும் சரக்கிருப்பு விரயத்தையும் காலங் கடத்தலையும் இழிவு படுத்தவும் சரக்குகளிலான முதலீட்டின் விளைதிறனை உறுதி செய்யவும், சரக்கிருப்புக் கிரயத்தை உத்தம மட்டத்தில் பேணவும் சரக்கிருப்புக்கட்டுப்பாடு முக்கியமாகிறது. இதற்காக பொருளாதாரச் சரக்கு மட்டம், உச்சச் சரக்கு மட்டம், இழிவுச் சரக்கு மட்டம், உத்தமமான சரக்குமட்டம் போன்றவற்றை நிச்சயிப்பதற்குப் பயன்படுத்தும் அளவீடுகளைக் காண முடியும்.

***ii) தரக் கட்டுப்பாடு***

உற்பத்திச் செயற்பாடு தொடர்பான நியமங்களைத் தீர்மானித்தல் மாதிரி எடுப்புப் பரிசோதனை உள்ளீட்டு வெளியீட்டு பரிசோதனை போன்ற தரக்கட்டுப்பாடு வழிமுறைகளைப் பயன்படுத்தி பொருட்களின் தரத்தையும், பண்பையும் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்-கொள்ளுதல் தரக்கட்டுப்பாடு எனக் கருதப்படும். அழிதல் கெடுதலின்றிப் பொருள்களை வழங்குவதற்காகவும், பொருள் சட்ட முறைத்தரத்திற்கு அமைவாக இருப்பதற்கும் பொருள்களை நிராகரிப்பதால் ஏற்படும் நட்டங்களை இழிவுபடுத்துவதற்கும், சந்தையில் நீண்ட காலம் நிலைத்திருப்பதற்கும் தரப்படுத்தல் முக்கியமாகிறது.

**ஒரு சிறந்த கட்டுப்பாட்டு முறைக்கு இருக்க வேண்டிய பண்புகள்**

***i) பொருத்தமான தன்மை (Suitability)***

எல்லா நிறுவனங்களும் ஒரே மாதிரியானவையாகவோ அல்லது ஒத்த தன்மையுடையதாகவோ விளங்குவதில்லை. இதே போன்று ஒரு நிறுவனத்துக்குள்ளே ஆற்றப்படும் பல்வேறு செயற்பாடுகளுக்கிடையிலும் ஒத்த தன்மை இருப்பதில்லை.

உதாரணமாக: ஒரு சிறிய நிறுவனத்துக்குப் பொருத்தமான கட்டுப்பாட்டு முறைமை பாரிய நிறுவனங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனவே கட்டுப்பாட்டு முறைமையானது அந் நிறுவனத்தின் தன்மைகள், தேவைகள், சூழ்நிலைகள் என்பவற்றுக்குப் பொருத்தமாக அமைய வேண்டும்.

***ii) முன்னோக்கிய திட்டமிடல் (Forward planning)***

ஒரு சிறந்த கட்டுப்பாட்டு முறையானது திட்டத்துக்கும் உண்மைச் செயற்பாட்டுக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமிடையில் எதிர்காலத்தில் எழுந்துகொள்ளக்கூடிய வேறுபாடுகளை எதிர்வு கூறக்கூடியதாகவும் இருக்க வேண்டும். வேறுபாடுகள் எழுந்த பின்னர் அவற்றுக்கு பரிகாரம் காண்பதிலும் பார்க்க வேறுபாடுகள் எழ முன்பே அவற்றைத் தடுத்து விடுவது சிறப்பானதாகும்

***iii)எளிமையான தன்மை (Simple)***

கட்டுப்பாட்டு முறையானது விளங்கிக் கொள்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் எளிமையானதாக இருக்க வேண்டும்.

***iv) சிக்கனத் தன்மை (Economical)***

கட்டுப்பாட்டு முறையானது ஏற்றுக் கொள்ளக்கூடிய செலவுடையதாக இருக்க வேண்டும். கட்டுப்பாட்டு முறையை அமுல்படுத்துவற்கு ஏற்படும் செலவானது அக் கட்டுப்பாட்டு முறையிலிருந்து கிடைக்கக் கூடிய நன்மைகளிலும் பார்க்க குறைவாக இருக்க வேண்டும்.

***v) பக்கசார்பின்மை (objective)***

ஒரு கட்டுப்பாட்டு முறைமையானது நோக்கத்தை மையமாகக் கொண்டிருக்க வேண்டுமென்பதுடன் ஆள் சாராததாகவும் இருக்க வேண்டும். இதன் பொருட்டு கட்டுப்பாட்டு முறைமைகளில் உண்மையான செயற்பாடுகளை அளவீடு செய்வதற்கான தெளிவான, சரியாக வரையறுக்கப்பட்ட எண் கணிய ரீதியில், வெளிப்படுத்தப்பட்ட நியமங்கள் இருத்தல் அவசியமாகும்.

**References**


1. Advanced Business Studies – 2
By:Jagath Bandaranayake
2. An Introduction to Management
By:N.Devarajan Jeyaraman
3. Management
By:K.Thevaraja


## தேக்க வீக்கம் / மந்த வீக்கம்

### Stagflation / Slumpflation

உற்பத்தியிலும் பொருளாதார நடவடிக்கைகளிலும் தேக்க நிலை அல்லது வீழ்ச்சி நிலையும், வேலையின்மை நிலையும் காணப்படுவதே தேக்க வீக்கம் எனப்படும். எனவே தேக்க வீக்கத்தின் போது பின்வரும் நிலைமைகள் ஒருங்கே நிலவும்.

- பொருளாதார மந்தநிலை
- வேலையின்மை அதிகரிப்பு
- பணவீக்கத்தில் அதிகரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதியே நோக்கங்கள் பல
கொண்டு நோக்காக நீ நாற்றிசையும்
உலா வர எமது வாழ்த்துக்கள்

B.A.
1st in Com
G.A.Q.
A/L



ஆகிய
வகுப்புக்கள் நடைபெறுகின்றன

G.
A.
Q.
B.A.
1st in Com
A/L

**D.G.M**

பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்

ஒளி தரும் ஜோதியே ஒளிர்
வையகத்தில்

**விக்னா**

**கல்வி நிலையம்**

யாழ்நகரில்,
9,10,11,O/L
A/L
வகுப்புக்கள்

சிறந்த
ஆசிரியர் குழுவால்
கற்பிக்கப்படும்

Vickna
52, Stanley Road
Jaffna.

**தமிழ் அன்னையும்
நாமும் மகிழ்ந்திடவே
ஒளிபரப்பப்படும் இவ்
வணிகஜோதி**

**அபிநயா ஜுவலர்ஸ்**

தங்கப் பவுண் நகை
வியாபாரம் உங்கள்
இளமைக்கு மேலும்
மெருகூட்டும் கண்கவர்
௨௨**ct** தங்க நகைகளை
பெற்றிட யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்



**ABINAYA**

Jewellers

32,Kasthuriar Rd.
Jaffna

32 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக ஜோதி பொலிவுற
எம் வாழ்த்துக்கள்

கஜன்

வீடியோ சென்றர்



பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஜோதிக்கு எமது
உள்ளம் நிறைந்த
நல்லாசிகள்

பிரபா ஸ்ரோர்ஸ்
Pirapa Stores



222, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

இலங்கையிலே அதிக சஞ்சிகைகளை வெளியிட்ட ஸ்ரான்லிக்
கல்லூரியின் வணிக ஜோதி புதுப் பொலிவுடன் மிளிர
நல்வாழ்த்துக்கள்



பாடசாலை மாணவர்கட்குரிய
அப்பியாசக் கொப்பிகள்,



பாடசாலை உபகரணங்கள்



நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

நலன்புரிச் சங்கம்

யா / கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக கலைக்கு வளமூட்டும் வணிக
ஜோதியே வருக, வருக

அழகுக்கு அழகு செய்யும்
தங்கப் பவுண் நகைகளுக்கு

நதியா
நகை மாடம்

Nathiya
Nagai Madam

கிளை நிறுவனங்கள்

**கவுசன்** மொடேன் ஜுவல்லறி
129, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

**நிதியா** நகைமாடம்
299, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

இல.02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரான்லி வீதிச் சந்தி)
தொ.பே: 021-3479

**No. 02, Kasthuriyar Road,**
**Jaffna.**
**(Stanly Road Junction)**
**Tel: 021-3479)**

வணிக ஜோதியே வருடா வருடம்
சுடர்விட்டு பிரகாசிக்குக.

நவீன வடிவமைப்புக்களில்
அழகிய தங்க நகைகளை
செய்து பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்

புதிய நவீனா
நகையகம்

தங்கப் பவுண் நகை வியாபாரம்
22கரட்டில்
செய்து கொடுக்கப்படும்

*ஓடர் நகைகள்
*குறித்த தவணையில்
*உடக்காவாகக்கூடன்

189, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக ஜோதியே உன் புகழ் உயரட்டும்

மருத்துவ வகைகளை!
பாடசாலை உபகரணங்களை
அல்லது வேறு ஏதேனும்
உபகரணங்களா நீங்கள்
நாடவேண்டிய இடங்கள்

**மெடி எயிட்ஸ் மருந்தகம்**
644, பருத்தித்துறை வீதி
நல்லூர்.

**மெடி எயிட்ஸ்**
689 பருத்தித்துறை வீதி
நல்லூர்.



சுப்பீரியர் போட்டோஸ்ரட்
646, பருத்தித்துறை வீதி
நல்லூர்.

சாதனை படைத்திட வழி பலதந்த "வணிக ஜோதியே" சர்வமும் நீயே!

யாழ் நகரில் ஏக வினியோகஸ்தராக விளங்கும்



# அருள் விநாயகர்
# மோட்டோர்ஸ்



**Arul Vinayagar**
**Mortors**
103, Stanley Road
Jaffna.








# II. பொருளியல்

- அதிர்ச்சிகளின் பேரண்ட பொருளாதாரத் தாக்கம் -2001 இல் இலங்கை பற்றிய ஒரு நோக்கு.
- இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்.
- இலங்கையின் குடிப்பரம்பல் மாற்றங்கள் - 2001 தொகைமதிப்பு பற்றிய ஒரு நோக்கு
- இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய சந்தை.
- இலங்கையில் மூலதனக் கணக்கினைத் தாராளமயமாக்கும் வாய்ப்பும் - இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ச்சிகளின் பேரண்டப் பொருளாதாரத் தாக்கம்

## 2001 இல் இலங்கை பற்றிய ஒரு நோக்கு

# Macro Economic Impact of Shocks The Case of Sri Lanka in 2001

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் முதன் முதலில் பொருளாதார வளர்ச்சியானது எதிர்கணிய நிலையை 2001ம் ஆண்டே எய்தியது. இதற்குக் காரணம் உள்நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் 2001ம் ஆண்டு ஏற்பட்ட அதிர்ச்சி தாக்கங்களாகும். அதாவது உலக பொருளாதார பின்னடைவு **(Global recession)** பயங்கரவாத தாக்குதல்கள் பின்னடைவை ஏற்படுத்தி உள்ளன. இது பல்வேறுபட்ட துறைகளில் ஏற்பட்டாலும் ஒரு சில துறைகளில் கூடியளவு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. அவை பின்வருமாறு.

1. உண்மைத்துறை வெளியீட்டு இழப்பு
2. விலைகள்
3. வெளிநாட்டு வருவாய் இழப்புகள்
4. அரசிறைச் செயலாற்றம்

மேற்கூறப்பட்டவற்றில் ஏற்பட்ட தாக்கங்கள் பேரண்ட பொருளாதாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இத்துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை பின்வருமாறு விபரிக்கலாம்.

### 1. உண்மைத்துறை வெளியீட்டு இழப்பு

### Real Sector Output Loss

2001ஆம் ஆண்டில் பொருளாதாரம் பாதகமாக காணப்படுவதற்கு இத்துறை ஓர் முக்கிய காரணமாகும். அதாவது உலகளாவிய பொருளாதார பின்னடைவு கடும் வரட்சி மற்றும் இலங்கையிலும் ஐக்கிய அமெரிக்கா நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல் என்பன விளங்கின. இவை பின்வருனவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தின.

**விவசாயம் :**

2001ம் ஆண்டில் விவசாயத்துறையில் கூட்டிய பெறுமதி 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை கிடைக்காமையே இதற்கு காரணமாகும். தேயிலை, இறப்பர், தெங்கு, நெல் ஆகிய முதன்மை பயிர்களும் ஏனைய உணவுப் பயிர்களும் இங்கு பாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக வீழ்ச்சியடைந்தன. பயிர்த்துறையில் வீழ்ச்சியின் எதிர்க்கணியத் தாக்கமானது கோழி இறைச்சி பால் மற்றும் முட்டை ஆகிய முக்கிய வகைகளின் உற்பத்தி அதிகரித்த கால் நடைத் துறையின்



செல்வன் ப.ராஜ்குமார்
A/L 2003 Com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த செயலாற்றத்தின் காரணமாக ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. காடாக்கல் துறையின் பெறுபேறுகள் சாதகமாகக் காணப்பட்டதோடு பொதுவான விவசாயத் துறையில் வரட்சியின் தாக்கத்தினைக் கணிப்பதற்கு பங்களிப்புச் செய்தது.

**கைத்தொழில் :**

திருத்தப்பட்ட வகைப்படுத்தலுக்கு இணங்க கைத்தொழில் ஆனது தயாரிப்பு, கட்டுமானம், சுரங்கமகழ்தல், கல்லுடைத்தல், மின்சாரம் வாயு நீர் வழங்கல் ஆகிய நான்கு துறையை கொண்டுள்ளது.

✷ **தயாரிப்பு :** கூட்டிய பெறுமதி நியதிகளில் தொழிற்சாலைக் கைத்தொழிலின் 40%தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புடவைகள் மற்றும் அழியும் பொருட்கள் மற்றும் தோல் உற்பத்தி பொருட்கள் வகைகள் 8.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போன்ற பாரிய கொள்வனவாளர்களிடம் இருந்து மந்தமான கேள்வியே இதற்கு முதன்மை காரணமாகும்.

✷ **கட்டுமானம் :** முன்னைய ஆண்டிலே பதிவு செய்யப்பட்ட 4.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2001ம் ஆண்டில் கட்டுமானத்துறை 2.5 சதவீத வளர்ச்சியினை பதிவு செய்தது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவடையும் தன்மையொன்றைக் காட்டிய போதிலும் இத்துறையின் உறுதியான வளர்ச்சியானது மெதுவான எதிர்கணிய பொருளாதார வளர்ச்சியினைக் கணிப்பதற்கு இத்துறை பங்களிப்புச் செய்தது. பாரிய கட்டுமான செயற்திட்டங்களின் குறைந்த எண்ணிக்கைக்கு இட்டுச் சென்று முதலீட்டுச் செலவின் சுருக்கமே இதற்குப் பெருமளவு காரணமாக அமைந்துள்ளது.

✷ **சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல் :** 2000ஆம் ஆண்டில் 4.8 சத வீதத்தினாலே வளர்ச்சியடைந்த சுரங்கமகழ்தல் கல்லுடைத்தல் துறை 2001ம் ஆண்டில் சிறிதளவான 0.7 சதவீதத்தினாலே வளர்ச்சியடைந்தது. இத்துறையின் 2.5 சதவீத விரிவாக்கமே தனியான காரணமாகும். கல்லுடைத்தல் உற்பத்தி பொருட்கள் முக்கியமான உள்ளீடாக விளக்கும் கட்டுமான நடவடிக்கைகளின் விரிவாக்கமே வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக சுரங்கமகழ்தல் துணைத்துறை 4, 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில் இரத்தினக்கல் அகழ்வு நடவடிக்கைகளில் காணப்பட்ட மாற்றமான செயலாற்றத்தின் காரணமாக சுரங்கம் அகழ்தல் துணைத்துறை 4.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மந்தமடைந்த உலக சந்தை பால் அருங்கற்களுக்கான கேள்வி குறைவடைந்து காணப்பட்டமையினால் இரத்தினக்கல் ஏற்றுமதிகளின் பெறுமதி 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

✷ **மின்சாரம் வாயு நீர் வழங்கல்:** மின்சாரம் வாயு மற்றும் நீர் வழங்கல் துறை முன்னைய ஆண்டின் 4.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2001ம் ஆண்டு 2.9 சதவீதங்கொண்ட சுருக்கத்தினைக் காட்டியது. வெப்ப மின்வலுப் பொறியொன்று பழுத-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைந்தமையாம் இலங்கை மின்சார சபைக்கான அதிக செலவின் காரணமாக 2001ம் ஆண்டின் யூன் இறுதியிலிருந்து அவசரகால வாடகைப் பொறிகளின் பயன்பாடு முடிவுக்கு கொண்டு வரப்பட்டமையே இதற்கு முதன்மை காரணமாகும். அதிகரித்த எரிபொருள் விலைகளின் காரணமாக உற்பத்திச் செலவில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பு 2001ம் ஆண்டு வீழ்ச்சிக்கு காரணமாகும்.

**பணிகள் :**

2001ம் ஆண்டில் பணிகள் துறை 0.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக துறையில் ஏற்பட்ட வீழ்ச்சி 2001ம் ஆண்டின் மெதுவான பொருளாதார வளர்ச்சியின் மீது கடுமையான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டவாறு 2001ம் ஆண்டில் பெறுமதி கூட்டப்பட்ட இறக்குமதி வர்த்தகம் 10.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்காக 2001ம் ஆண்டின் தொடக்கத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கை வழி முறைகளில் தாக்கமும் இவ்வாண்டு காலத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட மெதுவான பின்னடைவும் ஓரளவிற்கு காரணமாயின் ஏற்றுமதி பொருட்களுக்கான வர்த்தகத் துணைத் துறையும் 8 சதவீத பின்னடைவினைக் கொண்டிருந்தது. 2001இல் இறக்குமதி ஏற்றுமதிகளின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் நியதிகளில் முறை 18.4 சதவீதத்தினாலும் 12.8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து இத்துணைத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது.

## 2. விலைகள் - Prices :

1997ம் ஆண்டிலிருந்து விலைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியுறும் போக்கு 2001ம் ஆண்டில் நேர்மாற்றம் செய்யப்பட்டது. குறிப்பாக சர்வதேச விலை சீர்திருத்தங்கள் சில முக்கிய நுகர்வு மற்றும் இடைநிலை பொருட்களின் இறக்குமதிகளின் பன்னாட்டு விலை அதிகரிப்புகள் நாணய பெறுமானத் தேய்வு பெப்ரவரி நடுப்பகுதியிலிருந்து பெரும்பாலான பொருட்கள் மீது 40 சதவீத மேலதிக இறக்குமதி தீர்வை விதிப்பு உற்பத்தியின் அதிகரித்த செலவுகளை ஈடுசெய்வதற்கு திறந்த சந்தை விலைகளில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களும் மற்றும் சாதகமற்ற வானிலையானது கடும் வரட்சியும் தாழ்ந்த பிரதேசங்களில் பெரும்பாலான வகைகளினது மலைநாட்டு மரக்கறி வகைகள் சிலவற்றிலும் உற்பத்தியைப் பாதித்தது. இத்தாக்கம் மரக்கறிகளின் விலைகளில் பிரதிபலிக்கப்பட்டது. இவ்விலைகள் முன்னைய ஆண்டிலான குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துக் காணப்பட்டது. டிசெம்பரில் இருந்து ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிரான 11 சதவீத நாணயத் தேய்வு மற்றும் பன்னாட்டு பண்ட விலைகளின் மூலம் உள்நாட்டு விலைகளின் மீது வெளிநாட்டுத்துறையிலிருந்தான ஓரளவு தாக்கத்துடன் விசேட தீர்வை வீதங்கள் மற்றும் இறக்குமதிப் பொருட்கள் மீதான மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட்டமை. என்பன உள்நாட்டு விலைகளில் மேலும் தாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல காரணிகள் இதற்குப் பொறுப்பாக இருந்தன. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 6.7 சதவீதம் புள்ளிகளிலான வேறுபாடு அதிர்ச்சிகளின் நிருவகிக்கப்பட்ட விலைகளின் அதிகரிப்பின் தாக்கங்களினதும் காரணமாக இருந்தது.

**3. வெளிநாட்டு வருவாய்கள் இழப்பு**

## Loss in External Earnings

2001ம் ஆண்டின் நிகழ்வுகள் வெளிநாட்டுத்துறையில் ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஆகிய இரு முக்கிய விடயங்களின் மீது பாரிய அளவிலான நேரடித் தாக்கங்களைக் கொண்டிருந்தன. இவ்விரு துறைகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சி பின்வருமாறு.

**ஏற்றுமதிகள் :**

2001ம் ஆண்டில் ஏற்றுமதித்துறை கடுமையான பின்னடைவைக் கொண்டிருந்தமைக்கு ஏற்றுமதிகளின் அளவு, விலை இரண்டும் 2000ஆம் ஆண்டிலும் பார்க்க குறைவாக இருந்தமையே காரணமாகும். 2001ம் ஆண்டின் முதல் நான்கு மாதகாலப்பகுதியில் 3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த மொத்த ஏற்றுமதி வருவாய்கள் முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றில் காணப்பட்ட மெதுவான பொருளாதாரப் போக்கினைத் தொடர்ந்து 2001ம் ஆண்டு மே இன் பின்னர் வீழ்ச்சியடையத் தொடங்கியது. கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்திலும் பின்னர் ஐக்கிய அமெரிக்கா இலும் நடத்தப்பட்ட தாக்குதல் சிறப்புத் தீர்வைச் சலுகைகளின் ஆதரவு காரணமாக ஆடை ஏற்றுமதிச் சந்தைகளுக்கு துணைச் சகாரா நாடுகளிலிருந்து எழுந்த அதிகரித்த போட்டி என்பன நிலமையை மேலும் மோசமாக்கின. இத்தாக்கம் ஏற்றுமதிகளின் அனைத்து முக்கிய வகைகளிலும் உணரப்பட்டது.

**சுற்றுலா :** 2001 யூலையில் சுற்றுலாத்துறை பெரும் பின்னடைவினைக் கொண்டிருந்தது. 2001ம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவிற்கு மீட்சியடைந்த சுற்றுலா வருகைகள் (10.5 சதவீத அதிகரிப்பு) 2001 யூலையில் கட்டுநாயக்க சர்வதேச வானூர்தி நிலையம் தாக்கப்பட்டதுடன் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. சுற்றுலாக் கைத்தொழிலில் செப்தெம்பர் 11ஆம் நாளன்று ஐக்கிய அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் அதனைத் தொடர்ந்து நிலவிய நிச்சயமற்ற அரசியல் நிலைமை போன்ற பல காரணிகளால் மேலும் பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக வெளிநாடுகள் இலங்கைக்கு உல்லாசப் பயணிகளை செல்வதற்கு கட்டுப்படுத்தியமையும் வீழ்ச்சிக்குக் காரணமாகும்.

**4. அரசிறைச் செயலாற்றம் :**

## Fiscal Performance

அரசிறைப் பக்கத்தில் ஏற்றுமதிகளின் குறைப்பும் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளின் சுருக்கமும் அரசாங்க வருவாய்களை நேரடியாகவே கீழே கொண்டு வந்தன. இதே வேளையில் பாதுகாப்பின் மீதான அதிகரித்த செலவும் பொருளாதாரத்துக்கு புத்து-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிர் அளிப்பதற்காக வழங்கப்பட்ட நிவாரண பொதிகளும் செலவு அதிகரிப்புக்கு நேரடியாகவே பொறுப்பாயிருந்தன. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் அதிகரிப்பானது கடன்பாடுகளின் செலவுகளுக்கான அதிகரிப்புடன் அதிகரித்த கடன்பாடுகளுக்கு இட்டுச் சென்றது. இது அரசபடுகடனின் மட்டத்தினை தவிர்க்க முடியாத வகையில் உயர்த்தியது. 2001இல் மொத்த அரசிறைச் சேகரிப்பு பெயரளவு நியதிகளில் ரூ 231.5 பில்லியன் அமைந்து 2000இலும் பார்க்க 10 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. ஆயினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமான அரசாங்கத்தின் அரசிறை 2000இன் 16.8 சதவீதத்திலிருந்து 2001இல் 16.5 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. கம்பனி வரி மீதான 20 சதவீத மேலதிகக் கட்டணத் தேசிய பாதுகாப்புத் தீர்வை 1சதவீத்தினால் மேல்நோக்கி உயர்த்தப்பட்டமை. போன்ற பல தற்றுணிபுடைய அரசிறை அதிகரிப்பு முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அரசிறைச் சேகரிப்புக்கள் பின்னடைந்தமைக்கு 2001ம் ஆண்டில் பொருளாதாரம் மெதுவடைந்தமையும் தாழ்ந்த இறக்குமதிகளும் அதே போன்ற பொருளாதாரத்திற்கு புத்துயிரப்பனிப்பதற்காக 2001 ஒக்டோபரில் இறைத் தூண்டல் பொதியின் ஒரு பகுதியாக வழங்கப்பட்ட பொதுவான வரிச்சலுகைகளும் பெருமளவிற்குக் காரணங்களாக இருந்தன.

மேலே தரப்பட்ட பகுப்பாய்வானது குறிப்பாக பலதரப்பட்ட அதிர்ச்சிகள் ஒன்று சேர்ந்து வலுவாக்கும் போது அதிர்ச்சிகளுக்கு பொருளாதாரம் எளிதில் பாதிக்கப்படுவதை எடுத்துக் காட்டுகின்றது. அத்தகைய பாதிப்புக்குள்ளாகும் தன்மையினை அபிவிருத்தி செய்வதற்கும் அதிர்ச்சிகளை எதிர்கொள்வதற்காக அரசு பல்வேறு தாக்குப்பிடிக்கும் தன்மையை அபிவிருத்தி செய்வதற்கும் முயற்சிகளை செய்து வருகின்றது.

**உசாத்துணை நூல்கள் :**
இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2001
பக்கம் 1 - 13

## பச்சைப் பொருளியல் (Green Economics)

சூழல் பற்றிய விடயங்களை உள்ளடக்கிய சூழல் சார் பொருளியல் (Enviromental Economics) இதுவாகும். புதுப்பிக்கப்பட முடியாத வளங்களின் அழிவு, கடதாசி மற்றும் மூலப் பொருட்களை மீள் பயன்பாட்டுக்குட்படுத்தல், சூழல் மாசடைதல் போன்ற விடயங்கள் பற்றி ஆராய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் (இ.நு.வி.சு)

# Sri Lanka Consumer Price Index (SLCPI)

## I. அறிமுகம் (Introduction)

ஒரு நாட்டின் அனைத்துப் பொருட்கள் சேவைகளினதும் அல்லது தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பண்டக் கூடைகளுக்குரிய சராசரி விலை மட்டமானது **பொது விலை மட்டம்** (Price Level) என அழைக்கப்படும். பொருளாதாரமொன்றில் நீண்டகாலப் போக்கில் பணத்தின் கொள்வனவு சக்தியைப் பாதிக்கும் விலைமட்டங்களில் ஏற்படும் பொதுவான அதிகரிப்பே **பணவீக்கம்** (Inflation) ஆகும்.

இப் பணவீக்கமானது பொருளாதாரத்தின் நாணயத்துறையின் ஏனைய காரணிகளான மெய், அரசிறை, வெளித்துறை மற்றும் நுகர்வும், முதலீடும், சம்பளங்கள், வேலைவாய்ப்பு மற்றும் வருமான பகிர்ந்தளிப்பு, அரச வருமானம் மற்றும் செலவினம், நாணய மாற்று விகிதம், வெளிநாட்டு நாணமாற்று உழைப்புக்கள், வரிவிகிதம் மற்றும் சேமிப்பு என்பவற்றோடு **இணைக்கப்பட்டுள்ளது.** இவற்றில் ஏற்படுகின்ற எந்தவொரு பாதிப்பும் பணவீக்கத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும். இப் பணவீக்கத்தை அளவிடுவதற்கு விலைச் சுட்டெண் பயன்படுத்தப்படுகிறது.

பணவீக்கத்தில் ஏற்படுகின்ற அதாவது ஒரு நாட்டில் குறித்தவொரு காலப்பகுதியில் பொருட்கள் சேவைகளின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ஓர் அளவிட்டுக் கருவியே **நுகர்வோர் விலைச் சுட்டெண்** (Consumer Price Index) அல்லது **வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்** (Cost of Living Index) ஆகும். அதாவது ஒரு குறிப்பிட்ட தொகுதிப் பண்டங்களின் நடப்பு ஆண்டின் செலவினை அதே தொகுதிப் பண்டங்களின் ஒரு அடிப்படை ஆண்டின் செலவின் விகிதமாகக் குறிப்பிடுவது விலைச்சுட்டெண் ஆகும்.

இவ் விலைச் சுட்டெண்கள் **பணவீக்கத்தை அளவிடுவதற்கு** மட்டுமன்றி **பொருளாதார முடிவுகளை மேற்கொள்ளல்** மற்றும் **திட்டமிடல்** என்பவற்றிற்கும் உதவுகின்றன. அவற்றில் சில **பயன்பாடுகள்** (Uses) வருமாறு.



**Mr. M. Rajeev**
**13B A/L 2003 Com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வேதன உடன்படிக்கைகளில் வாழ்க்கைச் செலவுப் படியினை அளவீடு செய்தல்.
* சொத்து உடன்படிக்கை போன்ற எதிர்கால உடன்படிக்கைக் கொடுப்பனவுகளை கணிப்பீடு செய்தல்.
* மெய்ப் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று விகிதத்தை தீர்மானித்தல்.
* நியம வீதங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விலைச் சுருக்கிகளாக பொருளாதார குறிகாட்டிகளை கணிப்பீடு செய்தல்.
* விலைச் சுருக்கிகளாக எதிர்கால நிதியிடல் தேவைகளை கணக்கிடுவதற்கு திட்டமிடுபவர்களுக்கு உதவுதல்.

இவை போன்றவற்றிற்காகவும் விலைச் சுட்டெண் பயன்படுத்தப்படுகின்றன. இந் நுகர்வோர் விலைச்சுட்டெண் மேற்குறிப்பிடப்பட்டவற்றின் பின்னணியில் ஒரு நாட்டிற்கு இன்றியமையாதவொரு அளவீட்டுக் கருவியாக விளங்குகின்றது.

நுகர்வோர் விலைச் சுட்டெண் ஒன்றினைக் **கணிப்பதற்கு சில தொழில்நுட்ப முறைகள்** (Technical measure) இனங்கண்டு பிரயோகிக்கப்பட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. சுட்டெண்ணைக் கணிப்பதற்கான புள்ளிவிபர முறையொன்று பொதுவாக லாஸ்பெயஸ் சுட்டெண் (Laspeyers Index) அடிப்படைக் காலமொன்று சுட்டெண் பிரயோகிக்கபடும். நுகர்வுக் குடித்தொகையின் வரைவிலக்கணம்; பொதுவாக புவியியல் மற்றும் வருமானச் செலவு உள்ளடக்க நியதிகள்; அடிப்படைக்கால பகுதியிலிருந்து காலத்தின் கிரமமான புள்ளிகளிலிருந்து கூடையில் உள்ள ஒவ்வொரு பொருளுக்கும் பணிக்குமான விலைச் சேகரிப்பு முறை என்பனவே அவையாகும்.

## II. பின்னணி (Backround)

பல நாடுகளில் உள்ளதைப் போலன்றி இலங்கையில் கடந்த (2001ம்) ஆண்டு வரை நாடு தழுவிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஒன்றைக் கொண்டிருக்கவில்லை. இலங்கையில் கணிப்பிடப்படும் விலைச்சுட்டெண்கள் **பல்வேறு குறைபாடுகளைக்** கொண்டுள்ளமை அடிக்கடி சுட்டிக்காட்டப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக உத்தியோக பூர்வ தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் **கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்** (Colombo Consumers Price Index – CCPI) பல குறைபாடுகளை கொண்டுள்ளது. இச் சுட்டெண் கொழும்பு நகரை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுவதுடன் 1952ம் ஆண்டை அடிப்படையான ஆண்டாகவும் (1952= 100) கொண்டுள்ளது. இவற்றைவிட இக்காலப்பகுதி (1952) உண்மையான விலைகளைப் பிரதிபலிப்பதாகவும் இல்லை.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் குறைபாடுகள் காணப்பட்டமையால் அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு **குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தால்** (Department of Census and Statistics) தயாரிக்கப்படும் **பாரிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்** (Greater Colombo Consumers Price Index – GCPI) இலங்கை மத்திய வங்கியினால் கணிப்பிடப்படும். **கொழும்பு மாவட்ட**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நுகர்வோர் விலைச்சுட்டெண்** (Colombo Districk Consumer Price Index CDCPI) போன்றன கணிப்பிடப்பட்டன. இவையும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைப் போன்றே அதாவது கொழும்பு நகரையும் அதனையண்டிய பிரதேசங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் நுகர்வுக் கூடைகளையே அளவிடப்பட்டன.

இதன் பின் **1999ம்** ஆண்டிலிருந்து இலங்கை மத்திய வங்கி **மூன்று மாதாந்த பிரதேச விலைச்சுட்டெண்களை** அதாவது அநுராதபுர நுகர்வோர் விலைச்சுட்டெண், மாத்தளை நுகர்வோர் விலைச்சுட்டெண், மாத்தறை நுகர்வோர் விலைச்சுட்டெண் தனது ஆண்டறிக்கையில் குறிப்பிடத்தக்க அளவில் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவை மாதாந்தம் பிரசுரிக்கப்படுவதில்லை. இதைவிட இச் சுட்டெண்கள் குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழும் வருமானம் குறைந்த மக்களின் நுகர்வுக் கூடைகளையே அளவிடுகின்றன.

1999ல் பரீட்சார்த்த முயற்சியாக பரந்த பிரதேச பரப்பை உள்ளடக்கியதாகவும் 65% வருமானம் பெறும் குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் மேல் மாகாண நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை இலங்கை திரட்டியது. ஆனால் இச் சுட்டெண் உள்ளகத் தேவைக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டதோடு இதுவரையிலும் பிரசுரிக்கப்படவில்லை.

இதுவரை கணிக்கப்பட்ட விலைச் சுட்டெண்கள் அனைத்தும் பல்வேறு குறைபாடுகளைக் கொண்டுள்ளமையால் குறிப்பாக அவை குறிப்பிட்டதொரு பிரதேசத்தை மையமாகக் கொண்டு கணிக்கப்பட்டமையால் இக் குறைபாட்டை / குறைபாடுகளை நீக்கும் பொருட்டு புதியதோர் விலைச்சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த வகையில் / இந்தப் பின்னணியில் **நாடு முழுவதற்குமான நுகர்வோர் விலைச்சுட்டெண்** என்ற எண்ணக்கருவை உருவாக்கி அபிவிருத்தி செய்வதற்காக **2001ம் ஆண்டு ஏப்ரலில் நிதி திட்டமிடலில் அமைச்சு** (Ministry of Finance and Planning) **தேசிய குழுவொன்றை** நிறுவியது. இதன் பின்னர் நாடளாவிய புதிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட்டது.

## III. அடிப்படைப் பண்புகள் (Basic Features)

பின்வரும் பண்புகளுடன் 1995, 1996 இல் மேற்கொள்ளப்பட்ட வருமான மற்றும் செலவு மதிப்பீட்டினடிப்படையில் **தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்** இப்போது நாடு முழுவதற்குமான இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அபிவிருத்தி செய்துள்ளது.

- **செயல்முறை** - இது லாஸ்பெயர்ஸ் சுட்டெண்ணாக கணிக்கப்பட்டு-கின்றது.
- **அடிப்படைக்காலம்** - காலம் அளவீட்டுக்கு முன்னய, அளவீட்டு, அளவீட்டுக்கு பின்னய ஆண்டாகிய மூன்று ஆண்டுகளை உள்ளடக்கியதாகும். (1995- 1997)
- **புவியியல் உள்ளடக்கம்** - 1995/1996 இன் வருமான செலவு மதிப்பீட்டில் வடக்கு கிழக்கு தவிர்ந்த முழு நாட்டையும் இலங்கை நுகர்வோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைச்சுட்டெண் உள்ளடக்கும். தற்போதைய சமாதான சூழ்நிலை தொடரின் வடக்கும் கிழக்கும் உள்ளடக்கப்படும்.

- **வருமான/செலவு உள்ளடக்கம்** - செலவினடிப்படையில் பாகுபடுத்தப்பட்ட ஆகக்குறைந்த மற்றும் ஆகக் கூடிய 10 சதவீதத்தின் உள்ளார்ந்த பக்கச் சார்பைத் தவிர்ப்பதற்காக ஆகக் குறைந்த 8 செலவு விடயங்களை உள்ளடக்கிய சுட்டெண் இடைநிலை செலவு விடயங்கள் 8 இனை உள்ளடக்கிய சுட்டெண்ணுடன் ஒப்பிடப்பட்டது. நிறைகளின் வேறுபாடுகள் மிகச் சிறியதாக இருந்தன. இதன்படி இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் குடும்ப அலகுகளின் செலவில் ஆகக் குறைந்த 8 விடயங்களை உள்ளடக்கும்.

- **நுகர்வுக்கூடை** – 1995 / 1996 வருமான செலவு அளவீட்டின் இலக்கமிடப்பட்ட குடித்தொகையில் 89.2 சதவீத நுகர்வுச் செலவினை உள்ளடக்கும். 174 பொருட்களின் கூடையினை இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் பயன்படுத்துகின்றது. எஞ்சிய 10.8 சதவீத பொருட்களின் அதே இனத்திலான வகைகளுக்கிடையில் விகித முறைப்படி மீள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

- **நிறைகள்** - 1995 / 1996 இன் வருமான செலவு அளவீட்டின் செலவுப் பெறுமதிகளிலிருந்து இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் நிறைகள் கணிக்கப்படுகின்றன.

## IV. முடிவுகள் - Conclusion

பணவீக்கம், சம்பளங்கள், பிரதேச அபிவிருத்தி விலை, உறுதிப்பாடு, நிதியியல் முறை போன்ற அனைத்துக் கொள்கை நோக்கங்கள் கருதியும் நாட்டின் அனைத்துப் பாகங்களையும் உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்படும் இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் **காலத்தின் தேவையே.** இது தற்பொழுது நடைமுறையில் காணப்படுகின்ற அனைத்துச் சுட்டெண்களிலும் **தலை சிறந்தது.** குடும்ப அலகுகள் வணிகத் துறையினர். வர்த்தக சம்மேளனங்கள் தொழிற்சங்கங்கள் போன்றன அனைத்து இலங்கை நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் தேசிய முக்கியத்துவத்தை உணர்ந்து எதிர்வரும் காலத்தில் இச் சுட்டெண்ணினடிப்படையில் செயற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு மேற்குறிப்பிட்ட அனைத்து சுட்டெண்களிலுமுள்ள குறைபாடுகளை நீக்கிய ஓர் தலைசிறந்தவொரு விலைச்சுட்டெண்ணாக புதிய இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.


**உசாத்துணை நூல்**

1. இஸட் ஏ. ஸன்ஹிர் வீரகேசரி - 24-09-2002 பக்கம் 8
2. மத்திய வங்கி ஆண்டறிக்கை 2001 பக்கம் 195 - 200
3. Annual Report of Central Bank of Sri Lanka 2001 – Page 128 – 131.
4. வே.கருணாகரன் வணிகதீபம் பக்கம் 42-52





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் குடிப்பரம்பல் மாற்றங்கள்

## -2001 தொகை மதிப்பு பற்றிய ஒரு நோக்கு

### அறிமுகம்:

இலங்கை உலகிலேயே மிகவும் அடர்த்தியான சனத்தொகை செறிவுள்ள நாடுகளில் ஒன்றாகும். மக்கட் தொகைப் பரம்பலானது ஒரே சீரானதாக அமையவில்லை அது மேற்கு கரையோரப் பிரதேசங்களிலும் மத்திய மற்றும் வட மாகாண நகர்புற பிரதேசங்களிலும் செறிவாக இருக்கும் தன்மை தென்படுகின்றது. சுகாதார நிலைமைகள் மேம்பட்டுள்ளமை ஆரம்பத்தில் சனத்தொகை வளர்ச்சி அபிவிருத்திக்கு இட்டுச் சென்றது. ஏனைய பல அபிவிருத்தியுறும் நாடுகளைப் போலன்றி, கிராமப் புறங்களில் இருந்து நகரப் புறங்களுக்கு பெருமளவில் மக்கள் புலம் பெயர்தலை தவிர்க்க கூடியதாக இருந்துள்ளது. இலங்கையில் சனத்தொகை தொடர்பான தரவுகளை குடிமதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களமும் பதிவாளர் நாயகத் திணைக்களமும் காலத்திற்கு காலம் வெளியிட்டு வருகின்றன. இலங்கை மக்களின் முதலாவது குடியிருப்பாளர், தகவல் திரட்டல் 1789இல் இடம் பெற்ற போதிலும் முதலாவது முறைமையானது விஞ்ஞான அடிப்படையிலுமான தேசியக் குடி மதிப்பு 1869இல், பதிவாளர்நாயகத் திணைக்களம் உருவாக்கப்பட்டதன் பின் 1871இலே இடம் பெற்றது. அதன் பின்னர் 1981 வரை ஒழுங்கான கால இடைவெளியில் மக்கட் தொகை குடிமதிப்பு இடம்பெற்றுள்ளது. இறுதியாக சென்ற வருடம் (2001) குடி மதிப்பீடானது மேற்கொள்ளப்பட்டது.

**குடிப்பரம்பல் மாற்றங்கள் ஏற்பட்டதற்கான காரணங்கள்.**

✸ முன்னைய தொகை மதிப்புகளைப் போலன்றி 2001ம் ஆண்டு தொகை மதிப்பு கோட்பாட்டு ரீதியான மற்றும் செயற்பாட்டு ரீதியான பல முன்னேற்றங்களை உள்ளடக்கி இருந்தது.

✸ முதலாவது அடிப்படைக் குடும்ப அலகுத் தகவல்களுக்கான நாட்டின் அனைத்து மூன்று துறைகளான நகர, கிராம மற்றும் தோட்டங்களில் உள்ள குடும்ப அலகுகள் முழுமையாக கணக்கிடப்பட்டுள்ளன. ஆனால் முன்னைய தொகை மதிப்புக்களில் முழுமையான கணக்கெடுப்பு நகரக் குடும்ப அலகுகளில் மட்டுமே மேற்கொள்ளப்பட்ட வேளையில் கிராம மற்றும் பெருந்தோட்டங்களில் அத்தகைய தகவல்கள் தொகை மதிப்பு பிரிவின் 10 சதவீதத்தில் இருந்து மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.

✸ இரண்டாவது குடித்தொகையில் உடல் ஊனமுற்றோரின் புள்ளி விபரங்களைச் சேகரிப்பதற்கான புதிய அட்டவணையான உடல் ஊனமுற்றோர் அட்டவணை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.



செல்வன் பூ. கோகிலன்
13C A/L 2003 Com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✹ மூன்றாவது இலங்கையை வதிவிடமாகக் கொண்ட ஆனால் தொகை மதிப்பு நடைபெறும் நேரத்தில் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் தொடர்பாகவும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

✹ இறுதியாக, தனிப்பட்டவர்கள் "உண்மைநிலை" மற்றும் "சட்டப்படி" இரண்டு முறைகளின் கீழும் கணக்கிடப்பட்டன.

## குடிப்பரம்பல் மாற்றம் என்பது:

குறிப்பிட்ட காலப்பகுதியில் குறிப்பிட்ட நாட்டில் காணப்படும் குடிப்பரம்பலானது முன்னைய ஆண்டுகளைவிட வேறுபட்டுக் காணப்படுதலே (அதாவது குறிப்பிட்ட ஆண்டில் குடித்தொகையில் முன்னைய ஆண்டினை விட ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவு) குடித்தொகை மாற்றம் எனப்படும்.

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் குடிப்பரம்பல் மாற்றமானது குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தினைக் கொண்டுள்ளது.

## குடிப்பரம்பல் மாற்றங்களின் முக்கியமான பண்புகளாவன :

2001ம் ஆண்டு தொகைமதிப்பு கடந்த 5 தசாப்தங்களாக குறிப்பிடத்தக்க அமைப்பியல் மாற்றங்களுக்கு உட்பட்டு வந்துள்ளமையை உறுதிப்படுத்துவாக உள்ளது.

### அவ் மாற்றங்களாவன.

✹ தொகை மதிப்பு 1981இற்கும் தொகை மதிப்பு 2001 இற்குமிடையில் ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் ஏறத்தாழ 1.2 வீதமாக இருந்தமையையும் 1960களின் பின்னர் குடித்தொகை வளர்ச்சி வீதத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சிப் போக்கு காணப்படுவதனையும் உறுதிப்படுத்தியது. (1963 குடித்தொகை மதிப்பில் 2.7% ஆக காணப்பட்டிருந்த குடித்தொகை வளர்ச்சி வீதம் 1971இல் 2.3% இற்கு 1981 இல் 1.6% இற்கும் வீழ்ச்சி அடைந்தது)

2001இல் இலங்கையின் குடித்தொகை 18.73 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. பிறப்பு வீதம் குறைவடைந்து செல்வது மட்டுமன்றி தொழில் வாய்ப்பிற்காகவும் நீண்ட உள்நாட்டு யுத்தம் காரணமாகவும் பெருமளவு புலம் பெயர்ந்தமையும் கடந்த 20ஆண்டுகளில் நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தமும் குடித்தொகை வளர்ச்சி குறைவாக இருப்பதற்கு காரணமாகலாம்.

பால் வீதம் அல்லது குடித்தொகையிலுள்ள ஒவ்வொரு 100 பெண்களுக்கும் ஆண்களின் எண்ணிக்கை 1946ல் 113 ஆக விளங்கியது 1981 இல் 104இற்கும் 2001 இல் 98இற்கும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்துள்ளது. இது பெண்கள் குடித்தொகை விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் அண்மைய ஆண்டுகளில் தொழிற்படை பங்கேற்பில் பெண்களின் பங்கு அதிகரித்தமையை காட்டியது.

இலங்கையின் குடிப்பரம்பல் பண்பின் மைய அம்சம் பிறப்பு வீதத்தில் காணப்படும் நீண்டகால வீழ்ச்சியாகும். பெண் ஒருவருக்கான சராசரி பிறப்பு எண்ணிக்கை என வரை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்கணம் செய்யப்படும். மொத்த பிறப்பு வீதம் 1953இன் 5 பிறப்புகளில் இருந்து 1981 இல் 3 ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது. இப் பிறப்பு வீதம் 1982 - 1987இல் 2.8ஆகவும் 1995 - 2000 இல் 2.0 ஆகவும் மேலும் வீழ்ச்சி அடைந்தமையையும் குறிப்பிடத்தக்கது.

✹ **2001 ம் ஆண்டின் முதியோர் தொகையானது அதிகரிப்பையே காட்டியது.**

பெரும்பாலான ஆசிய நாடுகளில் உள்ளதைப் போன்று இலங்கையின் குடித்தொகையும் வயது முதிர்ந்ததாகவுள்ளது. 65 வயதிற்கு மேற்பட்டவர்களின் விகிதம் 1963 வரை 3.6% ஆகவும் 1971இல் 4.2% இற்கும் 1981இல் 5.4% இற்கும் அதிகரித்தது தொகை மதிப்பு 2001 இல் தொடர்பான வயது அமைப்பு விகிதாசாரம் ஏறத்தாழ 7% இற்கும் மேலும் அதிகரித்துள்ளன.

✹ **18 வயதிற்குட்பட்ட குடித்தொகை வீதம் வீழ்ச்சியடைந்தது.**

முழுமையாகக் கணக்கிடப்பட்ட 18 மாவட்டங்களில் 18 வயதிற்குக் குறைவான குடித்தொகையின் வீதம் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. தொகை மதிப்பு 1981இல் $^{2}/_{5}$ பங்கிற்கும் கூடுதலான குடித்தொகை (41.6%) 18 வயதிற்கும் கீழ் காணப்பட்டவிடத்து தொகை மதிப்பு 2001இல் இதன் பங்கு குடித்தொகையில் 1/3 பங்கிற்கு (32.90) வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் குறைந்த வயதினர்களின் அளவு குறைந்தமைக்கு 1980களில் அறிவிக்கப்பட்ட தாழ்ந்த பிறப்பு வீதங்களே காரணம்.

✹ **இலங்கையின் இனரீதியான குடித்தொகைப் பங்கீடு**

இதில் குறிப்பிடதக்க அளவு மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை வேறுபட்ட இனத் தொகையினரிடையே பங்குகளின் பெயர்வு 0.2 இலிருந்து 1.3 வரையில் காணப்பட்டது.

இலங்கையின் குடித்தொகையும் அதன் பரம்பலும் காலத்திற்கு காலம் 1981வரை ஒழுங்காக மதிப்பிடப்பட்டாலும் 1981ற்கு பின் 2001 இலேயே ஒழுங்காக கணக்கெடுக்கப்பட்டது. இவ் குடிமதிப்பானது குடிதொடர்பான சில முக்கிய மாற்றங்களை காட்டியது. அவ் மாற்றங்கள் சில பண்புகளை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாக காணப்படுகின்றது.

**உசாத்துணைகள் :**

1. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை (2001)
2. சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் (பொன்விழா மலர்) (இலங்கை மத்திய வங்கி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய சந்தை

# Foreign Exchange forward market in Srilanka

**முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணியானது** ஒரு நாணயத்திற்கு எதிராக இன்னொரு நாணயத்தை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கு எதிர்கால விநியோகம் மற்றும் கொடுப்பனவுக்கான விலையை இன்றே நிர்ணயம் செய்வதற்கும் இருதரப்பினருக்குமான விலையை இன்றே நிர்ணயம் செய்வதற்கும் இரு தரப்பினரும் உடன்பட்டுக் கொள்ளும் ஒப்பந்தங்களாகும்.

முன்னோக்கிய விலைகள் வழமையாக அடிப்படையான சொத்தினை தொடர்ந்து பேணுவதற்கான செலவு அதாவது அடிப்படையான சொத்தின் உடமையாளர்களால் கொடுக்கல் வாங்கல் ஆரம்பமான காலத்திலிருந்து முதிர்ச்சிக் காலம் வரையில் செய்யப்பட்ட செலவுகள் மற்றும் பரிமாறிக் கொள்ளப்படும் இரு நாணயங்களுக்கு இடையிலான வட்டி வீத வேறுபாடு என்பவற்றால் நிர்ணயிக்கப்படுகிறது.

**கணிப்பீடும் முறை –**

**Calculating system**

முன்னோக்கிய செலாவணி வீதம் பின்வருமாறு கணிப்பிடப்படும்

$$F_t = S_t + V_t$$

$$V_t = r_t + U_t$$

இங்கு $F_t$ = முன்னோக்கிய செலாவணிவீதம் (Forward Exchange Rate)

$S_t$ = உடன் செலாவணி வீதம் (Spot Exchange Rate)

$r_t$ = வட்டி வேறுபாடு (Interest differential)

$U_t$ = இடர் நேர்வுக் கட்டணம் (Risk Premium)

முன்னோக்கிய சந்தையில் பொதுவாக மூன்று வகையான பங்கேற்பாளர்கள் (Participants) உள்ளனர்.

- இழப்பீட்டு கைகாப்பு ஏற்பாட்டாளர்கள் (Hedgers)
- ஊக வணிகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் (Speculators)
- நிதியியல் இடையீட்டாளர் (Financial intermediaries)

இங்கு நிதியியல் இடையீட்டாளர்களின் முக்கிய பங்கு முன்னோக்கிய ஒப்பந்தங்களை கொள்வனவு மற்றும் விற்பனை செய்வதாக காணப்பட்டது.



செல்வன் ஐ. ரூபதாசன்
13C A/L 2003 Com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றில் இலாபம் முன்னோக்கிய விலை கோரல் மற்றும் முன்னோக்கிய கேட்கப்பட்ட விலைகள் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு ஆகும்.

## சந்தையின் விருத்தி (Development of the market)

இலங்கையின் உடன் செலாவாணிச் சந்தையுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு செலாவணிக்காக முன்னோக்கிய சந்தை மிகச் சிறிதாகும். ஆனால் செலாவணிச் சந்தை 2000இன் இறுதிக் காலாண்டிலும், 2001ம் ஆண்டில் 1ம் காலாண்டிலும் செயலற்றுக் காணப்பட்டது. 2000ம் ஆண்டின் பிற்பகுதியில் வெளிநாட்டுச; செலாவணிச் சந்தையில் நிலவிய நிச்சயமற்ற தன்மை முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களை பெருமளவிற்கு குறைவடையச் செய்தது ஆனால் 2001ம் ஆண்டு ஜனவரியில் ரூபா மிதக்கவிடப்பட்டதைத் தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்ட முன்னெச்செரிக்கை வாய்ந்த நடவடிக்கைகள் வெளிநாட்டு செலாவணி சந்தைக்கு உறுதிப்பாட்டினை வழங்கிய போதும் முன்னோக்கிய செலாவணிச் செயற்பாட்டை ஊக்கம் இழக்கச் செய்தன. முன்னெச்செரிக்கை வாய்ந்த இந் நடவடிக்கைகளில் பெரும்பாலானவை தளர்த்தப்பட்டதை உடன் அடுத்து தொழிற்பாடுகள் தீவிரமடைந்து முன்னோக்கிய சந்தை செயற்பாட்டினை விரிவடையச் செய்தன.

2001ம் ஆண்டு பெப்ரவரியில் மொத்த முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல் மிகக் குறைவாக இருந்தது அதாவது 2.78 மில்லியன் அ.டொலாராக காணப்பட்டது. ஆனால் மத்திய வங்கியின் நடவடிக்கைகளை தொடர்ந்து உறுதிப்பாடு மீட்சியடைந்ததைத் தொடர்ந்து முன்னோக்கிய சந்தை பெருமளவு தீவிரமடைந்துள்ளது. அதாவது 56 மில்லியன் அ.டொலராக அதிகரித்தது.

முன்னோக்கிய சந்தையானது 2000ம்ஆண்டு பிற்பாகத்திலும் 2001ம் ஆண்டிலும் மிகைக் கேள்வியை எடுத்துக்காட்டின. இதற்கு காரணமாக வாடிக்கையாளரால் தோற்றுவிக்கப்பட்ட முன்னோக்கிய விற்பனைகளின் அளவு அதிகரித்து காணப்பட்டமையே இதற்கு காரணமாக அமைந்தது. அந்த வகையில் ரூபா மேலும் பெறுமானத் தேய்வடையும் என்ற எதிர்பார்ப்பில் பெரும்பாலான இறக்குமதியாளர்கள் அவர்கள் இருப்பினை காப்பு செய்வதற்கு முனைந்ததன் மூலம் இது தெளிவாக புலப்படுத்தப்பட்டது.

இங்கு முதிர்ச்சிக்கால நீடிப்பிற்கும் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களிலான நிச்சயமற்ற தன்மைக்கும் இடையில் எதிர்க்கணிய நேரடித்தொடர்பு காணப்படுகிறது. பங்கேற்பாளர்கள் பேரண்டப் பொருளாதார மாறிகளை எதிர்வுகூற முடியாதிருக்கின்ற போது எதிர்கால உடன் செலாவணி வீதங்களை மதிப்பிடுவதில் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். இத்தகைய நிலைமைகளில் குறுங்கால ஒப்பந்தங்களையே விரும்புவர். ரூபா மிதக்க விடப்பட்டதை உடனடுத்து ஒரு மாதத்திற்கு குறைந்த முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள் முன்னோக்கிய சந்தையில் அதிகரித்து காணப்பட்ட வேளையில் ஒரு மாத முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல் வீழ்ச்சியடைந்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மாதத்திற்கு மேற்பட்ட வகை வெகுவாக குறைவடைந்தும் காணப்பட்டது.

## செயற்திறன்மிக்க சந்தை (Efficient market)

செயற்திறன் மிக்க சந்தை கருதுகோளின்படி இன்றைய முன்னோக்கிய செலாவணிவீதம் முதிர்ச்சி நாளன்று உடன் வீதத்திற்கு சமனாக இருத்தல் வேண்டும். இன்றைய செலாவணிவீதம் அனைத்தும் தொடர்புபட்ட தகவல்களை உள்ளடக்கியிருப்பதனால் இன்றைக்கும் நாளைக்கும் இடையில் செலாவணிவீதம் மாற்றமடைவதற்கான ஒரு காரணமாக புதிய செய்திகள் / தகவல்கள் கிடைக்கப் பெற்றமை அல்லது எதிர்பார்க்கப்படாத நிகழ்வுகள் இடம் பெறாமையாக இருக்கும். இதில் ஏற்படுகின்ற கணிசமான மாறுபாடு அடையும் தன்மையை தவிர்க்க மத்தியவங்கி உடன் வீதங்கள், சீராக்கம் செய்யப்படுமாதலினால் முகாமை செய்யப்படும் செலாவணி வீத மிதக்கவிடல் முறையில் இவ்வேறுபாடு சுருங்கியதாக அமைந்தது. சந்தையில் எதிர்கால வீதங்களை மிகவும் துல்லியமாக முன் எதிர்வு கூறக் கூடியதாக அமையும். ரூபா மிதக்க விடப்பட்டதை உடனடுத்து முன்னோக்கிய வீதத்தின் முன்னெதிர்வு கூற முடியாது. பெருமளவில் அதிகரித்தும் ஒரு மாத முன்னோக்கிய வீதத்திற்கும், உடன் வீதத்திற்கும் இடையிலான வேறுபாடு ஒருமாத முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் முதிர்ச்சி நாளன்று நேர்க்கணியமானதாக அமைந்து முன்னோக்கிய ஒப்பந்தம் செய்யப்பட்ட வேளையில் எதிர் பார்க்கப்பட்டதைக்காட்டிலும் செலாவணிவீதம் அதிகரித்தளவில் பெறுமானத் தேய்வடைந்ததை எடுத்துக் காட்டியது.

கோட்பாட்டுரீதியில் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் நிச்சயமற்ற தன்மை முன்னோக்கிய ஒப்பந்தங்களுக்கான கேள்வியுடன் நேர்க்கணியமாகவும், வழங்கலுடன் எதிர்க்கணியமாகவும் தொடர்பு பட்டுள்ளது. இதன்படி நிச்சயமற்ற தன்மை, முன்னோக்கிய ஒப்பந்தங்களின் அளவு ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பு எந்தக் காரணிகளில் சந்தையில் ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதைப் பொறுத்தே அமையும். இலங்கையில் இக்கோட்பாட்டுக்கு 1½ வருடகால அனுபவம் இசைந்தே காணப்படுகின்றது. நிச்சயமற்ற தன்மை எழுகின்ற போது முன்னோக்கிய மிகைக்கும், வட்டி வேறுபாடுகளுக்கும் இடையிலான வேறுபாடு அதிகரித்த முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் அளவு வெகுவாக குறைவடைகின்றது. முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிச்சந்தையில் வழங்குனர்கள் ஆதிக்கம் செலுத்துவதுடன் இலங்கையில் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு வழங்கல் பக்கம் முக்கிய காரணியாக அமைந்துள்ளது. என்பது தெளிவாக புலப்படுத்தப்படுகின்றது. மாறாக நிச்சயமற்ற தன்மையானது வட்டி வேறுபாடுகள் மற்றும் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களின் அளவுகளிலான அதிகரிப்பு என்பவற்றிலேயே தங்கியிருக்கும்.

அண்மைக் காலங்களில் இதன் நேர்மாற்றம் உண்மையாக விளங்கிய போதிலும் பெறுமானத்தேய்வானது முன்னோக்கிய வீதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமாக குறிப்பிடப்பட்டிருந்த பெறுமானத் தேய்வைக் காட்டிலும் குறைவானதாகவே காணப்பட்டது. இந் நிலமையின் கீழ் முன்னோக்கிய சந்தையின் ஊடாக ஏற்றுமதியாளர்கள் அவர்களின் வெளிநாட்டு செலாவணி வருவாய்களை முற்காப்பு செய்ய முயற்சிக்கும் வேளையில் இறக்குமதியாளர்கள் அவர்களது இறக்குமதி கொடுப்பனவிற்கு காப்பினை பெறுவதிலிருந்து விலகிக் கொள்வர்.

இடர் காப்பின்மையின் மட்டுப்படுத்தல்கள் குறுகியதாக அமைந்து காப்பளிக்கப்படாத ஏனைய ஏதேனும் இருப்பு, நொஸ்ரோ கணக்குகளைப் பேணுதல் (Nostro Accounts) உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கான வெளிநாட்டு செலாவணியை வைத்திருப்பதற்கான வங்கியின் ஆற்றலை குறைவடையச் செய்வதனால் வங்கியினால் காப்பளிக்கப்படாத அத்தியவாசியமற்ற இருப்புக்களை வைத்திருக்க முடியாது. இதனால் வங்கிகள் காப்பளிக்கப்பட்ட உடன் அல்லது முன்னோக்கிய இருப்புக்களை கொண்டிருந்தாலன்றி சந்தையில் முன்னோக்கிய விலைகளை குறிப்பீடு செய்வதில்லை தேறிய திறந்த இருப்பு ஆரம்பத்தில் 2001ம்ஆண்டு மார்ச்சில் மூலதனத்தினதும், ஒதுக்கங்களினதும் 10%க்கும் அதனையடுத்து 2002ம் ஆண்டு மார்ச்சில் 15%க்கும் அதிகரிக்கப்பட்டமை முன்னோக்கிய சந்தை அபிவிருத்திக்கு உதவி அளித்திருக்கக்கூடும். முன்னோக்கிய செயற்பாடுகளை கட்டுப்படுத்திய மற்றுமொரு முன் மதிப்புடைய நடவடிக்கையாக வர்த்தக வங்கிகளால் அவற்றினது வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்படும் முன்னோக்கிய வெளிநாட்டு செலாவணிக்கு எதிராக 50% ரூபா வைப்புக்களை கொண்டிருக்க வேண்டுமென்ற தேவைப்பாடு காணப்பட்டது. இக் கட்டுப்பாடானது ஊக அடிப்படையிலான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களை அகற்றுவதற்கு உதவிய போதிலும் வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலுள்ள பங்கேற்பாளர் களிடையேயான முன்னோக்கிய ஒப்பந்தகளையும் ஊக்கமிழக்கச் செய்து இத்தேவைப்பாடு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் அதன் தாக்கம் தெளிவாக காணப்பட்டது.

முன்னோக்கிய சந்தையிலான சமச்சீரற்ற பரம்பலும் முன்னோக்கிய வீதங்களை இரு வழிகளில் பாதிக்கலாம். முன்னோக்கிய சந்தைப்பொறிமுறை, முன்னோக்கிய விலைகளில் செல்வாக்கு செலுத்தும் தகவல்கள் என்பனவற்றை வாடிக்கையாளர்கள் அறிந்திராவிடின வர்த்தக உண்டியல் மீதான அவர்களது செலாவணி வீத இடரினை முன்னோக்கிய சந்தையினூடாக காப்புச்செய்து கொள்வதற்கு அவர்கள் ஊக்குவிக்கப்பட மாட்டார்கள். எனவே சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு சந்தை பங்கேற்பாளர்களிடையே விழிப்புணர்வை அதிகரிப்பது முக்கியமான விடயமொன்றாகும்.

சந்தைப் பங்கேற்பாளர்கள் பணவீக்கத்தின் எதிர்காலப்போக்கு, எதிர்வு கூறப்பட்ட வட்டிவீதம், பொருளாதார வளர்ச்சி, சென்மதி நிலுவைகள், வெளிநாட்டு ஒதுக்குகள் ஆகிய தகவல்கள் கிடைத்தால் எதிர்கால செலாவணி வீதங்களை தெளிவாக அறிய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முக்கியத்துவம்

### (Importance)

வர்த்தக வங்கிகளால் வாடிக்கையாளர்களுக்கு குறிப்பீடு செய்யப்படும் முன்னோக்கிய கொள்வனவு மற்றும் விற்பனவு வீதங்கள் மீதான தகவல்கள் உள்ளடங்கலான பெருமளவு தகவல்களை நாளாந்தம் சந்தைக்கு வழங்குவதன் மூலம் முன்னோக்கிய சந்தையிலான சமச்சீரற்ற தகவல் பரம்பலினை குறைவடையச் செய்ய முடியும். வெளிநாட்டு செலாவணிக்கு எதிராக கடன்பெறும் வசதிகள், ஒரு நாணயத்திற்கு எதிராக இன்னொரு நாணயத்தை மாற்றும் வசதிகள் தற்போது இல்லை. ஆனால் அவற்றை அனுமதித்தால் ஏற்றுமதி வருவாய்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதினை ஊக்கப்படுத்தி மறுபுறத்தில் முன்னோக்கிய சந்தையை ஊக்குவிக்கும்.

இயக்கவிசை கொண்ட முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையொன்றின் அபிவிருத்தியானது இறக்குமதிக்கான பாரிய கொடுப்பனவுகள் செலாவணிவீதம் மாறுபாடடையும் தன்மையை குறைவடையச் செய்வதில் கணிசமான தாக்கத்தினை கொண்டிருக்கும் இலங்கையில் சந்தை குறுகியதாக காணப்படுவதனால் பாரிய இறக்குமதி கொடுப்பனவுகள் உடன் செலாவணி அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்பட்டால் அது செலாவணி வீதத்தில் அதிகரித்த தளம்பல்களை விளைவித்து சந்தையில் உறுதிப்பாடற்ற தன்மையை தோற்றுவிக்கலாம். ஆனால் அபிவிருத்தி அடைந்த சந்தையில் இத் தேவைப்பாட்டினை நீண்டகாலப் பகுதியில் திரட்டிக் கொள்வதன் மூலம் சந்தை உறுதிப்பாடு குழம்பாது தவிர்த்துக் கொள்ளலாம்.

முன்னோக்கிய சந்தை உடன் சந்தையின் செய்முறைகளிலும், நுட்பங்களிலும் பார்க்க சிக்கல் நிறைந்தவையாக காணப்படுகின்றது.

வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் செழிப்பிற்கு முக்கியமான சந்தையாக முன்னோக்கிய சந்தை விளங்குகின்றது. இதனால் சுயாதீனமாக மிதக்கவிடப்பட்டுள்ள செலாவணிவீத முறை ஒன்றைக் கொண்ட தற்கால சூழ்நிலையில் உறுதியான வெளிநாட்டு செலாவணிச் சந்தை ஒன்றை உருவாக்குவதற்கு முன்னோக்கிய சந்தையை அபிவிருத்தி செய்வது இன்றியமையாததாகும்.

**உசாத்துணை:-**
மத்திய வங்கி ஆண்டறிக்கை - 2001
சிறப்புக்குறிப்பு - 12

**பச்சை வரி** (Green tax)

சூழலை முன்னேற்றும் நோக்கிற்காக விதிக்கப்படுவது பச்சை வரியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மூலதனக் கணக்கினைத் தாராளமயமாக்கும் வாய்ப்பும் - இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையும்

மூலதனக் கணக்கின் தாராளமயப்படுத்தலானது நாடுகளுக்கிடையேயான மூலதன அசைவினை அனுமதிக்கின்றது. இது முதலீடுகளை விஞ்சிய சேமிப்புக்களை கொண்டுள்ள நாடுகளில் உள்ள முதலீட்டாளர்கள் அவர்களின் முதலீடுகளின் மீது உயர்ந்த வீத வருவாயை உழைப்பதற்கு இயலச் செய்யும் விதத்தில் அவர்களுக்கு கூடியளவு முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குகிறது. மாறாக பொருளாதார அபிவிருத்தியின் விரும்பத்தக்க மட்டத்தினை பெறுவதற்கு தேவைப்படும் அனைத்து முதலீடுகளையும் நிதியிடுவதற்கு போதுமான உள்நாட்டு சேமிப்புக்களை கொண்டிராத நாடுகளின் முதலீட்டு - சேமிப்பு இடைவெளியை இச் செயற்பாட்டு முறை நிரப்புகிறது. கிழக்காசிய நெருக்கடியின் போது இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா மற்றும் தென்கொரியா போன்ற மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகள் குறுகிய காலமொன்றில் பாரிய மூலதன வெளிப்பாய்ச்சல்களுக்கு உட்பட்டன. எனினும் சிங்கப்பூர், கொங்கொங் மற்றும் தாய்வான் போன்ற சில நாடுகள் இந் நெருக்கடியை திறம்பட எதிர்த்து நின்றன. இந் நெருக்கடிக்கு அவர்கள் பதிலிறுத்த விதத்தில் காணப்பட்ட வேறுபாடுகளுக்கு நிதியியல் முறையின் ஆற்றல், அளவில் காணப்பட்ட வேறுபாடுகளே பெருமளவிற்கு காரணம் என விவாதிக்கப்பட்டு வருகிறது.

சொத்துவிலை அதிகரிப்புக்களுக்கு காரணமான உண்மைச் சொத்து போன்ற இலாபமளிக்காத ஊக நடவடிக்கைகளுக்குள் மூலதன உட்பாய்ச்சல்கள் நகர்ந்தன. இந் நாடுகளே இந் நெருக்கடியினால் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தன. இந் நாடுகளின் உள்நாட்டு நிதியியல் துறையின் தாராளமயமாக்கலானது நலிவுடைய நிதியியல் நிறவனங்களின் அதிகரிப்பினை அனுமதிக்கும் வகையில் போதுமானளவு வலுவான முன்மதியுடைய ஒழுங்கு விதிகள் மற்றும் மேற்பார்வைகளினால் முழுமைப்படுத்தப்படவில்லை. இந் நிறுவனங்கள் பெரும்பாலும் குறுங்கால மூலதனத்தினை பெறுவதுடன் பெரும்பாலும் நீண்டகால முதலீடுகளுக்கு நிதியிடுகின்றன. அவற்றின் வருவாய்கள் உள்நாட்டு நாணயங்களிலேயே இருந்தன. இதன் விளைவாக நாணயப் பொருத்தப்பாடின்மை காணப்பட்டது. நாணயங்கள் மீதான ஊகத் தாக்குதல்களின் காரணமாக முதலீட்டாளர்கள் நம்பிக்கை



**செல்வன் வை. சதீஸ்குமார்**
13B வர்த்தகப்பிரிவு - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்ததனால் பாயச்சல்கள் முழுமையாக நேர்மாற்றமடைந்து நிறுவனங்கள் தகர்ந்து போய் நிதியியல் துறைக்கு பாரிய சேதங்களை விளைவிக்கின்றன.

பொருத்தமான ஒழுங்குமுறையான சீர்திருத்தங்களுடன் திறந்த மூலதனக் கணக்கிலிருந்தான நன்மைகளை இலங்கையும் பெறமுடியும். இலங்கையில் மூலதனக்கணக்கு ஓரளவிற்கு தாராளமயப் படுத்தப்பட்டுள்ளது. 1977ல் பொருளாதார தாராளமயப்படுத்தல் செயல் முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மூலதனக் கணக்கினை ஓரளவிற்கு தாராளமயப்படுத்துவதற்கான படிப்படியான செயலாற்றமானது வர்த்தக வங்கிகள் வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டமையுடன் 1978ல் தொடங்கியது. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் நிறுவப்பட்டமையானது. எந்த ஒரு வதிவற்றோருக்கும் அல்லது முதலீட்டுச்சபை கம்பனி போன்ற ஒப்புதலளிக்கப்பட்ட வதியும் தொழில்முயற்சிகளுக்கும் கடன்களையும், முற்பணங்களையும் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டமையானது இம் முன்னேற்றத்தில் மேலும் ஒரு படியாகும் அதன் பின்னர் மூலதனக் கணக்கு தாராளமயப்படுத்தலின் செயற்பாடு மெதுவடைந்தது.

இச் செயற்பாட்டின் இரண்டாவது கட்டம் 1990களின் தொடக்கத்தில் அறிமுகப்பட்டதுடன் மூலதனக்கணக்கு தாராளமயப் படுத்தலில் விரைவான முன்னேற்றமொன்று எய்தப்பட்டது.

**முக்கிய அபிவிருத்திகள் வருமாறு:**

1) 1990ம் ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ள விலக்கல்கள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய வெளிநாட்டு கம்பனிகளிலுள்ள பங்கு களிலுள்ள தமது முதலீடுகளை வழங்கப்பட்ட பங்கு மூலதனமான 40சதவீதத்திலிருந்து 100சதவீத்திற்கு அதிகரிப்பதற்கு அனுமதிக்கபட்டனர். வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் கொள்வனவு செய்யப்படும் பங்குகளின் மீதான 100 சதவீத மாற்றல்வரி நீக்கப்பட்டது.

2) 1990ம் ஆண்டில் கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் முதலீடுகளுக்கு வசதி செய்யும் முகமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்கு முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும் வர்த்தக வங்கிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

3) 1994ம் ஆண்டில் ஏற்றுமதிப் பணப் பெறுகைகள் தொடர்பான மீளவனுப்பல்கள் மற்றும் சமர்ப்பித்தல்கள் ஒழிக்கப்பட்டன.

4) 1995ம் ஆண்டில் வர்த்தக வங்கிகள் அவற்றின் மூலதன மற்றும் ஒதுக்குகளில் 15சதவீதம் வரையில் வெளிநாட்டுக் கடன்களை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டன.

5) 1996ம் ஆண்டில் தனியார்துறை நிறுவனங்களுக்கு அவை வெளிநாடுகளில் கட்டுப்பாடற்ற மிகச் சுதந்திரமான முறையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு விடயங்கள் ஒவ்வொன்றினதும் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டன.

6) 2001ம் ஆண்டில் வதிவற்றோர் டொலரில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களில் முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப் பட்டனர்.

7) 2002ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் அதிகாரசபையின் ஒழுங்கு விதிகளுக்குட்பட்டு வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்களின் மீதிருந்த பெரும்பாலான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு முன்மொழிந்தது.

இலங்கையில் மூலதனப் பாய்ச்சல்களின் மீதான ஒழுங்கு விதிகள் பின்வரும் முக்கிய துறைகளில் மட்டும் இன்னமும் பேணப்படுகின்றன.

1) கம்பனி கடனீட்டுப் பத்திரங்கள் போன்ற தனியார் துறையினால் வழங்கப்பட்ட நிலையான வருமானப் பிணையங்களில் வதிவற்றோர் முதலீடுகள்

2) வெளிநாடுகளிலிருந்து குறுங்கால மற்றும் நீண்டகால தனியார் கடன்பாடுகள்

3) வதிவோரின் வெளிநாட்டு முதலீடுகள்

இனி இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை வர்த்தக முதலீட்டு செயலாற்றம் பற்றிய மதிப்பீட்டை எடுத்து நோக்குவோம்.

இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இலங்கை சனாதிபதியினாலும், இந்திய பிரதமரினாலும் 1998ம் ஆண்டு டிசெம்பர் 28ல் கைச்சாத்திடப்பட்டு 2000ல் செயற்பாட்டிற்கு வந்தது. இலங்கை 2000ம்ஆண்டு பெப்ரவரியிலும், இந்தியா 2000ம்ஆண்டு மார்ச்சிலும் தீர்வைச் சலுகைகளை நடைமுறைப்படுத்தின. இவ் உடன்படிக்கையின் கீழ் அனுமதிப்பங்கு மட்டுப்படுத்தல்களுக்கு உட்பட்டுள்ள தேயிலை மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகள் தீர்வைச் சலுகைகளின் கீழ் 2000ம் ஆண்டு ஏப்ரலில் தொடங்கின.

இரு நாடுகளும் சில பொருட்கள் மீதான தீர்வைகள் முழுவதையும் உடனடியாக நீக்கிய வேளையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களுக்கு பகுதியளவு சலுகைகள் வழங்கப்பட்டன. எனினும் முக்கிய உள்நாட்டு கைத்தொழில்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு என்பவற்றுக்கு அச்சுறுத்தலாக அமையலாமென்ற அக்கறைகளின் காரணமாக இவ் உடன்படிக்கை சில பொருட்களை ஏதேனும் சலுகைகளைப் பெறுவதிலிருந்து விலக்கி வைக்கின்றது.

இந்தியா இலங்கையின் முக்கியவொரு வர்த்தகப் பங்காளராகும். 2001ம் ஆண்டு இலங்கையின் இறக்குமதிகளில் இந்தியா முதலாவது இடத்தையும் அதன் ஏற்றுமதிகளில் பதினோராவது இடத்தையும் வகித்து இந் நாட்டிற்கான ஏற்றுமதியில் இலங்கை கொண்டுள்ள மிகப்பெரும் வாய்ப்பினை எடுத்துக் காட்டியது. இந்தியாவிற்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதிகள் 24சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இந்தியாவிலிருந்தான மொத்த இறக்குமதிகள் சிறிதளவால் (0.3சதவீதம்) அதிகரித்தன. இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் ஐக்கிய அமெரிக்க டொலர் 16.2 மில்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியனாக விளங்கி 2001ம் ஆண்டில் இந்தியாவுக்கான மொத்த ஏற்றுமதிகளில் 23சதவீதமாக காணப்பட்டது. இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள் 2001ம் ஆண்டில் 88 சதவீத்ததினால் அதிகரித்தன. ஏற்றுமதிகளுள் கழிவுத்தாள்கள், கணனிப்பாகங்கள், ஐஸ்கிறீம் இயந்திரங்கள், பல மடிப்புக்களைக் கொண்ட தாள் சாக்குகள், இறைச்சி உற்பத்திகள் என்பன தீர்வை இன்றி அனுமதிக்கப்பட்டன. தேயிலை, பட்டை தீட்டப்பட்ட பளிங்குக்கல் பாளங்கள், மட்பாண்ட பொருட்கள், செப்பு கழிவுகள், ஊசியிலை மரப்பிசின், பார உருக்கு கழிவுகள் என்பன 50 சதவீத தீர்வை சலுகைகளைப் பெற்றன.

**இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிச் செயலாற்றம்**

| உற்பத்தி | ஐ.அ.டொலர் 2001 | மில்லியன் 2001 |
|---|---|---|
| இலங்கையிலிருந்தான மொத்த ஏற்றுமதிகள் | 58.04 | 71.99 |
| இலங்கை இந்திய வரத்தக உடன்படிக்கைகீழான இலங்கையின் ஏற்றுமதிகள் | 9.21 | 16.23 |
| தாள் மற்றும் கழிவுத்தாள் | 4.28 | 4.23 |
| கழிவு (உருக்கு / அலுமினியம் / ஈயம்) | 1.65 | 0.27 |
| செப்புக்கழிவு | 0.08 | 1.03 |
| தேயிலை | 1.13 | 0.66 |
| கணனிப் பாகங்கள் | 0.62 | 0.88 |
| பாரிய உருக்குக் கழிவு | 0.00 | 0.60 |
| தளபாடம் | 0.00 | 0.57 |
| ஐஸ்கிறீம் இயந்திரங்கள் | 0.26 | 0.90 |
| பளிங்குக் கற்களும், மட்பாண்ட பொருட்களும் | 0.16 | 1.30 |
| மருந்தாக்கல் பொருட்கள் | 0.11 | 0.17 |
| ஊசியிலைமரப் பிசின் | 0.01 | 0.67 |
| பல்மடிப்பு தாள் சாக்குகள் | 0.05 | 0.32 |
| மீள் உருக்கப்பட்ட உருளைக் கம்பிகள் | 0.00 | 0.21 |
| மீள் உருக்கப்பட்ட ஈயப்பாளங்கள் | 0.00 | 0.39 |

அனுமதிப்பங்கின் கீழான ஏற்றுமதிப் பொருட்கள் தாழ்வடைந்து காணப்பட்டன. இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 2000ம் ஆண்டில் 11,250 மெற்றிக் தொன்கள் கொண்ட அனுமதிப்பங்கில் 457மெற்றிக்தொன்கள் தேயிலையயும், 2001ம் ஆண்டில் 15000மெற்றிக் தொன்களில் 480 மெற்றிக் தொன்கள் தேயிலையையும் இலங்கை ஏற்றுமதி செய்தது. இவ் ஏற்றுமதிகள் இலங்கையின் ஒவ்வொரு ஆண்டு மொத்த தேயிலை ஏற்றுமதிகளின் 0.16 சதவீதமாக காஎப்பட்டன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயிலை ஏற்றுமதிகளில் 90 சதவீதத்திற்கும் மேலானவை தொகை வடிவிலானதாக காணப்பட்டன. எஞ்சியவை பச்சைத்தேயிலை, பொதி செய்யப்பட்ட கருந்தேயிலை, உடன் தேயிலை மற்றும் வாசனையூட்டப்பட்ட தேயிலை பைகளின் மாதிரிகள் சில என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு புறம்பாக எதுவித தீர்வைச் சலுவைகளுமின்றி இலங்கை 2001ம் ஆண்டில் 467 மெற்றிக் தொன்கள் தேயிலையை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தது.

எனினும் 2001ம் ஆண்டில் 69.265சட்டைகளும் 312.296 சோடிக் கையுறைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ் ஏற்றுமதிகளின் பெறுமானம் ஐக்கிய அமெரிக்க டொலர் 0.2 மில்லியனாக காணப்பட்டது. 2000ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2001ம் ஆண்டில் மேம்பாடொன்றைக் காணப்பட்ட போதிலும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுகள் 8 மில்லியன் ஆடைத்துண்களுக்கான அனுமதிப் பங்கைக் காட்டிலும் வெகுவாக குறைவடைந்து காணப்பட்டன. அனுமதிப் பங்கின் கீழான 8 மில்லியன் ஆடைத்துண்டுகளில் 6மில்லியன் துண்டுகள் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட புடவைகளைப் பயன்படுத்தி இருத்தல் அவசியம். பாதிப்புக்களை விளைவிக்கலாம். எனக் கருதப்படும் ஆடை வகைகளின் மீது சிறப்புத் தீர்வை விதிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்தான மொத்த இறக்குமதிகள் 2001ம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலர் 602 மில்லியனாக விளங்கி 200ம் ஆண்டில் ஐ.அ.டொலர் 600 மில்லியனை விட சிறிதளவு அதிகரித்து காணப்பட்டன. எதிர்மறைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள அத்தியவசிய உணவுப் பொருட்களான பகுப்பு, பெரிய வெங்காயம், சீனி, மிளகாய் என்பன 2001ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதிகரித்த பெறுமானம் கொண்ட முதல் பத்து விடயங்களிடையே காணப்பட்டன. எதிர்மறைப்பட்டியிலிலுள்ள பொருட்களின் இறக்குமதிகள் 2001ம் ஆண்டில் 13.7சதவீதத்தினால் ஐ. அ.டொலர் 210மில்லியனிற்கு அதிகரித்தது.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் முதலீட்டுச்சபை 2000ம் ஆண்டில் 5வெளிநாட்டு முதலீட்டு செயற்திட்டங்களுக்கும், 2001ம் ஆண்டில் மேலும் 6 செயற்திட்டங்களுக்கும் ஒப்புதலளித்தது. இச் செயற்றிட்டங்களிலிருந்து பெறப்பட்ட மொத்த முதலீடுகள் ஐ.அ.டொலர் 31.5மில்லியனாக காணப்பட்டது. இவற்றுள் நான்கு செயற்திட்டங்கள் 2001ம் ஆண்டில் ஐ.அ.டொலர் 4.4மில்லியன் மொத்த முதலீட்டுடன் தொடங்கப்பட்ட வேளையில் ஐ.அ. டொலர் 25.3மில்லியன் முதலீட்டுடனான ஏனைய 5 செயற்றிட்டங்களுக்கு முதலீட்டுச்சபையுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

தற்போது வழங்கப்பட்டுள்ள சலுகைகளிலிருந்து இலங்கை அதி உச்சப்பயனை பெற்றுக் கொள்வதனை கட்டுப்படுத்தும் விடயமாக இந்தியாவில் நடைமுறையிலுள்ள தீர்வைகள் அல்லாத தடைகள் காணப்படுகின்றன. இந்தியாவிலுள்ள சிறு உற்பத்தியாளர்களுக்கு பல்வேறு வகைப்பட்ட மறைமுக உதவிக் கொடுப்பனவுகளை இந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு வழங்குவது தெளிவாகத் தெரிகின்றது. உதாரணமாக இந்தியாவிலுள்ள பல்வேறு உள்ளூர் உற்பத்தியாளர் பிரிவுகளுக்கு தாழ்ந்த உற்பத்தி வரி வீதங்களை விதிப்பதனை குறிப்பிடலாம். இந்திய சுங்க அதிகார சபையின் இடைஞ்சல் மிக்கதும் ஒளிவு மறைவானதுமான பரிசோதனை நடைமுறைகள் குறித்து முறைப்பாடுகள் இருக்கின்றன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் உள்ளடக்கம் மற்றும் நடைமுறைகள் குறித்த தெளிவான அறிவை இந்திய சுங்க அலுவலர்கள் கொண்டிராமை மூல உற்பத்தி தேவைப்பாடு விதியை நிறைவேற்றும் பொருட்டு இலங்கை அதிகாரிகளினால் வழங்கப்படும் மூல உற்பத்திச் சான்றிதழ்களை எற்காமை, சுங்க பெறுமதியிடலிலான முறைகேடுகள் என்பன இந்தியாவுடனான வர்த்தகத்திற்கான தடைக்கற்களாக அமைந்துள்ளதென இலங்கை ஏற்றுமதியாளர்கள் முறையிடுகின்றனர்.

இந்திய அரசு 2001ம் ஆண்டுக்கான அதன் வரவு செலவுத்திட்டத்தினூடாக வர்த்தக கொள்கையில் பல மாற்றங்களை மேற்கொண்டது. சிறப்பு உற்பத்தி தீர்வையை கணக்கிடுவதற்கான அடிப்படைத்தளம் இறக்குமதி பெறுமானத்திலிருந்து அதி கூடிய சில்லறை விலைக்கு மாற்றியமைக்கப்பட்டது. சிறப்பு உற்பத்தி தீர்வையின் மூன்று பிரிவு வீதங்களான 8சதவீதம், 16சதவீதம், 24சதவீதம் என்பன 16சதவீதத்தால் ஒன்றிணைக்கப்பட்டு அனைத்து இறக்குமதிகளுக்கும் 4சதவீத மேலதிக வரியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இந்தியா தேயிலை (15% - 70%) தோல் உற்பத்திகள் (35% - 90%) நூடில்ஸ் (35%-100%) ஆகிய பெரும்பாலான பொருட்களுக்கான தீர்வையை அதிகரித்தது. இந்த கொள்கை மாற்றங்கள் இந்திய உற்பத்தியாளர்களுக்கான பாதுகாப்பினை உயர்வடையச் செய்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கை ஏற்றுமதியாளர்கள் எதிர்பார்த்த அனுகூலமான நிலையினையும் குறைவடையச் செய்துள்ளது.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலை வசதிப்படுத்துவதற்கு இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பினை அதிகரிப்பதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ் உடன்படிக்கையில் தீர்வையில்லாத ஏனைய கட்டணங்கள் அல்லது தீர்வை அல்லாத தடைகள் என்பன பற்றி எதுவும் குறிப்பிடப்படாத போதிலும் இது அத்தகைய ஏதேனும் தடைகளை நீக்குவது அல்லது தீர்வையை அறிமுகப்படுத்துவதனூடாக அவற்றுக்கு தீர்வு காண்பதற்கு கூட்டுக்குழு பேச்சுவார்த்தையில் ஈடுபடுதவற்கு இவ் உடன்படிக்கை வசதியளிக்கிறது. கூட்டுக்குழு அதனது அடுத்த கூட்டத்தில் இரண்டாவது கட்ட நடைமுறைப்படுத்தலின் கீழ் இந்தியா உடனடியாக தீர்வைகளை குறைத்தல், அடிப்படை தீர்வை வீதங்களானது உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்ட காலத்தில் நடைமுறையிலிருந்த வீதங்களென தீர்மானித்தல் மற்றும் இந்தியவிற்கான இறக்குமதிகள் மீதான சிறப்புத் தீர்வைகளை நீக்குதல் போன்ற பல விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் ஆபிரிக்க வளர்ச்சி மற்றும் வாய்ப்புக்கள் சட்டம் என்பனவற்றின் கீழ் முறையே மெக்சிக்கோ மற்றும் சில துணைசாரா நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்கு தீர்வையின்றி இறக்குமதி செய்வது போல் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான ஆடை இறக்குமதிகளை படிப்படியாக தீர்வையின்றி இறக்குமதி செய்வதற்கான சாத்தியங்களை ஆராய்ந்தறிவது முக்கியமாகும். இதைப்போன்ற புடவை மூல உற்பத்தி விதி தொடர்பான வரையறை மற்றும் நுழைவு மையங்கள் மீதான கட்டுப்படுத்தல்கள் என்பன உடன்படிக்கையிலிருந்து அகற்றப்படல் வேண்டும். இரு நாடுகளின் மைய சம்மேளனங்கள் இரண்டினதும் தீவிரமான பங்கேற்பினை குறிப்பாக கூட்டு மேம்படுத்தல் பிரச்சார செயற்பாடுகளை முன்னெடுத்தல், தரவுத்தளம் ஒன்றினை பேணி தகவல்களை பரப்புதல் மற்றும் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் கிரமமான அடிப்படையில் சந்தைத் தகவல்களை வழங்கல் என்பவற்றை ஊக்குவித்தல் வேண்டும். வாணிபத் தொடர்புகளை ஊக்கவித்து நடைமுறைகளை இலகுபடுத்துவதற்கென இரு பகுதியினரும் வாணிப விசா அனுமதி வழங்கலை துரிதப்படுத்துவற்கு எளிமையானதும் செயற்றிறன் மிக்கதுமான முறையொன்றை அறிமுகப்படுத்த முடியும்.

இப் பிரச்சனைகளுக்கான காலதாமதமற்ற தீர்வு இரு நாடுகளுக்கும் இடையிலா வர்த்தகத்தின் விரிவாக்கத்திற்கு பெருமளவு வழி வகுக்கும். அத்தகைய விரிவாக்கம் 2002ம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார மீட்சியை துரிதப்படுத்துவது மட்டுமன்றி குறிப்பாக கைத்தொழில் நாடுகளின் எறிவு செய்யப்பட்ட மந்தமான மீட்சி மற்றும் ஏனைய நாடுகளுக்கிடையே தோற்றம் பெற்றுவரும் வர்த்தகக் கூட்டணி அமைப்புக்களால் விளைவிக்கப்படக் கூடிய மோசமான தாக்கம் என்பவற்றுக்கு மத்தியிலும் எதிர்கால பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களை மேம்படுத்தும்.

**உசாத்துணை நூல்:**
2001ம் ஆண்டு மத்தியவங்கி ஆண்டறிக்கை
சிறப்புக் குறிப்பு 11,13

## உண்மைச் செலவுக் கோட்பாடு

பொருட்கள் பணிகளின் உற்பத்திக்கு ஆதரவளிக்கும் பொருட்டு கடன்களை வழங்குவதற்கு வங்கித்துறைக்குச் செய்யப்படும் ஒதுக்கங்கள் பணவீக்கத்தை ஏற்படுத்தாது என விளக்குவது உண்மைச் செலவுக் கோட்பாடாகும். இது தற்போது நிராகரிக்கப்பட்ட ஒரு கோட்பாடாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக ஜோதி வெளியீட்டு மலர் சிறப்புற மலர
யூனியன் அஸ்யூரன்ஸ் ஸ்தாபனத்தின் நல்வாழ்த்துக்கள்

யாழ் மக்களின் நம்பிக்கைக்குரிய காப்பறுதிக் கம்பனியாக திகழ்வது

# யூனியன் அஸ்யூரன்ஸ் ஸ்தாபனம்

யாழ் மண்ணில் முதன் முதலாக காலடிபதித்து ஆரம்ப காலம் முதலே மக்களின் நம்பிக்கையை பெற்று, தற்போது யாழ் குடாநாட்டிலேயே முன்னோடியாக திகழும் எங்கள் யூனியன் அஸ்யூரன்ஸ் ஸ்தாபனம் மேன்மேலும் வளர தங்கள் ஆசியை எதிர்நோக்கும்

யூனியன் அஸ்யூரன்ஸ் ஸ்தாபன
யாழ் கிளை
அலுவலர்கள்

யூனியன் அஷ்யூரன்ஸ்

வணிக கலையின் வளர்மிகு
ஜோதியே வருக வருக

# Dart Enterprise
# டாட் என்ரபிறைஸ்

அன்பளிப்புப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள்
மின்சாரப் பொருட்கள் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

11,12,நவீன சந்தை,
உட்புறம், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 2223048


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதியின் கதிர்வீச எம்
வாழ்த்துக்கள்

இ.ச.பேரம்பலம் சகநிறுவனம்

இ.ச.பேரம்பலம் சகநிறுவனம்

T.Vடெக், றேடியோ வீடியோ,
ஓடியோ கருவிகள், கசெற்
வகைகள்
மணிக்ககூடுகள், பிலிம்றோல்,
மிதிவண்டி,
மிதிவண்டி உதிரிப்பாகங்கள்,
போன்ற மற்றும்
அழகு சாதனப் பொருட்கள்
விற்பனையாளர்.





50, 52, 54 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

வணிகஜோதி பொலிவுற
வாழ்த்துக்கள்

புஸ்பா
கொம்பினிகேசன்

192, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்



ஜோதியே தொடர்ந்து
பிரகாசிக்க
வாழ்த்துக்கள்

RUBA
VERSATILE
TRADES

No. 104, Stanley Road,
Jaffna
T.P. No: 2479

ஜோதியே நீ
நாற்றிசையும்
உலாவர வாழ்த்துக்கள்

ASEERVATHAM STORES

காகிதாதிகள், எழுதுகருவிகள்
திருமண அழைப்பிதழ்கள்
சோடனைப் பொருட்கள்

மொத்த.சில்லறை
வியாபாரிகள்



ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்
61, பெரியகடை
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best wishes for
Vanika gothy

# Jeisheba Agency

**General Hardware Merchants**

Agent For:
Tokyo Cement Company(Lanka)Ltd.
Kesewatta Marketing Services(Pvt) Ltd
S.Lon Lnaka (pvt) Ltd.
CIC paints Ltd.

# ஜெசீபா ஏஜென்சி

Tel: 021-2407
Fax: 021 – 2140
132,Stanly Road, Jaffna

வணிக ஜோதி தொடர்ந்து
வெளிவர
வாழ்த்துக்கள்



# ஹரினி ஹாட்வெயர்





164, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

வணிக ஜோதியே உன் புகழ்
எங்கும் பரவ எம்
நல்வாழ்த்துக்கள்

# சீமாட்டி

புடவைக்கடல்



அனைத்துப் புடவைகளின்
மொத்த சில்லறை
வியாபாரிகள்



# Seemati

Dealers in Textile
Fancy Goods
No.122,Power House Road, Jaffna

வணிக ஜோதியின் மலர்ச்சிக்கு
எங்கள் வாழ்த்துக்கள்

# பூபாலசிங்கம் புத்தகசாலை





4Aஆஸ்பத்திரி
வீதி
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை படைத்திட வழி பல
தந்த வணிகஜோதி
சர்வமும் நீயே.



யாழ் நகரில்
விளையாட்டு உபகரணங்களை
விற்பனை செய்வதில்
முன்னணி வகிப்பவர்கள்

# ஜொனெக்ஸ்
## மல்ரி பலஸ்



76, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உறுதியும் உத்தரவாதமும்
உள்ள
22கரட் தங்க வைர
நகைகளைப் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

# சாரங்கா
## நகைமாடம்

Head office:
**Arul Murugan Nahai Akam**
96/1, Kasthuriar Road, Jaffna
அருள் முருகன் நகைமாடம்
96/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை:
**சாரங்கன் நகை மாடம் அன் சென்ரர்**
**Sarangan Nagai madam & center**
45, Kasthuriar Road, Jaffna

# லாவண்யா
பல், மூக்கு
கண்ணாடி
அகம்

கொடிக்கம்ப வீதி
நெல்லியடி
லெக்ஷ்சுமி தியேட்டர் அருகில்

552, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
(ஆஸ்ப்பத்திரி வைரவர்
கோயில் முன்பாக)

நெல்லியடியில் பார்வையிடும்
நேரம்
செவ்வாய், வியாழன், சனி
நேரம்: 8.00-12.00மணி

வணிகஜோதியே
நீ ஒளிர்க

# DMI
## கல்வி நிறுவனம்

வர்த்தக, கலை
A/L வகுப்புக்கள்

சிறப்பாக
நடைபெறுகின்றன.



ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III.கணக்கீடு



- காசுப்பாய்ச்சல்
- பெறுமானத்தேய்வுக் கணக்கீட்டு நடை-முறை
- இலங்கை கணக்கீட்டு நியமம் - 36
- மேந்தலைக் கிரயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசுப் பாய்ச்சல் கூற்று

SLAS – 09க்கு அமைய காசு என்பது கையில் உள்ள காசினையும் வங்கியில் கேள்வி வைப்புக்களில் காணப்படும் காசினையும் உள்ளடக்கியது ஆகும்.

### காசுப் பாய்ச்சல்

### Cash flow

காசு காசுக்கு சமனானவற்றின் உட்பாய்ச்சல்களினையும் வெளிப்பாய்ச்சல்களினையும் காசுப் பாய்ச்சல் னப்படும்.

### காசுக்கு சமனானவை

### Cash Equivalents

உயர் திரவத் தன்மை உடையதும் விரைவில் பணமாக மாற்றக் கூடியதுமாக இருப்பதுடன் அவ்வாறு மாற்றும் போது ஆபத்துக் குறைவானதுமான குறுங்கால முதலீடுகளே காசுக்கு சமனானவை எனப்படும்.

உதாரணம்:-
திறைசேரி உண்டியல்
வருமதி உண்டியல்

## காசுப் பாய்ச்சல் கூற்று – Cash flow Statement

நிறுவனம் ஒன்று குறிப்பிட்ட காலப்பகுதி ஒன்றிற்கான காசுப் பெறுவனவுகளினையும் காசுக்கொடுப்பனவுகளினையும் காட்டுகின்ற கூற்றே காசுப் பாய்ச்சல் கூற்று எனப்படும். இது பின்வரும் 02 அடிப்படையில் தயாரிக்கப்படலாம்.

## நேர்முறை நேரில் முறை

### நேர்முறை – Direct Method

மொத்தக் காசுப் பெறுவனவுகளின் விடயங்களினையும் மொத்தக் காசுக் கொடுப்பனவுகளினையும் காட்டக் கூடிய வகையில் தயாரிக்கப்படும் கூற்று நேர்முறை காசுப்பாய்ச்சல் கூற்று எனப்படும்.

### காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிப்பதன் நன்மைகள்

1) நிறுவனத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளிலிருந்தும் பெறப்பட்ட தேறிய காசினை தனித் தனியே அறிந்து கொள்ளலாம்.
2) அதிகளவு இலாபம் உழைத்தும் பங்குதாரர்களுக்கு இலாபம் வழங்குவதற்கு போதியளவு காசு இல்லாதிருக்குமாயின் அதற்கான காரணங்களினை கண்டு கொள்ளலாம்
3) நிறுவனத்தினால் காசு/காசுக்குச் சமனானவற்றினை தோற்றுவிக்கும் ஆற்றலினை கண்டு கொள்ளலாம்.
4) நிறுவனங்களுக்கிடையில் அதன் செயற்பாட்டு செயற்திறனை கண்டு கொள்ளலாம்.



செல்வி இ. ராஜபிரதீபா
13B வர்த்தகப்பிரிவு - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்முறை - Direct method

வரையறுக்கப்பட்ட x Com (நேர்முறை) 31/12/2001ல் முடிவுற்ற
ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள்** | | |
| வாடிக்கையாளரிடமிருந்து பெற்றது | XXX | |
| ( - ) வழங்குனருக்கு கொடுத்தது | (XXX) | |
| ( - ) நிர்வாக பங்கீட்டு செலவுகள் | (XXX) | |
| | XXX | |
| ( - )செலுத்திய வருமான வரி | (XXX) | |
| ( - )செலுத்திய வட்டி | (XX) | |
| செயற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறியகாசு | | XXX |
| முதலீட்டு நடவடிக்கைகள் | | |
| நிலையான சொத்து கொள்வனவு | (XXX) | |
| நிலையான சொத்து விற்பனை | XXX | |
| ஊழியருக்கு வழங்கப்பட்ட கடன் | (XXX) | |
| மீளப் பெற்ற ஊழியர் கடன் | XXX | |
| பெற்ற முதலீட்டு வட்டி வருமானம் | XXX | |
| முதலீட்டு நடவடிக்கையில் தேறிய காசு | | XXX |
| **நிதியிடல் நடவடிக்கை** | | |
| பங்கு வழங்கல் | XXX | |
| பங்கு மீட்பு | (XXX) | |
| நீண்டகாலக்கடன் பெற்றது | XXX | |
| குறுங்காலக் கடன் திருப்பிச் செலுத்தியது | (XXX) | |
| செலுத்திய பங்கிலாபம் | (XXX) | |
| நிதியிடல் நடவடிக்கையில் தேறிய காசு | | XXX |
| காசு காசிற்கு சமனானவற்றின் தேறிய ↑↓ | | XXX |
| ஆரம்ப காசு காசுக்கு சமனானவை | | XXX |
| இறுதிக் காசு காசுக்கு சமனானவை | | XXX |

**செயற்பாட்டு நடவடிக்கைகள்:**

### (Operating Activities)

நிறுவனத்தின் பிரதான வருமானத்தினை தோற்றுவிக்கும் செயற்பாடுகளில் இருந்து உருவாக்கப்படும் நடவடிக்கையே செயற்பாட்டு நடவடிக்கைகள் எனப்படும்.

உ + ம்: பொருட்கள் சேவைகள் விற்பனைமூலம் பெறப்படும் தொகை
ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு
தனியுரிமை கட்டணம் தரகுகள் போன்றவற்றில் இருந்து கிடைக்கும் வருமானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முதலீட்டு நடவடிக்கைகள்
### (Investing Activities)

நீண்டகால சொத்துக்கள் காசுக்கு சமனற்ற முதலீடுகள் என்பவற்றின் கொள்வனவு விற்பனவு நடவடிக்கைகள் முதலீட்டு நடவடிக்கைகள் எனப்படும்.

உ+ம்: நிலையான சொத்து கொள்வனவு, விற்பனவு மற்றைய கம்பனியின் உரிமை மூலதனம் கடன் மூலதனம் என்பவற்றின் கொள்வனவு விற்பனவுடன் தொடர்புபட்ட நடவடிக்கை

### நிதியிடல் நடவடிக்கைகள் - (Financing Activities)

நிறுவனமொன்றின் உரிமை மூலதனம் அல்லது கடன் மூலதனம் அல்லது கடன் தொகையின் அளவிலும் மற்றும் கட்டமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையே நிதியிடல் நடவடிக்கை எனப்படும்.

உ+ம்: பங்கு வழங்கல் மீட்டல்
தொகுதிக் கடன் மீட்பு

### நேரில் முறை — (Indirect Method)

நிறுவனத்தின் தேறிய இலாப தேறிய நட்டத்துடன் காசுத் தன்மையற்ற விடயங்கள் தொழில்படு மூலதனக் கூறுகள் என்பன சீராக்கி முதலீட்டு நடவடிக்கைகள் நிதியிடல் நடவடிக்கைகள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் முறையே நேரில் முறையில் அமைந்த காசுப் பாய்ச்சல் கூற்று எனப்படும்.

**வரையறுக்கப்பட்ட A Com 31-12-2001ல் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று.**

| | | |
|---|---|---|
| <u>செயற்பாட்டு நடவடிக்கைகள்</u> | | |
| வரி வட்டி கழிக்க முன் செயற்பாட்டு இலாபம் | xxx | |
| பெறுமானத் தேய்வு | xxx | |
| நிலையான சொத்து விற்பனை இலாப/நட்டம் | xxx | |
| கையிருப்பு அதிகரிப்பு / குறைவு | (xxx) | |
| கடன்பட்டோர் அதிகரிப்பு / குறைவு | (xxx) | |
| கடன் கொடுநர் அதிகரிப்பு / குறைவு | (xxx) | |
| அட்டுறு செலவுகள் அதிகரிப்பு / குறைவு | (xxx) | |
| முற்பணச் செலவுகள் அதிகரிப்பு / குறைவு | (xxx) | |
| | xxxx | |
| செலுத்திய வருமான வரி | xxx | |
| செலுத்திய வட்டி | xxx | |
| செயற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறியகாசு | | xxx |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| <u>முதலீட்டு நடவடிக்கைகள்</u> | | |
| நிலையான சொத்து கொள்வனவு | XXX | |
| நிலையான சொத்து விற்பனவு | XXX | |
| ஊழியருக்கு வழங்கிய கடன் | (XXX) | |
| ஊழியரிடம் மீளப் பெற்ற கடன் | XXX | |
| பெற்ற முதலீட்டு வட்டி வருமானம் | XXX | |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் தே.காசு | | XXX |
| <u>நிதியிடல் நடவடிக்கைகள்</u> | | |
| பங்கு வழங்கல் | XXX | |
| பங்கு மீட்பு | (XXX) | |
| நீண்டகால கடன்பெறுவனவு | XXX | |
| குறுங்காலக் கடன் திருப்பிச் செலுத்தியது | (XXX) | |
| செலுத்திய பங்குலாபம் | (XXX) | |
| நிதியிடல் நடவடிக்கையில் தேறிய காசு | | XXX |
| காசு காசுக்கு சமனானவற்றின் தேறிய அதிகரிப்பு/குறைவு | | XXX |
| ஆரம்ப காசு காசுக்கு சமனானவை | | XXX |
| இறுதிக் காசு காசுக்கு சமனானவை | | XXX |

## காசுத் தன்மையற்ற விடயம்

இலாப நட்டக் கணக்கில் செலவாகவோ அல்லது வருமானமாகவோ காட்டப்பட்ட விடயம் ஒன்றிற்கான நிதியானது வெளிச் செல்லாமல் அல்லது உள்வராமல் காணப்படுமாயின் அதனையே காசுத் தன்மை அற்ற விடயம் எனப்படும்.

உ+ம் : பெறுமானத் தேய்வு
நிலையான சொத்து விற்பனை இலாபம்
ஐயக் கடன் ஏற்பாட்டு சீராக்கம்

**உசாத்துணை நூல்கள் :**
நவீன நிதிக் கணக்கீட்டு கோட்பாடுகள் - D.SAM
காசுப்பாய்சற் கூற்று - A. கலைச்செல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுமானத் தேய்வுக் கணக்கீட்டு நடைமுறை

# Depreciation Accounting procedures

**முகவுரை:**

கல்விப் பொதுத் தராதர மாணவர்களின் பரீட்சையை நோக்கமாக கொண்டும், விளங்கிக் கொள்வதை இலகுபடுத்துவதற்காகவும், இவ்விடயம் கேள்வி பதில் வடிவில் தரப்பட்டுள்ளது.

**01. பெறுமானத் தேய்வு (Depreciations) என்றால் என்ன?**

சொத்தின் பெறுமானத்தேய்வு செய்யத்தக்க தொகையை மதிப்பிட்டு பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் நியாயமாகப் பகிர்ந்தளித்தல் பெறுமானத் தேய்வாகும் (SLAS 8 இன்படி)

வேறுவிதமாக கூறுமிடத்து நிலையான சொத்து உபயோகத்தினால் அல்லது நிறுவனத்தில் வைத்திருப்பதினால் காலப்போக்கில் அதன் பெறுமதி குறைதல் பெறுமானத் தேய்வு எனலாம்.

இப்பெறுமானத்தேய்வுத் தொகையைச் சரியாகக் கூற முடியாவிட்டாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளால் அதை மதிப்பிட முடியும்.

**02. பெறுமானத் தேய்வு ஏற்படக் காரணம் என்ன?**

i) பாவனைவிரயம் அல்லது வருமானம் ஈட்டப் பயன்படுத்துவதனால் தேய்வடைதல்

ii) காலக்கழிவு

iii) வழக்கிழப்பு அல்லது வழக்கழிதல் அல்லது பழமையாதல்

iv) அருகல்

v) சந்தை விலை குறைதல்

vi) பராமரிப்புக் குறைபாடு


vii) அழிவு

**03. பாவனை விரயம் (Wearing out) என்றால் என்ன?**

வியாபாரத்தில் அல்லது உற்பத்தியில் பயன்படுத்துவதினால் சொத்தின் பெறுமதி குறைதல் பாவனை விரயமாகும். இது இயந்திரம் மோட்டார் போன்ற சொத்துக்களுக்கு ஏற்படும்.

**04. காலக்கழிவு (Effluxion of time) என்றால் என்ன?**

சொத்துக்கள் பயன்படுத்த எடுத்துக்கொண்ட காலம் முடிவடைய அதன்பெறுமதி குறைவடைதல் காலக்கழிவாகும். இச் சொத்து பயன்படுத்தாவிடினும் காலம் கழிந்தால் பெறுமதி அற்றுப் போய்விடும். இது குத்தகையிலாதனம் போன்ற சொத்துக்களுக்கு ஏற்படும்.



செல்வி ஞா. தனுஜா
13C A/L 2003 Com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. வழக்கிழப்பு (Obsolescence) என்றால் என்ன?

புதிய கண்டு பிடிப்புக்கள் சந்தைக்கு வருவதால் ஏற்கனவே பாவனையில் உள்ள சொத்தின் பெறுமதி குறைவடைதல் வழக்கிழப்பாகும். இது கணனி போன்ற சொத்துக்களுக்கு ஏற்படும்.

06. அருகல் (Depletion) என்றால் என்ன?

ஓர் சொத்திலிருந்து இன்னோர் சொத்தை பிரித்தெடுக்கும் போது அச் சொத்தின் பெறுமதி குறைவடைதல் அருகலாகும். இது எண்ணெய்க், கிணறு, நிலக்கரிச் சுரங்கம் போன்ற சொத்துக்களுக்கு ஏற்படும்.

07. சந்தை விலை குறைதல் என்றால் என்ன?

நிலையான சொத்திற்கு சந்தையில் விலை வீழ்ச்சி ஏற்படுவதால் முன்பு கொள்வனவு செய்து பயன்படுத்தப்படும் சொத்தின் பெறுமதி குறைவடைதல் சந்தை விலை குறைதலாகும்.

08. பராமரிப்புக் குறைபாடு என்றால் என்ன?

நிலையான சொத்துக்கள் அதற்கேற்றவாறு பராமரிக்கப்பட வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளாத சந்தர்ப்பத்தில் சொத்தின் பெறுமதி குறைவடைதல் பராமரிப்பு குறைபாடாகும்.

09. அழிவு என்றால் என்ன?

தீ, வெள்ளம், நிலநடுக்கம் போன்றவற்றால் நிலையான சொத்துக்கள் அழிக்கப்பட்டு பெறுமதி குறைதல் அழிவாகும்.

10. பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்ய வேண்டியதன் காரணம் யாது?

i) உற்பத்தியின் சரியான கிரயத்தை மதிப்பிட

ii) பெறுமானத்தேய்வு செய்யாவிடின் ஐந்தொகையில் நிலையான சொத்தின் பெறுமதி அதிகரித்துக் காணப்படும். இதைத் தவிர்க்க

iii) வருமானங்களை செலவுடன் ஒப்பிடும் எண்ணக்கருவிற்கு அமைய

iv) சொத்தின் ஆயுள் முடிவில் மூலதனத்தின் ஓர் பகுதி முற்றாக இல்லாது போவதைத் தடுக்க

v) மூலதனம் இலாபகரமாகச் செல்லாது தடுக்க

vi) கம்பனிச் சட்டத்தின்படி பெறுமானத் தேய்வு ஏற்பாடு செய்யாது பங்கு இலாபம் கொடுக்க முடியாது என்பதினால்

11) நிலையான சொத்தின் தேய்வை கணிக்கும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள் எவை?

i) கிரயம்
ii) பயன்தரு ஆயுட்காலம்
iii) கழிவுப் பெறுமதி

12) பெறுமானத்தேய்வு கணிப்பிடும் முறைகளைக் (Depreci – ation methods) குறிப்பிடுக?

i) நேர்கோட்டு முறை
ii) ஒடுங்கு பாகமுறை
iii) மறுபடிவிலை மதித்தல் முறை
iv) இயந்திர மணித்தியால முறை
v) ஆழ்நிதி முறை
vi) நட்ட ஈட்டு பத்திரமுறை
vii) ஆண்டுத் தவணை முறை
viii) அருகல் முறை
ix) ஆண்டிலக்கக் கூட்டு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நேர்கோட்டு முறையை **(Staright-line method)** அல்லது நிலையான தவணை முறை **(Fixed-Instalment method)** அல்லது மாறாப்பாக முறையை (பெறு-மானத் தேய்வு) விளக்குக?

பெறுமானத் தேய்வு செய்யத் தக்க தொகையை அதன் ஆயுட்காலம் முழுவதும் சரிசமமாகப் பகிர்ந்து பதிவழித்தல் நேர்கோட்டு முறையாகும்.

$$\text{பெறுமானத்தேய்வு} = \frac{\text{கிரயம் — கழிவுப் பெறுமதி}}{\text{ஆயுட் காலம்}}$$

$$\text{பெறுமானத்தேய்வு வீதம்} = \frac{\text{பெறுமானத்தேய்வு}}{\text{கிரயம்}} \times 100\%$$

அல்லது

$$\text{பெறுமானத் தேய்வு வீதம்} = \frac{\text{பெறுமானத் தேய்வு}}{\text{கிரயம் — கழிவுப் பெறுமதி}} \times 100\%$$

இம்முறையின் படி இரட்டைப் பதிவு
பெறுமானத் தேய்வுக் க/கு வரவு
பெறுமானத் தேய்வு ஏற்பாட்டு க/கு செலவு

14. ஒடுங்குபாக முறையை **(Reducing Balance Method)** அல்லது குறைந்து செல்லும் மீதிமுறையை (பெறுமானத் தேய்வு) விளக்குக?

ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு குறிப்பிட்ட வீதம் சொத்தின் பதிவழிக்கப்பட்ட பெறுமதியில் கணிக்கப்பட்டு பெறுமானத்தேய்வு செய்யும் முறை ஒடுங்குபாக முறையாகும். இது பொதுவாக பொறி தளபாடம் போன்ற சொத்துக்களுக்கு பயன்படுத்தப்படும்.

$$r = 1 - n\sqrt{\frac{S}{C}}$$

r = பெறுமானத்தேய்வு தேய்வு வீதம் → Rate of depreciation
n = ஆயுட்காலம் → Number of year
S = கழிவுப் பெறுமதி → Net residual value
C = கிரயம் → Cost of the asset

இம்முறையின் படி இரட்டைப்பதிவு
பெறுமானத்தேய்வுக் க/கு வரவு
பெறுமானத் தேய்வு ஏற்பாட்டு க/கு செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஒடுங்குபாக முறையின் சிறப்பியல்புகள் எவை?

i) சொத்து புதிதாக பயன்படுத்த ஆரம்பித்த காலத்தில் அதிக தொகையும் காலம் செல்லக் குறைந்த தொகையும் பெறுமானத் தேய்வாக இடப்படுகிறது. இது அதன் விற்கும் விலைக்கு நேர் விகித சமனாக உள்ளது. அதாவது தொடக்கத்தில் அதிக விலைக்கு விற்க முடியும். காலம் செல்லச் செல்ல குறைந்த விலைக்கு விற்க முடியும் என்பதாகும்.

ii) சொத்தின் உழைக்கும் திறன் குறைந்து போக குறைந்த பெறுமானத் தேய்வு இடப்படுகிறது.

iii) பெறுமானத் தேய்வு குறைந்து செல்ல திருத்தச் செலவு அதிகரித்துச் செல்ல ஒன்றை ஒன்று ஈடு செய்ய முடிகிறது.

16. மறுபடிவிலை மதித்தல் முறையை **(Revaluation Method)** **(பெறுமானத் தேய்வு) விளக்குக.**

சில சிறிய சொத்துக்களுக்கு (ஆயுதம்) நிதியாண்டு தொடக்க மீதியை மதிப்பிட்டு அதேபோல் இறுதி மீதியை மதிப்பிட்டு குறைவாக உள்ள தொகை பெறுமானத் தேய்வாக கொள்ளும் முறை மறுபடி விலை மதித்தல் முறையாகும்.

இம் முறையின்படி இரட்டைப்பதிவு
பெறுமானத் தேய்வுக் க/கு வரவு
சொத்துக் க/கு செலவு

17. இயந்திர மணித்தியாலய முறையை **(Machine Hour method)** (பெறுமானத் தேய்வு) விளக்குக?

உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் பெறுமானத் தேய்வு செய்யத்தக்க தொகையை அவ் இயந்திரம் ஆயுள் பூராகவும் செயற்படும் மணித்தியாலத்தால் வகுத்து ஓர் நிதி வருடத்தில் அது பயன்படுத்தப்படும் மணித்தியாலத்தால் பெருக்கி வருவதை பெறுமானத் தேய்வாகக் கொள்ளும் முறை இயந்திர மணித்தியால முறையாகும்

18. ஆழ்நிதி முறையை **(Sinking fund method)** **(பெறுமானத் தேய்வு) விளக்குக?**

ஆழ்நிதி அட்டவணை மூலம் கணிப்பிடப்படும் தொகை பெறுமானத் தேய்வாக செய்யப்பட்டு நிறுவனத்திற்கு வெளியில் வருமானம் தரத் தக்க வழியில் முதலீடு செய்யப்படும் பெறுமானத்தேய்வுமுறை ஆழ்நிதி முறையாகும்.

இம்முறையின்படி இரட்டைப்பதிவு
பெறுமானத்தேய்வு க/கு வரவு
ஆழ்நிதிக் க/கு செலவு

இம்முறையின்படி சொத்தின் ஆயுள் முடிவில் புதிய சொத்து வாங்குவதற்கான நிதி இலகுவாக திரட்ட முடிகிறது.

19. நட்டஈட்டுப் பத்திர (பெறுமானத்தேய்வு) முறையை விளக்குக?

பெறுமானத்தேய்வு செய்யப்படும் தொகை நட்டஈட்டுக் கம்பனியின் நட்டஈட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்யப்படும் முறை நட்டஈட்டுப் பத்திர முறையாகும். இதன் நன்மை யாதெனின் (ஆழ்நிதி முறையுடன் ஒப்பிடுமிடத்து) முதலீட்டை விற்பனை செய்வதால் ஏற்படும் நட்டம் இங்கு ஏற்படமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. ஆண்டுத் தவணை (Annual method) (பெறுமானத் தேய்வு) முறையை விளக்குக?

சொத்தின் கிரயத்தை முதலீடாகக் கருதி அதற்குக் கிடைக்கும் வட்டியையும் சொத்தின் கிரயத்தையும் சேர்த்துவரும் தொகையில் இருந்து கழிவுப் பெறுமதியைக் கழித்து வரும் தொகையை ஆயுட் காலத்தால் பிரித்து வருவதை பெறுமானத் தேய்வாகக் கொள்ளும் முறை ஆண்டுத் தவணை முறையாகும்.

21. அருகல் முறையை அல்லது ஒழிந்து போகும் முறையை (Depletion) (பெறுமானத்தேய்வு) விளக்குக?

ஒரு சொத்தில் இருந்து இன்னோர் சொத்தைப் பிரித்தெடுக்கும் அளவிற்கு பெறுமானத் தேய்வெனக் கொள்ளல் அருகல் முறையாகும். இம்முறை சுரங்கம் போன்ற சொத்துக்களுக்கே பொருந்தும்.

22. ஆண்டிலக்க கூட்டுமுறையை (Sum of the years Digits method ) விளக்குக?

சொத்திற்கு அதன் எஞ்சிய பாவனைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு ஆயுள் பூராகவும் அதற்கு இலக்கம் கொடுக்கப்பட்டு மொத்த இலக்கத்தால் பெறுமானத்தேய்வு செய்யத்தக்க தொகையை வகுத்து குறிப்பிட்ட ஆண்டு இலக்கத்தால் பெருக்குவதன் மூலம் பெறுமானத் தேய்வு கணிப்பிடும் முறையே ஆண்டிலக்க கூட்டு முறையாகும்

உ+ம் :- 5வருட ஆயுள் உடைய சொத்திற்கு

| ஆண்டு | ஆண்டிலக்கம் | | வருடாந்த தேய்வு |
|---|---|---|---|
| 1ஆம் | 5 | ⟶ | $\frac{\text{கிரயம் — கழிவுப் பெறுமதி}}{15} \times 5$ |
| 2ஆம் | 4 | ⟶ | $\frac{\text{கிரயம் — கழிவுப் பெறுமதி}}{15} \times 4$ |
| 3ஆம் | 3 | ⟶ | $\frac{\text{கிரயம் — கழிவுப் பெறுமதி}}{15} \times 3$ |
| 4ஆம் | 2 | ⟶ | $\frac{\text{கிரயம் — கழிவுப் பெறுமதி}}{15} \times 2$ |
| 1ஆம் | $\frac{1}{15}$ | ⟶ | $\frac{\text{கிரயம் — கழிவுப் பெறுமதி}}{15} \times 1$ |

23. பெறுமானத் தேய்வு பதியும் முறைகளைக் குறிப்பிடுக?

1) தேய்மான ஏற்பாட்டு முறை

2) பதிவழிப்பு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i) தேய்மான ஏற்பாட்டு முறைக்கு இரட்டைப் பதிவு
பெறுமானத் தேய்வுக் க/கு வரவு
பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் க/கு செலவு

ii) பதிவழித்தல் முறைக்கு இரட்டைப் பதிவு
பெறுமானத் தேய்வுக் க/கு வரவு
சொத்துக் க/கு செலவு

பதிவழித்தல் முறைப்பதிவு மறுபடி விலைமதித்தல் முறைக்கே மேற்கொள்ளப்படும். பதிவழித்தல் முறையிலான பதிவு மற்றைய பெறுமானத்தேய்வு முறைகளைப் பொறுத்தவரை விரும்பத்தக்காத பதிவாகும்.

24. பதிவழித்தல் முறைக்கும் பெறுமானத் தேய்வேற்பாட்டு முறைக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை?

i) பதிவழிப்பு முறையில் சொத்து மெய்ப் பெறுமதியைக் காட்டும். ஆனால் பெறுமானத் தேய்வேற்பாட்டு முறையில் கிரயத்தைக் காட்டும்.

ii) பதிவழித்தல் முறையில் குறிப்பிட்ட திகதி வரை உள்ள பெறுமானத் தேய்வு ஏற்பாட்டை நேரடியாக காண முடியாது. ஆனால் பெறுமானத் தேய்வு ஏற்பாட்டு முறையில் பெறுமானத் தேய்வு ஏற்பாட்டை நேரடியாகக் காண முடியும்.

iii) பதிவழிப்பு முறையில் வரலாற்றுக் கிரய எண்ணக்கரு பின்பற்றப் படுவதில்லை. பெறுமானத் தேய்வு ஏற்பாட்டு முறையில் வரலாற்றுக்கிரய எண்ணக்கரு பின்பற்றப்படுகிறது.

iv) பதிவழிப்பு முறையில் வெளிப்படுத்தல் சிறப்பியல்பு மீறப்படும். பெறுமானத்தேய்வு ஏற்பாட்டு முறையில் வெளிப்படுத்தல் சிறப்பியல்பு கடைப்பிடிக்கப்படும்.


**உசாத்துணை :**

1) Business Accounting – Frank wood
2) நவீன நிதிக் கணக்கீட்டுக் கோட்பாடுகள் - D. Sam


$$\text{வயது முதிர்ந்தோர் சுட்டெண்} = \frac{\text{60 வயதிற்கு மேற்பட்டோர்}}{\text{0 - 14 வயதினர்}} \times 100$$




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கணக்கீட்டு நியமம் - 36

இலங்கை கணக்கீட்டு நியமம் - 36 1995ம் ஆண்டு 15ம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது. 2002-01-01 திகதிலோ அதன் பின்னரோ ஆரம்பமாகும். காலத்தவணையை உள்ளடக்கும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக இந்நியமனம் நடைமுறைக்கு வரும். இதை இ.க.நி 12 பதிலாகவும் பயன்படுத்தலாம்.

இ.க.நியமம் - 36 இன் பெயர்: ஏற்பாடுகள், நிகழ்தகு பரிப்புக்கள் மற்றும் நிகழ்தகு சொத்துக்கள் என்பதாகும். ஏற்பாடுகள், நிகழ்தகு பரிப்புக்கள் மற்றும் நிகழ்தகு சொத்துக்கள் ஆகியன சம்பந்தமான பொருத்தமான ஏற்பிசைவுச்சித்தார்ந்தம் மற்றும் அளவீட்டு அடிப்படைகள் பிரயோகிக்கப்படுவதனையும் மேலும் நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களில் அவைகளை பிரயோகிப்பவர்கள் அவைகளின் இயல்பு, காலத்தேர்வு மற்றும் தொகையை அறியும் வகையில் போதுமான தகவல்களை வெளிப்படுத்தலையும் உறுதிப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

இந்நியமம் கீழே குறிப்பட்டவைகள் தவிர சகல தொழில் முயற்சிகளினாலும் இந் நியமம் ஏற்பாடுகள் நிகழ்தகு பரிப்புகள் மற்றும் நிகழ்தகு சொத்துக்கள் கணக்கீடு செய்வதில் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

i) நியாயப் பெறுமதியில் கொண்டு செல்லப்படும் நிதியீட்டு சாதனங்களினால் ஏற்படுபவை.

ii) பழுவேறிய ஒப்பந்தங்கள் தவிர்ந்த நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தங்களினால் ஏற்படுபவை.

iii) காப்புறுதி உரிமையாளருடனான ஒப்பந்தங்களினால் காப்புறுதித் தொழில் முயற்சியாளருக்கு ஏற்படுபவை.

iv) பிறிதொரு இலங்கை கணக்கீட்டு நியமத்தினால் அடக்கப்படுபவை.

இந் நியமனத்தின் பின்வரும் பதங்கள் குறிப்பிட்ட கருத்துடன் வரையறை செய்யப்படுகின்றது.

**பரிப்பு :**

பொருளாதாரப் பயனை உள்ளடக்கிய வளங்கள் தொழில் முயற்சியிலிருந்து அதை தீர்ப்பதற்காக வெளிப்பாய்வை ஏற்படுத்துவதும் கடந்தகால நிகழ்வுகளால் தொழில் முயற்சிக்கு ஏற்பட்டதுமான தற்காலக் கடப்பாடாகும்.

**கடப்பாட்டை ஏற்படுத்தும் நிகழ்ச்சி**

தொழில் முயற்சிக்கு உண்மையான மாற்ற வழி அற்றதாகி அக் கடப்பாட்டைத் தீர்வு செய்வதற்கு இட்டுச் செல்லும் சட்டரீதியான அல்லது ஆக்க பூர்வமான கடப்பாட்டை உண்டுபண்ணும் ஓர் நிகழ்ச்சி



**செல்வன் ஞா.றெஜிற் டினோஜன்**
**12B வர்த்தகப்பிரிவு - 2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பழுவேறிய ஒப்பந்தம்**

ஒப்பந்தம் ஒன்றின் கீழ் பெறலாமென எதிர்பாக்கக் கூடிய பொருளாதார பயன்களிலும் பார்க்க அதன் கீழ் ஏற்படும் கட்டப்பாடுகளை நிறைவேற்ற தேவையான தவிர்க்க முடியாத கிரயங்கள் அதிகமாயுள்ள ஒரு ஒப்பந்தம்.

**ஏற்பாடுகள்**

நிச்சயமற்ற காலத்தேர்வு அல்லது தொகையுடைய பரிப்பு என்பதாகும்.

**ஏற்பிசைவு செய்ய முடியாதது**

i) கடந்தகால நிகழ்வொன்றின் பிரதிபலனாக ஒரு தொழில் முயற்சி ஒரு தற்கால கடப்பாட்டை கொண்டுள்ள போது

ii) அக்கடப்பாட்டை தீர்வு செய்வதற்கு பொருளாதார பயன்களை அடக்கிய வளங்கின் வெளிப்பாய்வு தேவைப்படுவதற்கான சாத்தியம் இருக்கும் பொழுது

iii) கடப்பாட்டின் தொகை சம்பந்தமாக நம்பகரமான மதிப்பீடு செய்யக் கூடியதாயுள்ள பொழுது இந் நிபந்தனைகளை ஈடு செய்யப்படாதவிடத்து ஏற்பாடு ஏற்பிசைவு செய்தல் ஆகாது.

**ஏற்பிசைவு செய்பவையாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்**

i) ஐந் தொகை திகதியில் ஒரு தற்கால கடப்பாடு நிலையிலும் பார்க்க உள்ளமைக்கான அத்தியம் அதிகமாக இருக்குமிடத்து. தொழில் முயற்சி ஏற்பாட்டை ஏற்பிசைவு செய்யும்.

(ii) எந்தவொரு உருப்படியின் வெளிப்பாய்வின் வாய்ப்பும் சிறிதாக இருந்தாலும் அந்த வகை கடப்பாடுகளின் முழுமையான வளங்களின் ஒரே அளவான வெளிப்பாய்வு தேவைப்படுதல் சாத்தியமாகும். இப்படியான சந்தர்ப்பமானால் ஒரு ஏற்பாடு ஏற்பிசைவு செய்யப்படும்.

ஏற்பாட்டை அளவீடு செய்யும் கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள்

- சிறந்த மதிப்பீடு
- இடர்களும் நிச்சயமின்மையும்
- தற்கால பெறுமதி
- எதிர்கால நிகழ்வுகள்
- சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட விலகல்
- மீளளித்தல்
- ஏற்பாட்டில் மாற்றங்கள்
- பழுவேறிய ஒப்பந்தங்கள்
- ஏற்பாடுகளின் உபயோகம்
- மீள்கட்டமைப்பு

ஒரு வகை ஏற்பாட்டுக்கும் ஒரு தொழில் முயற்சி பின்வருவனவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

i. காலத்தவணையின் ஆரம்பத்திலும் முடிவிலும் கொண்டு செல்லும் தொகை.

ii. காலத்தவணையில் தற்போதைய ஏற்பாடுகளில் அதிகரிப்பு அடங்கலாக மேலதிகமாக செய்யப்பட்ட ஏற்பாடுகள்.

iii. காலத் தவணையில் உபயோகித்த தொகை காலத்தவணையில் எதிர்டு செய்த உபயோகிக்காத தொகைகள்.

iv. காலப்போக்கில் காலத்தவணையின் கழிவு செய்யப்பட்ட தொகைகளில் அதிகரிப்பு மற்றும் கழிவு விகிதத்திற்கேற்ப ஏதாவது மாற்றங்களின் தாக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. கடப்பாட்டின் தன்மையைபற்றி ஒரு தருக்கமான விபரிப்பு மற்றும் பொருளாதார பயன்களின் வெளிப்பாய்வை ஏற்படுத்த எதிர்பார்க்கும் காலத்தேர்வு.

vi. எதிர்பார்க்கப்பட்ட மீளளிப்பின் தொகை ஏதாவதிருப்பின் அது பற்றி அத்தகைய எதிர்பார்க்கப்பட்ட மீளளிப்புத் தொடர்பாக ஏற்பிசைவு செய்யப்படும் சொத்தின் தொகையுடன் குறிப்பிடப்படல் வேண்டும்.

## நிகழ்தகு பரிப்புக்கள்:

தொழில் முயற்சியின் முழுமையான கட்டுப்பாடில்லாத ஒன்று அல்லது பல நிச்சயமற்ற எதிர்கால நிகழ்ச்சிகளின் ஏற்படுகை அல்லது ஏற்படாமையினால் உளதாம் தன்மையை உறுதி செய்யும். கடந்தகால நிகழ்வுகளிலிருந்து உருவாகும் ஒரு கடப்பாடு. தொழில் முயற்சி ஒன்று நிகழ்தகு பரிப்பை ஏற்பிசைவு செய்தலாகாது.

நம்பகரமான மதிப்பீட்டினை தயாரிக்க முடியாத மிகவும் ஆக்கபூர்வமான நிலை தவிர்ந்த சந்தர்ப்பங்களில் பொருளாதார பயனுடைய வளங்களின் வெளிப்பாய்வின் சாத்தியம் இருப்பின் கடப்பாட்டின் அந்த பகுதிக்கு ஏற்பாட்டை ஏற்பிசைவு செய்யும்.

ஏற்கனவே நிகழ்தகு பரிப்பாக கொண்ட ஒரு உருப்படிக்கு எதிர்கால பொருளாதார பயனை அடக்கிய வளங்களின் வெளிப்பாய்வுத் தேவைக்கான சாத்தியம் ஏற்படுமானால் அவ்வாறான சாத்தியம் மாற்றம் ஏற்படும் காலத் தவணைக்குரிய நிதிக்கூற்றுகளில் ஏற்பாடு ஏற்பிசைவு செய்யப்படும்.

ஒரு தொழில் முயற்சி தீர்வுக்கான வெளிப்பாய்வின் சாத்தியம் அரிதாக இருந்தாலொளிய. ஐந்தொகை திகதியிலான ஒவ்வொருவகை நிகழ்தகுபரிப்பு சம்பந்தமாகவும் அவற்றின் இயல்பு பற்றியும் கீழ் வருமாறு வெளிப்படுத்த வேண்டும்.

i) ஏதாவது வெளிப்பாய்வின் தொகை அல்லது காலத்தேர்வு சம்பந்தமான நிச்சயமற்ற தன்மை பற்றிய குறிப்பு.

ii) எந்தவொரு மீளளிப்புக்குமான சாத்தியம்

ஒரே வகையான சூழ்நிலைகளினால் ஒரு ஏற்பாடும் ஒரு நிகழ்தகு பரிப்பும் ஏற்படுமானால் தொழில் முயற்சியானது ஏற்பாட்டிற்கும் நிகழ்தகு பரிப்புக்கும் இடையிலான தொடர்பை சித்தரிக்கும் வகையில் வெளிப்படுத்த வேண்டும்.

## நிகழ்தகு சொத்து:

தொழில் முயற்சியில் முழுமையான கட்டுப்பாடில்லாத ஒன்று அல்லது பல நிச்சயமற்ற எதிர்கால நிகழ்ச்சிகளின் நிகழ்வு அல்லது நிகழாமையினால் உளதாம் தன்மையை உறுதிசெய்யும் கடந்த கால நிகழ்வுகளிலிருந்து உருவாகும் ஒரு சாத்தியமான சொத்தாகும்.

ஒரு தொழில் முயற்சி நிகழ்தகு சொத்தை ஏற்பிசைவு செய்தல் ஆகாது.

ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாத வருமானத்தை ஏற்பிசைவு செய்து கொள்ளக் கூடும் என்ற காரணத்தால் நிகழ்தகு சொத்துக்கள் நிதிக் கூற்றுக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் ஏற்பிசைவு செய்யப்படுவதில்லை. எனினும் வருமானத்தின் பெறுகை உண்மையாக நிச்சயமானதால் இது தொடர்பான சொத்து ஒரு நிகழ்தகு சொத்தாக அமையாததுடன் அதன் ஏற்பிசைவும் பொருத்தமானதாகும்.

ஐந்தொகை திகதியில் நிகழ்தகு சொத்தினுடைய இயல்பின் சுருக்கமான விபரங்களையும் ஏற்பாடுகளுக்கான கோட்பாடுகளை உபயோகித்து அளவிடப்படும் அவைகளின் நிதித் தாக்கத்தினையும் வெளிப்படுத்த வேண்டும்.

வருமானம் ஏற்படக்கூடியதென தவறாக இட்டுச் செல்லக்கூடிய குறிப்புக்களை நிகழ்தகு சொத்துக்களை வெளிப்படுத்தலின் போது தருவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

தேவைப்பட்ட தகவல் ஏனும் வெளிப்படுத்தல் செயன்முறைக்கு ஒவ்வாததால் வெளிப்படுத்தப்படாவிட்டால் அந்த விபரம் குறிப்பிட வேண்டும்.

வேறுபகுதியினருடன் ஏற்பாடு, நிகழ்தகுபரிப்பு, அல்லது நிகழ்தகு சொத்து தொடர்பாக பிணக்கு ஏற்பட்டிருப்பின் தொழில் முயற்சிக்கு கருமையான தீங்கு ஏற்பட்டிருக்கும் தொழில் முயற்சி தகவலை வெளிப்படுத்த வேண்டியில்லாத போதிலும் பிணக்கின் பொதுவான தன்மையை தகவல்கள் வெளிப்படுத்தப்படாமை பற்றிய விபரம் மற்றும் இதற்கான காரணத்துடன் சேர்த்து வெளிப்படுத்த வேண்டும்.

இந்நியமம் சர்வதேச கணக்கீட்டு நியமம் ISA37 – ஏற்பாடுகள், நிகழ்தகு பரிப்புகள் மற்றும் நிகழ்தகு சொத்துக்கள் என்ற நியமத்தின் சகல விடயங்களிலும் பணிவிணக்கத்தை உறுதிப்படுத்துகின்றது.

**உசாத்துணை நூல்**
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
(1169/26 ஆம் இலக்கம் - 2001ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01ம் திகதி வியாழக்கிழமை)

## பூகோள வெப்பமயமாதல்
## Global Warming

21ம் நூற்றாண்டின் முக்கியமான பிரச்சினை பச்சை வீட்டுத்தாக்கம் (Green house effect) எனப்படும். பூகோள வெப்பமயமாதலாகும். முழுக் கோளத்தினதும் சராசரி வெப்பநிலை உயர்வடைதல் இது குறிக்கின்றது. இதன் காரணமாக கடல் மட்டம் உயர்வடையும்.

கைத்தொழில் புரட்சியின் பின்னர் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் ($Co_2$) அளவு அதிகரித்ததால், ஓசோன் படலத்தில் ஓட்டைகள் ஏற்பட்டு சரியானது ஊதாக் கதிர்வீச்சு உட்புகுவதால் வளிமண்டல வெப்பம் அதிகரித்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேந்தலைக் கிரயம்

உற்பத்தியுடன் நேரடித் தொடர்பற்ற கிரயங்கள் அனைத்தும் மேந்தலை கிரயங்களாகும். அதாவது நேரில் மூலப் பொருட்களுக்கான செலவுகள் நேரில் கூலி ஏனைய நேரில் செலவினங்கள் என்பவற்றின் மொத்தமே மேந்தலைக் கிரயமாகும். நேர்ச் செலவுகள் உற்பத்தி கிரய அலகு மீது நேரடியாக சுமத்தப்படுவதனால் இலகுவாக முதற்கிரயத்தை மதிப்பிட முடியும். ஆனால் மேந்தலை செலவு உருப்படிகள் அதிகளவில் இடம் பெறுவதனாலும் கிரய அலகு மீது நேரடியாக சுமத்தப்படாமையாலும் அவற்றை மதிப்பிடுவது என்பது சிரமமானது. இம் மேந்தலைச் செலவுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

i. நேரில் மூலப்பொருள்
ii. நேரில் கூலி
iii. நேரில் செலவுகள்

எனவே நேரில் மூலப்பொருள், நேரில் கூலி, ஏனைய நேரில் செலவுகள் என்பவற்றை கூட்டுவதன் மூலம் மேந்தலைச் செலவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நேரில் மூலப்பொருள் + நேரில் கூலி + நேரில் செலவு = மேந்தலை

**நேரில் மூலப்பொருள் :**

உற்பத்தியின் ஒரு பகுதியாகப் பராமரிக்கப்படாத மூலப் பொருட்கள் நேரில் மூலப்பொருட்களாகும். அவை வழமையாக பொறி உபகரணம் என்பவற்றை பராமரிப்பதற்கும் செயற்படுத்துவதற்கு வேண்டப்படும் பொருட்களைக் குறிக்கும்.

**நேரில் கூலி :**

உற்பத்திக்கு நிர்மாணம், கலவை நிபந்தனை என்பவற்றில் நேரடியாக மாற்றத்தை ஏற்படுத்தாத கூலி நேரில் கூலிகள் எனப்படும்.

உதாரணம் :
தொழிற்சாலைமேற்பார்வையாளர் கூலி
பராமரிப்பு கூலி
களஞ்சிய காப்பாளர் கூலி

**நேரில் செலவுகள் :**

குறித்த உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புபட்டதெனக் கருத முடியாத செலவுகள் நேரில் செலவு எனப்படும்.

உதாரணம் :
தொழிற்சாலை வாடகை, காப்புறுதி.

**மேந்தலை கிரயத்தின் வகைப்படுத்தல் :**

*1. திணைக்களத்தின் அடிப்படையில்*

(அ) உற்பத்தித்துறை மேந்தலைக் கிரயம் :

உற்பத்தி பகுதியில் ஏற்படும் மேந்தலைக்கிரயமே ஆகும்.

உதாரணம் : துப்பரவாக்கல் கிரயம்.

(ஆ) சேவைத்துறை மேந்தலைக்கிரயம் :

உற்பத்திக்கு சேவை வழங்கும் பகுதியில் ஏற்படும் மேந்தலைக் கிரயமே இதுவாகும்.

உதாரணம் : களஞ்சிய காப்பாளர் சம்பளம்



செல்வி க. கௌசிகா
13B வர்த்தகப்பிரிவு - 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*2. நடத்தை அடிப்படையில்*

(அ) நிலையான மேந்தலைக்கிரயம்

உற்பத்தியின் மாற்றத்திற்கேற்ப மாற்றமடையாத மேந்தலைக் கிரயமே இதுவாகும்.

உதாரணம் : வாடகை

(ஆ) மாறும் மேந்தலைக் கிரயம்.

உற்பத்தியின் OR வெளியீட்டின் மாற்றத்திற்கேற்ப மாற்றமடையக் கூடிய மேந்தலைக் கிரயமே இதுவாகும்.

உதாரணம் : அலகின் அடிப்படையில் வழங்கப்படும் மேற்பார்வையாளர் சம்பளம்.

*3. கட்டுப்படுத்தும் அடிப்படையில் :*

(அ) கட்டுப்படுத்தக் கூடிய மேந்தலைக் கிரயம் :

தேவைக்கேற்ப கட்டுப்படுத்தக்கூடிய மேந்தலைக் கிரயமே இதுவாகும்.

உதாரணம் : அலகின் அடிப்படையில் வழங்கப்படும் மேற்பார்வையாளர் சம்பளம்.

(ஆ) கட்டுப்படுத்த முடியா மேந்தலைக் கிரயம் :

தேவைக்கேற்ப கட்டுப்படுத்த முடியாத மேந்தலைக் கிரயமே இதுவாகும்.

உதாரணம் : காப்புறுதி.

*4. நிகழ்வின் அடிப்படையில் :*

(அ) சாதாரண மேந்தலைக் கிரயம் :

வழமையான சம்பவங்களினால் ஏற்படும் மேந்தலைக் கிரயமே இதுவாகும்

உதாரணம் : சம்பளம்

(ஆ) அசாதாரண மேந்தலைக் கிரயம் :

வழமைக்கு மாறான சம்பவங்களினால் ஏற்படும் மேந்தலைக் கிரயமே இதுவாகும்.

உதாரணம் : தீயழிவால் ஏற்பட்ட கிரயத்தை திருத்துவதற்கான கிரயம்.

**கிரயமிடல் நடைமுறைகள் :**

1. திரட்டுதல்
2. ஒதுக்குதல்
3. பகிர்தல்
4. உறிஞ்சுதல்

**மேந்தலைக் கிரயத்தை திரட்டுதல்:**

மேந்தலைக் கிரயத்தினுள் அடங்கும் பல்வேறு உருப்படி பற்றிய கிரயத் தகவல்களைச் சேகரித்தல் மேந்தலைக் கிரயத்தை திரட்டுதல் ஆகும். அதாவது உண்மைத் தகவல்களை மூலப்பதிவு ஆவணங்கள் மூலம் பெற்று அதன் பின் மதிப்பீட்டுத் தகவல்களைத் தீர்மானித்துக் கொள்ளும் செயற்பாடு திரட்டுதல் எனப்படுகிறது.

உதாரணம் : சம்பளப்பட்டியல் - சம்பளம்.

**மேந்தலைக் கிரயத்தை ஒதுக்குதல்:**

திரட்டப்பட்ட மேந்தலைக் கிரயங்களில் குறிப்பிட்ட கிரய நிலையத்திற்கென தெளிவாக அடையாளம் காணக்கூடியவற்றை அந் நிலையத்திற்கு சாட்டுதல் செய்தல் மேந்தலைக் கிரயத்தை ஒதுக்குதல் ஆகும்.

உதாரணம் : பராமரிப்புத் தொழிலாளருக்கு வழங்கப்படும் ஊதியம் பராமரிப்பு துறைக்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேந்தலைக் கிரயத்தை பகிர்தல் :**

திரட்டப்பட்ட மேந்தலைக் கிரயத்தில் குறிப்பிட்ட கிரய நிலையத்திற்கென தெளிவாக அடையாளம் காண முடியாத கிரயத்தைப் பொருத்தமான அடிப்படையில் பங்கிட்டுச் சாட்டுதல் செய்தல் மேந்தலைக் கிரயத்தை பகிர்தல் ஆகும்.

உதாரணம் : மின்சாரம், தொழிற்சாலை வாடகை, தொழிற்சாலைத் தொலைபேசி என்பன தொழிற்சாலை முழுவதற்கும் செலுத்தப்படுகிறது. எனவே இச் செலவுகளை பல்வேறு துறைகளுக்குமிடையில் பொருத்தமான வகையில் பங்கீடு செய்தல் வேண்டும்.

இவ்வாறு செலவு நிலையங்களின் மொத்த செலவினை அச்செலவு நிலையங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கான அடிப்படைகள் வருமாறு.

| | **மேந்தலைக் கிரயம்** | **அடிப்படை** |
|---|---|---|
| 1. | வாடகை இறை, கட்டடக் காப்புறுதி, கட்டடத்தேய்வு, துப்பரவாக்கல், வாயு மின்சாரம் (வெளிச்சமூட்டல்) | பரப்பு |
| 2. | குளிரூட்டல், வெப்பமூட்டல். | கனவளவு |
| 3. | சக்தி | KWH / குதிரைசக்தி / மீற்றர் அலகு / இயந்திர மணி |
| 4. | தேனீர்ச்சாலைக் கிரயம். நேரில் கூலி, தொழிலாளர் காப்புறுதி, ஊழியர் உணவு, ஊழியர் நலனோம்பல் கிரயம், மேற்பார்வையாளர் சம்பளம். | ஊழியர் எண்ணிக்கை ஊழியர் மணி |
| 5. | ஊழியர் சேமலாப நிதியம் (E.P.F) | மொத்தக்கூலி. |
| 6. | விளம்பரம் | வாடிக்கையாளர் செலவு செய்த நாட்கள். |
| 7. | பொறி பெறுமானத்தேய்வு, பொறி திருத்தச் செலவு, பொறி பராமரிப்பு. | பொறியின் பெறுமதி |
| 8. | இருப்புக் காப்புறுதி | இருப்பின் பெறுமதி |
| 9. | களஞ்சியக் கிரயம் | களஞ்சிய வேண்டுகோள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேந்தலை ஒதுக்கீட்டினதும் பகிர்வினதும் நோக்கங்கள்**

1. நேரில் செலவுகளை அடையாளம் காண்பதற்கு
2. பொறுப்புக்களை நிர்ணயிப்பதற்கு.
3. பாதீடுகளைத் தயாரிப்பதற்கு
4. மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு
5. திணைக்களத் திட்டங்களை தயார் செய்வதற்கு

**மேந்தலைப் பகிர்வு அட்டவணை :**

மேந்தலைக் கிரயங்களை கிரய நிலைகளுக்கு ஒதுக்குதல், பகிர்தல், ஆகியவற்றின் மூலம் சாட்டுதல் செய்தலைக் காட்டும் ஓர் அட்டவணை மேந்தலைப் பகிர்வு அட்டவணை ஆகும்.

**மேந்தலைக் கிரயத்தின் 1ம் கட்டப் பகிர்வு / தொடக்கப்பதிவு**

திரட்டப்பட்ட மேந்தலைக்கிரயங்களை உற்பத்தி, சேவை நிலையங்களுக்குப் பகிர்தல், ஒதுக்குதல் போன்ற செயற்பாடு 1ம் கட்டப் பகிர்வு எனப்படும்.

**உதாரணம் :**

குறித்ததோர் உற்பத்தி நிறுவனத்தின் கிரயக் கணக்கீட்டுப் பகுதியினால் திரட்டப்பட்ட செலவு உருப்படி விபரங்கள் வருமாறு.

| | |
|---|---|
| வாடகை | 10000 |
| பராமரிப்பு | 6000 |
| பெறுமானத்தேய்வு | 18000 |
| வெளிச்சம் குளிரூட்டல் | 5000 |
| இருப்புக்கான காப்புறுதி | 4000 |
| தொழிலாளர் சேமலாபநிதிப்பங்களிப்பு | 6000 |
| சக்தி வலு | 9000 |
| மேற்பார்வை | 15000 |

குறித்த உற்பத்தி நிறுவனத்தின் துறைகள் பற்றிய தகவல்கள் வருமாறு.

| | A | B | S | M |
|---|---|---|---|---|
| இடப்பரப்பு | 3000 | 2200 | 1800 | 1000 |
| தொழிலாளர் எண்ணிக்கை | 480 | 320 | 240 | 160 |
| மொத்தக்கூலி (ரூபா) | 40000 | 30000 | 20000 | 10000 |
| பொறியின் கிரயம் (ரூபாவில்) | 120000 | 90000 | 60000 | 30000 |
| இருப்பு (ரூபாவில்) | 75000 | 45000 | 30000 | --- |

மேற்கூறிய விபரங்களின் அடிப்படையில் துறைகளுக்கிடையில் மேந்தலைச் செலவு உருப்படிகளை பகிர்வு செய்யும் கூற்றினைக் தயாரிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேந்தலைகிரய பகிர்வு கூற்று

| உருப்படி | பகிர்வின் அடிப்படை | மொத்தம் ரூபாவில் | துறைகள் A | B | S | M |
|---|---|---|---|---|---|---|
| வாடகை | இடப்பரப்பு | 10000 | 3750 | 2750 | 2250 | 1250 |
| பராமரிப்பு | பொறியின் பெறுமதி | 6000 | 2400 | 1800 | 1200 | 600 |
| பெறுமானதேய்வு | பொறியின் பெறுமதி | 18000 | 7200 | 5400 | 3600 | 1800 |
| வெளிச்சம் குளிரூட்டல் | இடப்பரப்பு | 5000 | 1875 | 1375 | 1125 | 625 |
| இருப்புக்கான காப்புறுதி | இருப்பின் பெறுமதி | 4000 | 2000 | 1200 | 800 | --- |
| தொழிலாளர் சேமலாப நிதியப்பங்களிப்பு | கூலி | 6000 | 2400 | 1800 | 1200 | 600 |
| சக்திவலு | பொறியின் பெறுமதி | 9000 | 3600 | 2700 | 1800 | 900 |
| மேற்பார்வை | தொழிலாளர் எண்ணிக்கை | 15000 | 6000 | 4000 | 3000 | 2000 |
| | | 73000 | 29225 | 21025 | 14975 | 7775 |

**மேந்தலையின் 2ம் கட்டப் பகிர்வு**

சேவைக்கிரய நிலையங்கள் உற்பத்திக் கிரயநிலையங்களுக்கு சேவையினை வழங்குமாயின் உற்பத்திக்கிரய நிலையங்களின் மொத்த மேந்தலைக் கிரயத்தை அறிய 1ம் கட்டப் பகிர்வின் மூலம் பகிரப்பட்டு சேவை நிலையங்களில் காணப்படும் மேந்தலைக் கிரயங்களை உற்பத்தி நிலையங்களிற்கு பகிர்ந்தளித்தல் 2ம் கட்டப்பகிர்வு எனப்படும்.

இது பின்வரும் முறைகளில் மேற்கொள்ளப்படும்.
i. நேரடி மீள்பகிர்வு முறை
ii. நீக்குதல் முறை
iii. பரஸ்பர அடிப்படை முறை

**நேரடி மீள்பகிர்வு முறை**

சேவை நிலையங்களின் கிரயம் தனித்தனியே உற்பத்தி நிலையங்களிற்கு பங்கிடப்படும். அதாவது மற்றைய சேவை நிலையங்களிற்கு பங்கிடப்படுவதில்லை. இதனையே நேரடி மீள் பகிர்வு முறை என்பர்.

**உதாரணம்** : ஒரு நிறுவனத்தில் AB உற்பத்தி நிறுவனம் SM சேவை நிலையம் என கொள்க. மதிப்பிடப்பட்ட மேந்தலை விபரம்

| | உற்பத்திபகுதி A | B | சேவைப்பகுதி S | M |
|---|---|---|---|---|
| மேந்தலைக்கிரயம் (ரூபா) | 30400 | 32400 | 15840 | 15160 |
| கேட்கப்பட்ட பொருள் (அலகுகள்) | 80 | 120 | -- | -- |
| பராமரிப்பு மணி | 300 | 100 | -- | -- |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S – களஞ்சியம்   M - பராமரிப்பு நிலையம்

## மேந்தலை பகிர்வு அட்டவணை (நேரடி பகிர்வு முறை)

| விபரம் | அடிப்படை | உற்பத்திபகுதி | | சேவைப்பகுதி | |
|---|---|---|---|---|---|
| | | A (ரூபா) | B (ரூபா) | S (ரூபா) | M (ரூபா) |
| மேந்தலை | | 30400 | 32400 | 15840 | 15160 |
| சேவை - S | கேட்கப்பட்ட பொருள் | 6336 | 9504 | (15840) | -- |
| சேவை - M | பராமரிப்பு மணி | 11370 | 3790 | -- | (15160) |
| | | 48106 | 45694 | 0 | 0 |

## மீள் பகிர்வு செய்யும் அடிப்படை

| அடிப்படை | சேவை |
|---|---|
| 1. கேட்கப்பட்ட பொருளின் எண்ணிக்கை | களஞ்சியம் |
| 2. பராமரிப்பு மணித்தியாலம் | பராமரிப்பு |
| 3. ஆராய்ச்சி மணித்தியாலம் | ஆராய்ச்சி |
| 4. ஊழியர் எண்ணிக்கை | தேனீர்ச்சாலை |
| 5. திட்டமிடல் மணித்தியாலம் | திட்டமிடல் |
| 6. உற்பத்தி ஊழியர் எண்ணிக்கை | உற்பத்திக் கட்டுப்பாடு |

## நீக்குதல் முறை

முதலாவதாக சேவை நிலையங்களில் கூடிய கிரயமுடையதை அனைத்து நிலையங்களும் பங்கிட்டு அதன்பின் மற்றைய சேவை நிலையத்தின் கிரயத்தை உற்பத்தி நிலையங்களுக்கு மட்டும் பகிர்வது நீக்குதல் முறையாகும்.

உதாரணம் :
ஒரு நிறுவனத்தின் மேந்தலை விபரம் வருமாறு

| | உற்பத்திபகுதி | | சேவைப்பகுதி | |
|---|---|---|---|---|
| | A | B | X | Y |
| மேந்தலைக்கிரயம் (ரூபா) | 50000 | 30000 | 20000 | 10000 |
| சேவை –X | 50% | 40% | -- | 10% |
| சேவை - Y | 60% | 35% | 5% | -- |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேந்தலை பகிர்வு அட்டவணை
## (மீள்பகிர்வு முறை) நீக்குதல் முறை

| விபரம் | உற்பத்திபகுதி | | சேவைப்பகுதி | |
|---|---|---|---|---|
| | A (ரூபா) | B (ரூபா) | X (ரூபா) | Y (ரூபா) |
| மேந்தலை | 50000 | 30000 | 20000 | 10000 |
| சேவை - X | 10000 | 8000 | (20000) | 2000 |
| சேவை - Y | 7578 | 4422 | -- | (12000) |
| | 67578 | 42422 | 0 | 0 |

## பரஸ்பர அடிப்படை முறை

சேவை நிலையங்களின் கிரயங்கள் அனைத்து நிலையங்களிற்கும் முறையாகப் பங்கிடப்படுவது (உற்பத்தி நிலையத்திற்கும் சேவை நிலையத்திற்கும்) பரஸ்பர அடிப்படை முறையாகும்.
இதனை பின்வருமாறு பிரிக்க முடியும்.
1. தொடர்பங்கீட்டுமுறை
ii. ஒருங்கமை சமன்பாட்டு முறை
iii. தாய முறை

### தொடர் பங்கீட்டு முறை:

இம்முறையில் ஒரு சேவை துறையின் மொத்தச் செலவு மற்றய எல்லாத்துறைகளுக்கும் பங்கீடு செய்யப்படுகிறது. பின்னர் மற்றொரு சேவைத்துறையின் மொத்தச் செலவுடன் ஏற்கனவே பகிர்வுக்குள்ளாகிய சேவை துறையின் செலவு கூட்டப்பட்டு அக் கூட்டுத்தொகை மீண்டும் எல்லாத் துறைகளுக்கும் பங்கீடு செய்யப்படுகிறது. இவ்வாறு சேவை துறையின் செலவு மீண்டும் மீண்டும் எல்லாத்துறைகளுக்குமிடையில் பங்கீடு செய்யப்படுகின்றது. மொத்தச் செலவுத் தொகை மிக குறைந்தளவு ஆகும் வரை இம்முறையில் பகிர்வு மேற்கொள்ளப்படுகிறது.

உதாரணம் : குறித்ததோர் கம்பனி 3 உற்பத்தி துறைகளையும் 2 சேவைதுறைகளையும் கொண்டுள்ளது. 1ம் கட்ட பகிர்வின் பின் ஒவ்வொரு பகுதிக்குமான மேந்தலை பகிர்வின் முடிவுகள் வருமாறு

| | *உற்பத்தித்துறை* | *சேவைத்துறை* |
|---|---|---|
| அ. | 60000 | ஈ. 4680 |
| ஆ. | 40000 | உ. 6000 |
| இ. | 20000 | |

சேவைத்துறையின் செலவுகள் மற்றைய துறைகளுக்கிடையில் பங்கீடு செய்யப்படும் வீதம் வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|---|
| சேவைத்துறை (ஈ) | 20% | 40% | 30% | - | 10% |
| சேவைத்துறை (உ) | 40% | 20% | 20% | 20% | - |

**மேந்தலை கிரய பகிர்வு கூற்று**

| விபரம் | உற்பத்திபகுதி | | | சேவைப்பகுதி | |
|---|---|---|---|---|---|
| | அ | ஆ | இ | ஈ | உ |
| 1ம் கட்ட பகிர்வு முடிவுகள் | 60000 | 40000 | 20000 | 4680 | 6000 |
| சேவைத்துறை (உ) | 2400 | 1200 | 1200 | 1200 | (6000) |
| சேவைத்துறை (ஈ) | 1176 | 2352 | 1764 | (5880) | 584 |
| சேவைத்துறை (உ) | 234 | 118 | 118 | 118 | (584) |
| சேவைத்துறை (ஈ) | 24 | 48 | 36 | (118) | 10 |
| சேவைத்துறை (உ) | 4 | 4 | 2 | -- | (10) |
| உற்பத்தித்துறைகளுக்கான மேந்தலைகள் | 63838 | 43722 | 23120 | | |

**இருபடிச் சமன்பாட்டு முறை:**

சேவை நிலையங்களின் மொத்த மேந்தலைக் கிரயத்தை ஒருங்கமை சமன்பாட்டின் மூலம் கணிப்பிட்டு குறிப்பிட்ட வீதங்களில் மீள்பகிர்வு மேற்கொள்ளப்படுவது இதுவாகும்.

**உதாரணம் :** ஒரு நிறுவனத்தின் மேந்தலை விபரம் வருமாறு

| உற்பத்தித்துறை | | சேவைத்துறை | |
|---|---|---|---|
| அ. | 60000 | ஈ | 4680 |
| ஆ. | 40000 | உ | 6000 |
| இ. | 20000 | | |

| | அ | ஆ | இ | ஈ | உ |
|---|---|---|---|---|---|
| சேவைத்துறை (ஈ) | 20% | 40% | 30% | - | 10% |
| சேவைத்துறை (உ) | 40% | 20% | 20% | 20% | - |

சேவைத்துறை 'ஈ' யின் மொத்த மேந்தலை கிரயம் X எனக
சேவைத்துறை 'உ' யின் மொத்த மேந்தலை கிரயம் Y எனக

$$X = 4680 + 0.2Y \longrightarrow (1)$$
$$Y = 6000 + 0.1X \longrightarrow (2)$$

(1) இல் (2) ஐப் பிரதியிட்டால்

$$X = 4680 + 0.2(6000 + 0.1X)$$
$$X = 4680 + 1200 + 0.02X$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$X - 0.02X = 5880$

$0.98X = 5880$

$X = \frac{5880}{0.98}$

$= 6000$

X = 6000 என்பதை இல் பிரதியிட்டால்

$Y = 6000 + (0.1 \times 6000)$

$= 6000 + 600$

$= 6600$

$X = 6000$

$Y = 6600$

**மேந்தலைக் கிரய பகிர்வுக் கூற்று**

| விபரம் | உற்பத்திபகுதி | | | சேவைப்பகுதி | |
|---|---|---|---|---|---|
| | அ | ஆ | இ | ஈ | உ |
| 1ம் கட்ட பகிர்வு | 60000 | 40000 | 20000 | 4680 | 6000 |
| சேவைத்துறை (ஈ) | 1200 | 2400 | 1800 | (6000) | 600 |
| சேவைத்துறை (உ) | 2640 | 1320 | 1320 | 1320 | (6600) |
| | 63840 | 43720 | 23120 | 0 | 0 |

**மேந்தலை உள்ளடக்கம் / உறிஞ்சல் / ஈாப்பு**

உற்பத்தி நிலையங்களுக்குரிய மொத்த மேந்தலைச் செலவுகளை அவ்வுற்பத்தி நிலையங்களால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி அலகுகளிற்கு ஓர் நியாயமான அடிப்படையில் சாட்டுதல் செய்தலே மேந்தலை உள்ளடக்கம் எனப்படும். சேவை நிலையங்களின் செலவுகளை உற்பத்திச் செலவு நிலையங்களுக்கிடையில் பகிர்ந்தளித்த பின்னரே இத்தகைய சாட்டுதல் இடம் பெறும்.

இம் மேந்தலைகள் உள்ளடக்கப்படுவதற்குப் பொதுவாக பின்வரும் முறைகள் பின்பற்றப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நேர்ஊழிய மணிவீத முறை = $\frac{\text{திட்டமிடப்பட்ட மேந்தலை}}{\text{திட்டமிடப்பட்ட ஊழிய மணி}}$

2. நேர்க்கூலிச் செலவு முறை = $\frac{\text{திட்டமிடப்பட்ட மேந்தலை}}{\text{திட்டமிடப்பட்ட கூலி}}$

3. நேர் மூலப்பொருட் செலவு = $\frac{\text{திட்டமிடப்பட்ட மேந்தலை}}{\text{திட்டமிடப்பட்ட மூலப்பொருள்}}$

4. மூலச் செலவு அடிப்படை = $\frac{\text{திட்டமிடப்பட்ட மேந்தலை}}{\text{திட்டமிடப்பட்ட மூலச்செலவு}}$

5. இயந்திர மணிவீதமுறை = $\frac{\text{திட்டமிடப்பட்ட மேந்தலை}}{\text{திட்டமிடப்பட்ட இயந்திர மணித்தியாலம்}}$

6. உற்பத்தி அலகு முறை = $\frac{\text{திட்டமிடப்பட்ட மேந்தலை}}{\text{திட்டமிடப்பட்ட உற்பத்தி அலகு}}$

உறிஞ்சுதல் விகிதம் மூலம் ஒரு அலகுக்கான மேந்தலையைக் கணிப்பிட முடிகிறது.

**மிகை உறிஞ்சுதல் :**

உறிஞ்சுதல் விகிதத்திற்கேற்ப கணிப்பிடப்படும் மேந்தலை கிரயம் உண்மை மேந்தலைக் கிரயத்தைவிட கூடுதலாக இருப்பின் மிகை உறிஞ்சுதல் எனக் கருதப்படுகிறது.

மிகை உறிஞ்சுதல் = உறிஞ்சுதல் விகித மேந்தலை — உண்மை மேந்தலை.

**குறை உறிஞ்சுதல் :**

உறிஞ்சுதல் விகிதத்திற்கேற்ப கணிப்பிடப்படும் மேந்தலைக் கிரயம் உண்மை மேந்தலைக் கிரயத்தைவிட குறைவாக இருப்பின் குறை உறிஞ்சுதல் எனக் கருதப்படுகிறது.

குறை உறிஞ்சுதல் = உண்மை மேந்தலை — உறிஞ்சுதல் விகித மேந்தலை

**உசாத்துணை**

1. அடிப்படைக் கிரயவியல் - D.SAM
2. கிரயக் கணக்கீடு கூலிக்கிரயம் - மேந்தலைக்கிரயம் குமாரசுவாமி கலைச்செல்வன்
3. கிரயக் கணக்கியலும் முகாமைக் கணக்கியலும். திரு.வேல்நம்பி B.Com (Hons)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்தின் முத்தான ஜோதிக்கு எம் நல்லாசிகள்

Welcomes Tailoring

நவீன உலகின்
இளைய தலைமுறையின் நவநாகரிக முறையில்
உங்களுக்கு தேவையான சகல விதமான

❖ Trouser,
▪ Shirts,
❖ Shorts

161, 162,
Modern Market
Jaffna

Welcomes Tailoring

தைத்து கொடுப்பதில்
யாழ் நகரில் முன்னணி வகிக்கும் ஒரே ஸ்தாபனம்

# வெல்கம் ரெயிலர்ஸ்

# Welcomes Tailoring

தரணியிலே தமிழினிலே வணிகத்தின் புகழ்
கூறும் வணி ஜோதியே
ஒளிர்க வையகத்தில்

யசோ - மோட்டோர்ஸ்



நவீன உலகின் சகல விதமான

** மோட்டார் சைக்கிள்கள்,

மற்றும்

** கெல்மெட்

மற்றும்

** உதிரிப்பாகங்கள்

யசோ மோட்டோர்ஸ்

போன்றவற்றை ஒரே இடத்தில் பெறுக் கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

இல. 163. ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
T.P: 2222544

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிகஜோதி வெளியீட்டிற்கு அன்பளிப்பு செய்தோர் விபரம்

| | |
|---|---|
| திரு. B.S. பசில் ஜெனதாஸ் | 1000.00 |
| திரு.பா. வாசன் | 400.00 |
| IBS கல்வி நிலையம் | 300.00 |
| முகமெட் ரெயிலஸ் | 250.00 |
| லிங்கம் கிறீம்ஹவுஸ் | 200.00 |
| கல்யாணி கிறீம் ஹவுஸ் | 100.00 |
| அம்பிகை களஞ்சியம் | 200.00 |
| பாலவிநாயகர் | 100.00 |

✷ பொதுவிலைமட்ட அதிகரிப்பைக் கொண்டே பணவீக்கம் அளவிடப்படுவதனால் பணவீக்கத்தை **விலைவீக்கம் (Price Flation)** எனவும் அழைப்பர்.

✷ குறைந்த பணவீக்கம் தொடர்ந்து நிலவின் அது **ஊரும் / நகரும் பணவீக்கம் (Creeping onflation)** எனப்படும்.

✷ பாரிய பொருளாதாரப் பிரச்சினைக்கும் அரசியல் உறுதியின்மைக்கும் காரணமாக அமையக்கூடியதாக மிக உயர்ந்த பணவீக்க வீதம் நிலவுமாயின் அது **பாயும் பணவீக்கம்** (Hyperinflation) எனப்படும்.
உதாரணம் : 1923 ஜேர்மனியில் ஏற்பட்ட பணவீக்கம் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான வீதங்களில் விலைகள் அதிகரித்தன.

✷ உயர் பணவீக்கமும் உயர் வேலையின்மையும் எதிர்கணிய வளர்ச்சியும் (பொருளாதார வீழ்ச்சியும்) ஒருங்கே நிலவுமாயின் அது **மந்த வீக்கம் / தேக்கவீக்கம்** (Slump flation / Stagflation) எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவில்வோம் நன்றிகள்

எமது கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும் வணிகஜோதியின் இருபதாவது மலரினை வெளியீடு செய்வதற்கு பேரன்போடு உதவிய......

- இம்மலரினை வெளியிட அனுமதி அளித்து மலர் வெளியீட்டிற்கு முன்னேற்பாடுகளை செய்து உதவிய அதிபர் அவர்கட்கும்,
- ஜோதிக்கு ஆசிகள் வழங்கிய பெரியோர்க்கும்,
- புதிய பாடத்திட்டத்திற்கமைய பல்துறைசார்ந்த நவீன கருத்துக்களை பல்வேறு கோணங்களிலிருந்து சேகரித்து சிறந்த முறையில் ஒன்று திரட்டி ஆக்கங்களாக தந்துதவிய இத்துறை சார் ஆசிரியர்களுக்கும், மாணவர்-களுக்கும்,
- கடந்த 10 வருடங்களாக மன்றத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைப்பதுடன் இம் மலர் வெளியீட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கிய மன்றப் பொறுப்பாசிரியர் திரு. வே. கருணாகரன் அவர்களுக்கும்,
- நன்கொடைகள், அன்பளிப்புகள் மூலம் இம் மலர் வெளியீட்டிற்கு உதவிய கல்லூரி ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்சங்கம், நிறுவன உடமையாளர்கள் மற்றும் எம் அன்புக்குரிய சக மாணவர்களுக்கும்,
- வேண்டி போதெல்லாம் எமக்கு ஆலோசனைகள் வழங்கி இம்மலர் சிறப்பாக அமைவதற்கு உதவிய எமது கல்லூரியின் பழைய மாணவனாகிய ஆசிரியர் திரு. B.S பசில் ஜெனதாஸ், திரு. கௌரீசன், திரு. பா. வாசன் அவர்களுக்கும்,
- நம்முடன் தோளோடு தோள் நின்று இம்மலர் வெளியீட்டிற்கு அயராது உழைத்த எமது சகோதர சகோதரிகளுக்கும்,
- விளம்பரங்களை இன்முகத்துடன் தந்துதவிய அனைத்து வர்த்தகப் பெருமக்களுக்கும்,
- வணிகஜோதிக்கான அட்டைப்படத்தினை மிகச் சிறப்பாக வரைந்தும் இம்மலரினை சிறப்புற அச்சுப்பதிவு செய்தும் தந்த கங்கை ஓவ்செற் பிறின்டேர்ஸினருக்கும்,
- வணிகஜோதியின் வெளியீட்டு விழாவுக்கு பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பித்த யாழ்/ பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை தலைவர் திருமதி. தேவரஞ்சினி சிவாஸ்கரன் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ் வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. த. இராசலிங்கம் அவர்களுக்கும், நூல் வெளியீட்டை வழங்கிய யாழ் / பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் திரு.க.சிவராசா அவர்களுக்கும், நூல் அறிமுகவுரையை நிகழ்த்திய யாழ் உயர்தொழில்நுட்ப விரிவுரையாளர் திரு. வ. செந்தில்ராஜா அவர்களுக்கும், முதற்பிரதியை பெற்றுதவிய IIS இயக்குநர் திரு. K. விக்னேஸ் அவர்களுக்கும்,
- இறுதியில் எம் அழைப்பை ஏற்று விழாவைச் சிறப்பித்த எமது கல்லூரி ஆசிரியர்கள், இத்துறைசார் ஆசிரியர்கள், சக பாடசாலை மாணவர்கள், பழையமாணவர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், மற்றும் இத்துறையின் ஆர்வலர்கள் அனைவருக்கும்



எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**த. துஷ்யந்தி**
செயலாளர்
வணிக மணாவர் மன்றம்
யா / கனகரத்தினம் ம.ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக ஜோதியின்

புகழ் வானோங்க

எம் நல் வாழ்த்துக்கள்

யாழ் மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின்
சமாசம் (வ.து)

75, கோவில் வீதி
யாழ்ப்பாணம்.

T.P:
Fax: 021-2639

வணிக ஜோதிக்கு என்றென்றும்
நல்லாசிகள்

யாழ் மாவட்ட விவசாய, நுகர்ச்சிக்
கூட்டுறவுச் சங்கங்களின்
சமாசம் (வது)

111, பிரதான வீதி யாழ்ப்பாணம்
**111, Main Street**
**Jaffna**

T.P:
Fax: 021-2662



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org